பூரசோலி

பொங்கல் மலர் 1967



ஆசிரியர்

மு.கருணாநிதி

நானும் ஒருவன்

நியாய விலையில் நீடித்து உழைக்கும்


சங்கு மார்க்

லுங்கியை

மகிழ்வுடன் உடுத்தும்
பலரில் ஒருவன்!



சதுர வடிவம் சிகப்பு நிறம்
சங்கு என்ற எழுத்துக்கள்
இவைகள்தான் கைத்தறி
லுங்கிகள், கைக்குட்டைகள்
புடவைகள், சோளிகள்
உயர்தரமானவை என்று
உத்திரவாதமளிக்கின்றன



முகம்மது அபூபக்கர் கம்பெனியார்

இப்பொழுது
அறிமுகப்படுத்தும்
மற்றும் ஓர் புதிய தயாரிப்பு

கைலிகிங் அபூபக்கர்



கைலிகிங் அபூபக்கர் லுங்கிகள்,
தரமான விலையில்
பல வண்ணங்களில் கிடைக்கிறது.
வாங்குவீர் இன்றே-நீங்கள் நிச்சயமாய்
திருப்தி அடைவீர்கள்

முகம்மது அபூபக்கர் & கோ.,

95, தம்புச் செட்டித் தெரு. மதராஸ்-1

கிளைகள்: கல்கத்தா-பம்பாய்-மதுரை-கொல்லம்.

Criterion-MAB-1040T

V. M. ARUMUGAM,
NEWS AGENT,
POTHANUR.
VELUR - SALEM.
வி. எம். சுப்பிரமணியன்,



பைசன் ஷோரூம்,
மொத்தம் சில்லரை விற்பனை நிலையம்,
145, லாயிட்ஸ் ரோடு. --- சென்னை-6.

ஹெட் ஆபீஸ்:
பைசன் நிட்டிங் கம்பெனி, திருப்பூர்-4.

வாடிக்கைக்காரர்களுக்கு

எமது

பொங்கல் வாழ்த்துக்கள்!

சுதேசி டைப் பவுண்டரி,

51, குருவப்ப செட்டி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை

சென்னை--2

சிறந்த படங்களை வெளியிடும்

'ராஜகுமாரி தியேட்டர்'

நண்பர்கள் அனைவருக்கும் இப்பொங்கல் புது நாளில் எங்களுடைய மன மார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

61, தியாகராயர் ரோடு,
தி. நகர்
சென்னை - 17

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, சென்னை-1.



வீட்டிற்கோர்
நூல் நிலையம்
எங்கள் ஆங்கில
மொழிப் பாடங்கள்

ஆங்கிலம்
அறிவின் சுடர்-
அணையா
விளக்கு

வீட்டிலிருந்தபடியே...

நிறைந்த
ஆங்கில மொழி
ஞானம் பெற

குறைந்த செலவில்
அடிப்படையிலிருந்து
இலக்கண ரீதியாக

முழு விவரங்களுக்கு
உடனே 10-காசு
தபால் பில்லையுடன்
எழுதுக.

தமிழர் திருநாள் - தைப் பொங்கல் நன்னாளில்



வணக்கம்! எமது வாடிக்கையாளர்களுக்கும் தோழர்களுக்கும் என் உளங்கனிந்த வாழ்த்துக்கள் எங்களிடம் நாட்டு யூனானி மருந்துகளும், உலர்ந்த பழ தினுசுகளும், சிக்கிந்தி சர்பத், முரப்பா வகைகளும், பித்த கிழா ழம், பிரசவ சாமான்களும், குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை முதலிய சாமான்களும் மொத்தமாகவும் கிடைக்கும்.

நம்பிக்கைக்கு சிறந்த இடம்


க. சுப்ரமணியம்

நாட்டு மருந்து ஜெனரல் மெர்சண்ட்


418--419, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.




உள்ளம் கவரும் 'உமர்' நகைகள்!









"22 காரட் உமர் கோல்டு கவரிங் நகைகள், கன்சுமர் டிசைன்களில், வேண்டாதபோது திரும்பக் கொடுத்துப் பாதிப்பணம் பெறும் நிபந்தனையுடன் கிடைக்கிறது."

படவிலைப் பட்டியல் வேண்டுவோர் 20பை. தபால் தலையுடன் எழுதவும்.

ஆர்டருடன் ரூ. 2/- முன் பணம் அனுப்பவும்.

சென்னை வாசிகளுக்கு மாதத்தவணைகளில் பெற வசதி.

உம்மா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

552, பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5

எங்கள் மனமார்ந்த பொங்கல் வாழ்த்துகள்

சிறந்த ஜவுளிக் கடை

★

எங்கள் சொந்த தறியில் தயார் செய்த

பட்டுச் சரிகைச் சேலைகள், நூல் & மில்

ஜவுளிகள் வாங்க சிறந்த இடம்

கற்பகம் & கோ.,

177, காந்தி ரோடு, ○ காஞ்சீபுரம் *

பொங்கல் வாழ்த்துக்கள்

உங்களது ஆதரவு! எங்களது சேவை!!
உங்கள் இல்லம்! கட்டிடங்கள்!!
கவரச்சியுடன் காண!

உயர்தரமான பல வண்ண மொசாயிக் டைல்ஸ், டேபிள் டாப்ஸ், சிங், பாத் டாப், 'சூர்யாசம்' சிமிண்டு வாட்டர் பெயிண்டு முதலியவைகள் சென்னையிலும் வெளியூர்களிலும் ஆர்டரின் பேரில் குறித்த நேரத்திலும் குறைந்த செலவிலும் செய்துதரப்படும்.

தயாரிப்பாளர்:

"சூர்யா சிமிண்டு டைல்ஸ்"

நம்பர். 1, சிவன் கோவில் முதல்கிராஸ் தெரு,
தோடம்பாக்கம்
சென்னை-24.

தங்க கவரிங் நகைகளும், வெள்ளி பிளிகிரி நகைகளும். வெள்ளி குந்தன் நகைகளும் இமிடேசன் நகைகளும் கிடைக்கும்.

★

களஞ்சியம் பிரதர்ஸ்

14, சைனுபஜார்
சென்னை-1.

போன்: 34615

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்துகள்

Tel: "THASBI" USE ALWAYS Phone: 23379

Gemini

LUNGIES & HANDKERCHIEVES



ஜெமினி லுங்கி கோ

1/15, ராமசாமி தெரு, மதராஸ்-1.

சில்லரையில் இடைக்குமிடம்:


1. ராதா சில்க் எம்போரியம்
'தள் பில்டிங்'
மவுண்ட்ரோடு, சென்னை-2.

2. ஸ்ரீராம் டெக்ஸ்டைல்ஸ் கோ.
2, தம்புசெட்டி தெரு,
சென்னை-1.

வெளியூர் ஆர்டர்களை
உடனடியாக
அனுப்பி வைக்கப்படும்.

ஜீவன்டோன்

Govt. Regd. No: 218726



பத்திரிகைகளில் வரும் பல மருந்துகளை வாங்கி சாப்பிட்டு பலன் ஏதும் கிடைக்காதவர்கள் பலருண்டு. அவர்கள் "ஜீவன்டோன்" என்ற ஆயுர்வேத முறையில தயாரிக்கப்பட்ட அற்புதமான டானிக வாங்கி சாப்பிட்டு சர்வ பலனையும் அடையலாம். இதில் கூறியுள்ள வியாதிகளுக்கு மட்டுமே இம் மருந்து நிவாரணம் அளிக்கும். "ஜீவன்டோனில்" மிருகக் கொழுப்பு சேர்ந்திருப்பதால்தான் சீக்கிரமாக நல்ல புஷ்டியும் எடையும் தருகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால்அது சரவில்லை.

ஆரோக்கியமில்லாமல் எலும்பும் தோலுமாக உள்ள ஆயிரக் கணக்கான மக்களுக்கு "ஜீவன் டோன்" நாளுக்குநாள் நல்லபருமனையும் எடையையும் சுமுகமளித்துவருகிறது.

ஜீவன்டோனின் பலன்

எவ்வளவு நல்ல உணவு உட்கொண்ட போதிலும உடம்பில் சதைபிடிக்காதிருந்தால், வளர்ச்சி இல்லாமை, சோர்வு, இளமைமாறி முதுமையுடன் காட்சி அளிப்பது, சிற்றின்பம், மது அருந்துதல் மூலம் உடல் கெடுதல, இரத்தம் குறைந்து தலை சுற்றல், கை கால் ஒய்ச்சல், சக்தி குறைவு, உணவுபிடிக்காமை, கெட்ட நடத்தையால் உடல்மெலிதல், ஜீரணம் இல்லாமை, உணர்ச்சி இல்லாமை, மயக்கம், முதலியவைகளைத் தீவிரமாகப் போக்கி அற்புதமான குணமளிப்பதுதான் "ஜீவன்டோன்" சிறிது நாட்கள் இதை சாப்பிட்டுவந்தால் சீக்கிரம் பருமனும் எடையும் கிடைப்பது உறுதி, தேவையான எடையும் பருமனும் கிடைத்துவிட்டால் தொடர்ந்து சாப்பிடுவதைநிறுத்திவிடலாம், சிவந்த நிறத்தை அடைய "ஜீவன்டோன்" சாப்பிடும் நாடகளில் தக்காளிப்பழம் சாப்பிட வேண்டும்.

450 கிராம் (1 பவுண்டு) ரூ. 10-00

தோல் வியாதிகளுக்கு; ஸ்கின் லீம்ஸ்

டாக்டர் தாமோதரன் எம்.ஏ.ஐ.ஈ.டி எஸ்.

மானேஜர்

ஜோதி ஆஸ்பிடல்,

32, வெங்கடநாராயணரோடு, த பெ.எண்.1413 சென்னை-17

35 ஆண்டுகளாக
புகழ்பெற்று விளங்குவது

22 Ct

தியாகராஜா


கோல்டு கவரிங் ஓர்க்ஸ்.





















அணிந்த உடல் ஜொலிக்கும்!
பார்த்த கண்கள் களிக்கும்!











தியாகராஜா

தங்க கவரிங் நகைகள்
77, N.S.C. போஸ் ரோடு, சென்னை-1.
கேட்லாக் வேண்டுவோர் 25 NP ஸ்டாம் அனுப்பவும்

PARAMOUNT





போர்க் களத்தில் ஒரு மலர்!

இந்த ஆண்டுப் பொங்கல்,
நம் உடன் பிறப்பாம் எம் ஜி. ஆர். அவர்களைச்
சூழ்ந்து கொண்ட பேரபாயம் விலகியது என்ற
பெருமகிழ்ச்சியோடு ஆரம்பமாகிறது.

தமிழக மக்களே நூற்றுக்கணக்கில் சுட்டு வீழ்த்திய கொடுமைக்கும்

மக்கள் நல்ல தீர்ப்பு வழங்கக் காத்திருக்கிறார்கள்;
நாட்களை எண்ணிக் கொண்டு!
ஒவ்வொரு நாளும் உதயமாகும் சூரியனைப் பார்த்துப் பார்த்து
நம்பிக்கை கலந்த உள்ளத்தில்
எதிர்காலத்தைப்பற்றிய இன்ப நினைவுடன்
தமிழ்ப் பெருங்குடிமக்கள் உலவிக் கொண்டிருக்கிறார்கள்.
அந்த நன்னம்பிக்கையில் பூத்த மலராக
இந்த ஆண்டு முரசொலி பொங்கல் மலர் வெளிவருகிறது.
மணம் பரப்புகிறது!

அண்ணன் எழுதியுள்ள வாழ்த்துரையைக் கூர்ந்து படியுங்கள்;
தெளிவு ஏற்படும்.


இந்த மலர் என் கைபடாதது!

இதன் முழுவெற்றிக்கு அன்புத்தம்பி செல்வம்,
அருமை நண்பர்கள் அடியார், தினகரன், ஜெகதீசனும்
உதயசூரியன் உதிக்கிறான்-ஏழைக்கு வாழ்வளிக்கும்
கரம் கழகக்கரம் என்பதைச் சித்தரிக்கும் வண்ண
முகப்பை வரைந்து அளித்த,
ஓவிய மன்னர் மாதவன்,

நமது ஓவிய நண்பர் செல்லப்பன்-சோமு
ஆகியோரே காரணம்.
ஜனநாயகப் போர்க்களத்தில்
நீங்கள் கொட்டும் முரசவாத்தியத்தை
இந்த மலர் அலங்கரிக்கட்டும்.

அன்புள்ள





ஓ. எம். கப்பிரமணியன்,

வாழ்வு ஒரு திருநாள் ஆகும் நாள் எந்நாள்?

எங்கு செல்கிறோம், எவ்வழி நடக்கிறோம் என்ற விளக்கம் பெறாளட்டாத நிலையில், நடந்திடும் போது, இந்தப்பாதை வழி சென்றிடில் இத்தனைக் கல் தொலைவில் ரூர் இருக்கிறது என்று எடுத்துக் காட்டும் அறிவிப்புப் பலகை தென்படின், ஓர் மகிழ்ச்சி பெறுகின்றோம்.

காரிருள்! பொருளின் வடிவும் வகையும் தெரிந்து கொண்டிட இயலவில்லை. மேடு எது, பள்ளம் எது, பாம்பு எது பழுதை எது என்று புரிந்து கொள்ளமுடியவில்லை. அந்நிலையில் ஓர் ஒளிவிளக்குத் தந்திடில், எத்துணை மகிழ்ச்சி பெறுகின்றோம்!

கோடை கொளுத்துகிறது! உச்சி பொத்து விடுமோ என்று அச்சத் தக்க நிலை! வியர்வை கொட்டுகிறது! கண்களிலே ஓர் எரிச்சல்! அந்நிலையில் பூங்காற்று வீசிடின், எத்தகைய மகிழ்ச்சி கொள்கின்றோம்!

மேலேமேலே வெள்ளம்! சுழல்! நீந்தி நீந்திக் கைகால் சோர்ந்துபோய் விடுகிறது! இனி முடியாது—எல்லாம் தீர்ந்து விட்டது என்ற நிலை! அந்தச் சமயம் ஓர் 'தெப்பக் கட்டை' கிடைத்தால் எப்படியிருக்கும் அந்த மகிழ்ச்சி!

தங்கத்தால் செய்து வைரம் இழைக்கப்பட்டதாக ஒரு தெப்பக்கட்டையைப் பிறகோர் நாள் பரிசாக அளித்தால் பெறக்கூடிய மகிழ்ச்சி. வெள்ளத்தில் மூழ்கி விடாமல் உயிர் தப்புவதற்குப் பயன்படும் சாதாரண மரக்கட்டை கிடைத்தபோது ஏற்படும் மகிழ்ச்சியிலே பதினாயிரத்திலே ஒரு பங்கு கூட இருந்திட முடியாது-

நெஞ்சை அக்கம் தூக்கிறது! ஓயாத தொல்லைகாரணமாக மனம் உலையிட்ட தரும்பாகிறது! அந்தச் சமயத்தில், எங்கிருந்தோ குழலோசை கேட்கிறது. துயரம் கப்பிக் கொண்டிருக்கும் நிலையிலும் அந்த இசை இனிமை தருகிறதல்லவா?

வறுமைப் பிடியிலே சிக்கி, வாழ்வு பெரும்சுமை என்கிற பெருமூச்செறிந்தும், விம்மிக் கொண்டும், கண்கலங்கிக் கசக்கிக் கொண்டும், கையைப் பிசைந்து கொண்டும் உள்ள நிலையில், உள்ளமக்களுக்கு, ஆண்டுக்கு, ஓர்முறை கிடைத்

- அறிஞர் அண்ணா

திரும் பொங்கற் புதுநாள் எனும் விழா. அதுபோன்றதோர் மகிழ்ச்சியை, இன்பத்தை, இனிமையைத் தந்து வருகிறது.

ஆனால் ஒருநாள் திருநாள்; மற்றைய நாட்கள் திகைப்புத் தந்திடும் நாட்கள் என்ற நிலைக்கப்பிக் கொண்டுள்ள மட்டும், மகிழ்ச்சி நிலையானதாக, முழுவளவினதாக, முழுப் பொருள் தருவதாக இருந்திடமுடியாது.

எனவேதான், மக்களின் வாழ்வு நிம்மதி தருவதாக அமைய வேண்டும் என்று ஆன்றோர் கூறினர்.

நாட்டுக்கே இலக்கணம் வகுத்தளித்த வள்ளுவப் பெருந்தகை,

"உறுபசியும் ஓவாப்
பிணியும்
செறுபகையும் சேராதமைவது
நாடு" என்றார்,

வள்ளுவர் எவை எவை கூடாதென்றுரைத்தாரோ, அவைகளின் பிடியிலே இக்கி நாடு இன்று சீரழிகிறது, மக்கள் அல்லற்படுகின்றனர்.

இந்நிலையை ஒருநாள் மறந்திருக்கச் செய்திடும் திருநாளன்று—இது போதும் என்ற மனநிறைவு பெற்றிடமுடியாது. பெற்றிட முனைவது பேதையர் செயலாகும்.

எனவே நாடு வளம்பெற, மக்கள் நல்வாழ்வு பெற, திட்டமிட்டுப் பணியாற்றிடும் ஓர் நல்லரசு தேவை என்ற உணர்வும், அதனை வேறு யாரோ ஆக்கி நமக்கு அளித்திடுவர் என்று எண்ணிக் கொள்ளாமல், அதனை ஆக்கிடும் கடமை நம் முடையது என்ற பொறுப்புணர்ச்சியும், முயன்றால் முடியும் என்ற நம்பிக்கையும், அதற்கேற்ற செயலார்வமும், கூடிப் பணியாற்றும் திட்டமும், ஒவ்வொருவரும் பெற்றிட விழா நாள் பயன்பட வேண்டும்.

அக்ரமம் அழிக்கப்பட்டு நீதி நிலை நாட்டப்பட்டு, வளம் பெருக்கப்பட்டு வன்கணுளர் கொட்டம் அடக்கப்பட்டு எல்லோரும் இன்புற்று இருந்திடும் நெறிகடைப் பிடிக்கப்பட்டு, மக்களின் பொதுநலன் பாதுகாக்கப்படவேண்டும்; அந்தப் புனிதப் பணியிலே நமது பங்கினைச் செலுத்தவே, நமது அறிவாற்றல், வாக்குரிமை வாய்ப்பு பயன்படவேண்டும் என்ற உறுதியினை விழா நாளன்று பெற்றிட வேண்டும்.

தாயவனின் உடலிலிருந்து ஒரு சொட்டு ரத்தம் சிந்திடின், ஒரு கோடி மக்களின் கண்களிலே நீர் கொட்டுகிறது, காரணம்? நமக்காக, நாட்டுக்காக, நல்லதற்காக வாழ்பவர் வாழ்ந்திட வேண்டும் என்ற உணர்வு.

இன்று கண்ணீர் சிந்திடும் உழைப்பாளியைக் கண்டும் பன்னீரில் குளித்து மகிழ்ந்திடும் ஒரு சிலர் இருந்திடக்காண்கின்றோம்.

அக்ரமம் ஆர்ப்பரிக்கிறது அதனை இசையாக கொண்டிடுக என்று அரசு சட்டமியற்றிடுகிறது சமாதானம் கொக்கரிக்கிறது. அதனை காட்டிவலை வுன்னோன்வாழ்வான் என்று வட்டுப் பேச்சு பேசுகின்றனர் சிலர்!

இல்லை! இல்லை! அக்ரமம் அழிந்து படத்தான் வேண்டும்! என்று முழக்கம் எழுப்பிட முன் வந்தது ஒரு சிறு படை! அது நாளாக நாளாக வளர்ந்தது, வளர்ந்தது, வளர்ந்து கொண்டே இருக்கிறது! அந்தப்படையின் துணை கொண்டு, அதனை அழித்து நல்லரசு காணமுடியும் என்ற நம்பிக்கையை நாடுபெற்றுள்ளது. நல்வாழ்த்துக்கூறி வரவேற்கின்றது.

கதிரவன் உதிப்பான் காரிருள் கழியும் என்று நாடு கூறுகிறது, நம்பிக்கையுடன்

அந்த நம்பிக்கையை எழச் செய்த பெருமை, நமது கழகத்திற்கு உண்டு!

இன்றைய விழா நாள் நாம் நமக்காக அல்ல, நாட்டுக்காக!... என்ற உணர்வு மேலோங்க வேண்டும். தூய்மை செம்மைப்பட வேண்டும்.

இந்த என் விருப்பத்தை உமக்கு வழங்குவதில் மகிழ்கின்றேன். உதய சூரியன் எழுகிறது, நல்லரசு அமைகிறது. என்ற பண் எங்கும் எழுந்து இனிமைதருகிறது. அந்தப் பண் பாடிடும் தோழர்கள் ஆண்டுக்கு ஒரு நாள் திருநாள் என்று மட்டும் இன்று உள்ள நிலையை மாற்றி, வாழ்வு ஒரு திருநாள் என்ற நிலை அமைந்திடப்பாடுபடுவர் என்ற எண்ணம் தேனாக இனிக்கிறது, மலராக மணம் தருகிறது. மகிழ்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

அண்ணன்,

அண்ணாதுரை


20 ஆண்டுகாலமாய் ஆண்டபின்னும்



எண்ணெய் இல்லாததலை




விளக்கில்லாத வீடு




பூனை பழக்கும் அமுப்பு
எலி
எலி தாக்கினம்


வறுமை
வேலையில்லாத் திண்டாட்டம்
வேலை காலி இல்லை
துப்பாக்கிப் பிரயோகம்


நியாயம் கேட்டால் சிறை
இவ்வளவும் செய்துவிட்டு
எப்படித் தப்பிச்சயோம்
ஓட்டம்
ஓட்டம்
ஓட்டுக்கு
நோட்டுக் கொடுக்க
வருகிறார்கள்!



துன்பம் தீர்க்கும் கூட்டணி

நல்ல பொங்கல் நாளில் படிக்க வேண்டிய முரசொலி பொங்கல் மலரில் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயங்கள் நிறைய இருத்தல் நலம்.

இப்போது யார் பேரிலும் துவேஷம் வேண்டாம். பொங்கலுக்குப் பிறகு அரசியல் விஷயங்களை எல்லோரும் நன்றாக கவனித்து வேலை செய்வோமாக.

கூட்டணியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால்-யமுனை, கங்கை, மறைந்து ஓடும் சரஸ்வதி இந்த மூன்று நதிகளும் கூடும் இடம் பரயாக் என்ற புண்ணிய நதியாகும். அதில் குளித்தால் துன்பங்கள் நீங்கும் என்பார்கள்—அதைப் போலவேதான் இந்தக் கூட்டணியும். இதை யார் வேண்டாம் என்பார்கள்.

—ராஜ்ஜி

- கூட்டணி பற்றி கருத்து-
- 67 க்குப் பின் நாட்டின் நிலை-
- மக்கள் கடமை என்ன?

இது போன்ற கேள்விகளை கூட்டணித் தலைவர்களிடம் எழுப்பியபோது அவர்கள்

அளித்துள்ள சிறப்பான பதில்களை இங்கே தொகுத்துத் தந்துள்ளோம்



ம. பொ. சி.

நான் 1927ல் பொது வாழ்வில் புகுந்தேன். கடந்த 40 ஆண்டு காலமாக ஊழியமில்லாத முழுநேர ஊழியனாக நாட்டுக்குப் பணிபுரிந்து வருகிறேன். தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் பெருந்தலைவர்களை அனைவரிடமும் தனிப்பட்ட முறையில் யான் அன்பு செலுத்துபவன். அப்படியே அவர்களுடைய அன்புக்கும் பாத்திரமானவன் என்றே என்னையான் கருதிக் கொள்கிறேன்.

ஆனால் கொள்கைகளிலே நான் மகா வைதிகன். அந்த வகையிலே தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளோடும் — தலைவர்களோடும் கடந்த காலத்தில் நான் கருத்துப் போர் நடத்தி வந்திருக்கிறேன். இன்று தமிழரசுக் கழகம் கூட்டுச் சேர்ந்துள்ள தி.மு.க. கழகத்தோடும், அதன் பெருந் தலைவர் அண்ணாவோடும் நான் கடுமையான கருத்துப் போர் நடத்தியிருக்கிறேன்.

ஆனால் அது இன்று நட்பாக மாறியிருக்கிறது. "சண்டை போடத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது, சமாதானம் செய்து கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும். அவன் தான் சத்தியாக்கிரகி" என்றார் காந்தியடிகள். நான் தி. மு. க. வுடன் கொள்கைக்காகத்தான் போராடினேன். இன்றும் நாட்டு மக்களுக்கு நலம்தரும் சில கொள்கைகளுக்காகவே அவர்களுடன் கூட்டு சேர்ந்திருக்கிறேன்—இதிலே என் தனிப்பட்ட லாபம் கலந்திருக்கவில்லை.

தி. மு. கழகம் தமிழகத்தின் பிரதான எதிர்க் கட்சியாக விளங்குகிறது. என் போன்றவர்களின் கடுமையான எதிர்ப்புகளையும் சமாளித்து வாக்காளர்களிடம் பெற்ற பேராதரவாலேயே அது எதிர்க்கட்சியாக ஆகியிருக்கிறது.

தி. மு. கழகத்திடம் தொகுதி உடன்பாடுகாண அடிப்படையாக அமைந்த விஷயம் இதுதான்: ஒரு எதிர்கட்சிக்கு-எதிர்கட்சியாக இன்னொரு கட்சி இயங்குவது ஒழுங்கு முறையான அரசியல் ஆகாது. ஒரு எதிர்க் கட்சி ஆளும் கட்சிக்குத்தான் எதிர்கட்சியாக இருக்க முடியும். எதிர்க் கட்சிக்கே எதிர் கட்சியாக இயங்குவது முறை ஆகாது.

தொகுதி உடன் பாடு காணும் விஷயத்தில்—தி. மு. கழகம் முன்கை கொடுத்து சகோதர எதிர்க்கட்சிகளை அணைத்துக் கொண்டது. இதிலே தன் கொள்கைகள் எதையும் தி. மு. கழகம் விட்டு விடவில்லை. தன்னுடன் கூட்டுச் சேரும் கட்சிகளையும் தத்தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கோரவில்லை.

காங்கிரஸ் தலைவர் திரு காமராசர், கூட்டணி அமைந்ததை ஒரு கிரிமினல் குற்றம் போலப் பேசுகிறார்—அது தற்காப்பு வாதம்! ஆனால் கூட்டணி அமைந்ததனை தமிழக வாக்காளர்கள் வரவேற்றிருக்கிறார்கள் என்பது அடுத்த பிப்ரவரி மாத இறுதிக்குள் தெரிந்து விடும்.

கூட்டணியினர் வெற்றி பெற்றால் நிலையான ஆட்சி அமையாது என்கிறார் திரு காமராசர். பகைவனிடம் பஞ்சாங்கம் சென்ற காலத்தில் செய்த தவறை இன்றைக்கு உணர்ந்து — எதுபிரதானம்

கூட்டணி அமைத்தது கிரிமினல் குற்றமா?

கொடுத்து மரணத்திற்குரிய நாளைத் தெரிந்து கொள்ள முயல்வது மடத்தனமாகும். கூட்டணி அரசியல் பற்றி காமராசரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள நான் அப்பாவியல்ல!

இலங்கையிலே பல கட்சிகள் சேர்ந்த கூட்டணி ஆட்சிதான் இன்று நடக்கிறது. முன்னிருந்த திருமதி சிறிமாவோ ஆட்சியில் கூட ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளின் கூட்டாட்சி தான் இருந்தது. இலங்கையை விடவும் நல்ல உதாரணமாக விளங்குகிறது மலேசியாவில் உள்ள கூட்டணி ஆட்சி. அங்கு மூன்றுக்கு மேற் பட்ட கட்சிகள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி நடத்துகின்றன. அந்தக் கூட்டணி தமிழகத்தில் அமைந்துள்ள கூட்டணியை விடப் புதுமையானது என்று சொல்லலாம். மொழியாலும், மதத்தாலும் தனித்து விளங்கும் மலாயாக்காரர்கள்—சீனர்கள்—இந்தியர்கள் ஆகிய மூன்று மொழியினர், மூன்று இனத்தினர், மூன்று மதத்தினர், மூவேறு கொள்கையுடையவர்கள்–இருந்தும் கூட்டணி அமைத்துள்ளனர்.

இவர்கள் பொதுத்தேர்தலில்-கூட்டணி அமைப்பிலேயே வாக்காளர்களை அணுகி வெற்றியடைந்து அமைதியான சூழ்நிலையில் ஆட்சி நடத்தி வருகின்றனர். எதை விடவும் சிக்கலற்றது—தமிழகத்தின் கூட்டணி: இந்தக் கூட்டணியில் சேர்ந்துள்ள கட்சிகள் மொழியாலும், இனத்தாலும் ஒரே அச்சுப் போன்றவர்கள். ஆகவே நாளை கூட்டணி ஆட்சி அமையுமானால் அரசியல் சட்டம் தரும் உரிமைப் படி ஐந்தாண்டு காலம் அது நீடிக்க முடியும்.

ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்லுகிறேன். பொதுத் தேர்தல் முடிந்த ஒன்னரை ஆண்டுக்குள் காங்கிரஸ் கட்சி அந்தக் கட்சியினராலேயே கலைக்கப்பட்டு விடும். ஆம்! உட்பூசலே அதன் உயிருக்கு உலைவைத்துவிடும். அகில இந்திய ரீதியில் காமராஜரின் தலைமை நீடிப்பதற்கும் நிலை பெறுவதற்கும் வடக்கில் உள்ளவர்கள் காட்டிவரும் எதிர்ப்பு, வெற்றி பெறுமானால்—அகில இந்தியக் காங்கிரசிடமிருந்து தமிழகத்தைத் துண்டித்து விடவும் துணிந்து விடுவார் காமராஜர்.

நான் கூறும் இந்தக் கருத்துக்கள் என் அனுமானத்திலிருந்து பிறந்தவை.


எதிர்க்கட்சிகளுடன் உடன்பாடு காணும்முயற்சி பெருமளவு வெற்றி பெற்றதற்கு என் பெருமதிப்பிற்குரிய இனிய நண்பர் அறிஞர் அண்ணாத்துரை காட்டிய இணக்கமான மனப் போக்கும், பொறுமையும், விட்டுக் கொடுக்கும் தன்மையுந்தான் முக்கிய காரணங்களாகும்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் நலன்களுக்குப் பாடுபட்டுப் பயிற்சி பெற்றவர்கள்—மத்திய தர வர்க்கத்தில் தோன்றி வளர்ந்த அரசியல்வாதிகள் தான் கூட்டணியின் முதுகெலும்பாகவும்—பக்க எலும்புகளாகவும் அமைந்துள்ளனர். அதனால் அவர்களிடையே உறுதியாகருத்து ஒருமைப்பாடு நிலவும்.

இதற்கு முன்மாதிரியாக எதுவும் இந்த மாநிலத்து வரலாற்றில் நிகழவில்லை. ஆதலால் காமராஜர் ஐயப்படுகிறார். எதிர்காலம் அவரது ஐயத்தைப் பொய்யாக்கி விடும்.

பிரதமர் இந்திரா தமிழகம் வந்து போனதுவெறும்சம்பிரதாயச் சடங்குதான். அவரது பேச்சிலே காங்கிரசின்பாற் நல் லெண்ணமோ—அந்தக் கட்சி வெற்றியடையும் என்ற நம்பிக்கையோ பிரதிபலிக்க வில்லை. தமிழகத்தில் காங்கிரஸ் தோல்வியடைந்தால் அவர் கவலைப்பட மாட்டார் என்பது அவரின் உற்சாகமிழந்த பேச்சில் தென்படுகிறது. ஆகையால் தமிழகத்தில் அமைந்துள்ள இந்தக் கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.





ஆதீத்தனர்

பிப்ரவரியில் நடைபெற்று முடியப் போகும் தேர்தலில் இந்தக் கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் — இதில் கூட்டணியில் உள்ள எந்தக் கட்சிக்கும் ஐயப்பாடு இல்லை.

காங்கிரஸ் கட்சி மாற்றப்படவேண்டும் என்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தாலும்—முதல் முக்கியமான காரணம் 20 ஆண்டு காலமாக ஒரே கட்சி ஆட்சியிலிருப்பது அந்தக் கட்சிக்கு சர்வாதிகாரமனப்பான்மையை ஏற்படுத்தி விடும். ஒரு தனி மனிதனின் சர்வாதிகாரம் எப்படி மோசமானதோ — அது போல ஒரே கட்சியினுடைய ஆட்சிகூடிப் பது தனிமனித சர்வாதிகாரம் போன்றது தான்.

ஆளும்கட்சி எதிர்க்கட்சியாக மாறுவதும், எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாக மாறுவதும் நலிந்து போயிருக்கும் ஜனநாயகத்துக்கு நல்ல வைத்தியமாகும். காங்கிரஸ் எதிர்க்கட்சியாக வருவது காங்கிரசுக்கே நல்லது.

ஒரு கட்சியான காங்கிரசே சீரான நிர்வாகத்தை நடத்த முடியாதபோது— கூட்டணிக்கட்சி எப்படி ஆட்சி செய்ய முடியுமென்று அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜர் பேசியிருக்கிறார். உலக வரலாறு படிக்காததின் குற்றம்தான் இப்படியெல்லாம் பேசுவது.

1931ல் முதன் முறையாக இங்கிலாந்தில் மெக்டொனால்டு தலைமையில் கூட்டாட்சிதான் அமைந்தது. கன்சர்வேட்டிவ் கையிலிருந்த ஆட்சி-அதற்குப் பின்னர்தான் தொழிற்கட்சியின் கைக்கு வந்தது. இந்த 1967 தேர்தலிலே எதிர்க்கட்சிகளின் ஒட்டுகள் சிதறுமல் இருப்பதற்கு தி. மு. கழகத்தின் தலைவரே முன்னின்று இந்தக் கூட்டணியை அமைத்திருப்பது, தமிழக அரசியலில் ஒருவெற்றியாகும். இது இலகுவான காரியமல்ல—பலதரப்பட்ட கருத்துக்கள் உடையவர்களை ஒரே அணியில் சேர்க்க வேண்டுமானால்பொறுமை, சகிப்புத்தன்மைதேவைப்படும். ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கு அதிகமான இடங்கள் தேவை என்று வாதிட்டபோது அறிஞர் அண்ணா அவர்கள் புன்னகையோடு காட்டிய பொறுமைதான் இறுதி வெற்றியைக் கொடுத்தது.

இந்தக் கூட்டணி-ஆட்சி செய்யமுடியாது என்று கூறுவது அறியாமையாகும். இன்றைக்கு மேற்கு ஜெர்மனி நாட்டை ஆளுவது கூட்டாட்சிதான், பிரான்சிலும் கூட்டாட்சிதான் — அருகில் உள்ள இலங்கையிலும்கூட்டாட்சிதான்-உலகில் கூட்டாட்சி நடைபெறாத நாடே கிடையாது. கூட்டாட்சி சர்வசாதாரணமாக நடைபெறக்கூடியது இதைப் பெரிது படுத்தி பயமுறுத்துவானேன்?

காமராசர்தான் இப்படிப்பேசுகிறார் என்றால்—அவரைவிட ஒருபடி மேலே சென்றுபேசியிருக்கிறார்கள் இந்திராகாந்தி அம்மையார் — அதாவது "எதிர்க்கட்சிகளுக்கு ஆளும் தகுதியில்லை" என்று-

ஆளுகின்ற கட்சி எப்போதும் சொல்லுகிறவாதம் அதுதான். வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆளுகின்றபோது-காங்கிரசுக்கு ஆளும் தகுதியில்லையென்றுதான்சொன்னான். அதைத்தான் இப்போது இவர்கள்கூறுகிறார்கள்.

ரயில் வண்டியில் முதலில் இடம் பிடித்துக்கொண்டவர்கள் பின்னால் வருபவர்களுக்கு இடமில்லை என்று கூறுவது போல இப்போது ஆளுகின்றவர்களும் அப்படித்தான் விநோதமான முறையில்

ஜனநாயகத்துக்கு நல்ல மருந்து

பேசி வருகிறார்கள். ஏன் இப்படிப் பேசி வருகிறார்கள் என்றால் காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே இருக்கிற குழப்பத்தை மூடி மறைக்கத்தான்! இந்திரா காந்தியின் சுற்றுப்பயணமே இதற்குச் சான்று.

காங்கிரஸ் கட்சியிலேயே—இந்திரா காந்தி—மொரார்ஜி தேசாய்—காமராஜர்-இவர்களுக்குள்ளே இருக்கின்ற போட்டியின் காரணமாக மூன்று பேர்களும்—எல்லா மாநிலங்களிலும்–தனித்தனியாக சுற்றுப்பயணம் செய்து பலம் தேடிக் கொள்ளுகிறார்கள். அதையொட்டித்தான் தமிழகக் காங்கிரஸ் கட்சிக்குள் பலம் தேடிக்கொள்வதற்காகவே இந்த சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். அவர் வருகையால் தமிழக மக்களுக்கு நன்மையெதுவும் கிடையாது — காங்கிரசுக்கு புதிய பலமும் கிடையாது.

கூட்டணி வெற்றி பெறவேண்டுமென்பது மிகவும் நியாயமானகோரிக்கை ஏனென்றால் காங்கிரஸ் கட்சியிலுள்ள எவருக்குமே சமதர்மக் கொள்கை கிடையாது. அவர்களுக்கு சமதர்மக்கொள்கை வாயளவில்தான். அந்தக் கட்சியில் இருக்கப்பட்ட பிர்லா அமெரிக்கா சென்ற போது நானும் சோஷலிஸ்ட் என்று தான் சொன்னார். இதுபோன்ற ஏமாற்றுப் பேச்சுக்களுக்கு மக்கள் மயங்கிவிட மாட்டார்கள் என்ற தளராத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.


கூட்டணி மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை, ஆர்வத்தை, நம்பிக்கையை உண்டாக்கியுள்ளது. அதனால் எதிர்பார்ப்பதை விட அதிகப்படியான நண்பர்கள் வெற்றி பெறுவார்கள். எதிர்ப்பணியின் சார்பாக நடைபெறும் கூட்டங்களுக்கு வரும் மக்கள் கூட்டமே இதற்கு எடுத்துக் காட்டு.

பிரதமர் இந்திராகாந்தி அம்மையார்தென்னாட்டிற்கு வந்து புதிதாக ஒன்றும் சொல்லிவிடவில்லை. காங்கிரஸ் கட்சியினர் ஏற்கனவே கூறிவந்ததைத்தான் அவரும் கூறிப்போயிருக்கிறார். காங்கிரஸ் கட்சியினரும் - ஆட்சியாளரும் சேர்ந்து பிரமாதமான ஆவேசத்தையோ–உற்சாகத்தையோ உண்டாக்க முடியவில்லை என்பது காங்கிரஸ் கட்சியினரின் ஆட்சியில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்பதற்கு அத்தாட்சியாகும்.

மேலும் அவர்இங்கு வந்திருந்த போது அப்பட்டமாக அரசாங்கப் பணத்தைப் பயன் படுத்தி—அரசாங்க மாளிகையில் அமர்ந்து கொண்டு கட்சி விஷயங்களைப் பேசியிருக்கிறார். அரசாங்கச் சிப்பந்திகளுக்கு லீவு கொடுத்து தன் பேச்சைக் கேட்கக் கூட்டம் சேர்த்திருக்கிறார். இது ஜனநாயக நாட்டில் நடக்கக் கூடியது அல்ல. ஒற்றைக்கட்சியின் சர்வாதிகாரத்தைத்தான் காட்டுகிறது. இந்தச் சர்வாதிகாரம்—பிப்ரவரி மாதத்தில் மேலே சாயப் போவது உறுதி!

நாட்டின் நலனே உத்தேசித்து சகிப்புத் தன்மையுடனும் — பெருந்தன்மையுடனும் ஒன்று பட்டுள்ள கூட்டணியை இப்போதும் தேர்தலுக்குப் பின்னரும் எந்தக் காரணத்தினாலும் பிரித்து விட முடியாது இது உறுதி.





தமிழ்நாடு இ' துசாரி கம்யூனிஸ்ட் கட்'யின் தலைமை நீலையப் பொறுப்பாளர் கே. முத்தை"ா

சீட்டு மோசடி செய்வார்கள் பெரும் நிலச்சுவான்தாரர்களை ஏவி விட்டு அடிதடியில் இறங்குவார்கள். போலீசை ஏவிவிட்டு வழக்குப் போடுவார்கள் இந்தக் கஷ்டங்களையெல்லாம் நாம் குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது.

இது காங்கிரசுக்கு வாழ்வா-சாவா என்கின்ற போராட்டம். இதில் போலீசும்—சர்க்கார் இயந்திரங்களும் நடு நிலைமையோடு இயங்கும் என்று எதிர் பார்க்கக் கூடாது. அக்கிரமம் தலை விரித்தாடத்தான் செய்யும். ஆனல் அவைகளையெல்லாம்மீறி—மக்கள் குரலே மகேசன் குரல் என்பது போல — எத்தனை போலீஸ் இருந்தாலும்—எத்தனை ராணுவம் வந்தாலும் மக்கள் எண்ணத்தை — கூட்டணியின் வெற்றியை அழித்துவிட முடியாது.

இந்தக் கூட்டணி இன்னெரு பொறுப்பான வேலையை எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது "காங்கிரஸ் மக்கள் எதிர்ப்புக் கமிட்டி" என்று ஊருக்கு ஊர் அமைக்க வேண்டும். அப்படி அமைத்தால் மக்களிடையே ஒரு உணர்ச்சி தானாக வளரும்.

மக்களின் எழுச்சியைத் தட்டி விட்டால் மட்டும் போதாது. தொல்லைகளையும்-துன்பங்களையும் அனுபவித்த மக்களிடையே காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி தானாக எழுந்துள்ளது. அந்த உணர்ச்சியை ஒரு உருவகப்படுத்த வேண்டும். அதுவும் இந்தக் கூட்டணியின் கடமை. இதைச் செய்தால் இந்த ராஜ்யத்தில் காங்கிரசைத் தோற்கடிக்க முடியும். தி. மு. க. கூட்டணி வெற்றி பெறும்.

இந்தக் கூட்டணி வெற்றி பெற மனப் பூர்வமாக—உறுதியாக இறுதிவரை நின்று பாடுபடுவோம். எல்லாத் தொகுதிகளிலும் காங்கிரசைத் தோற்கடிக்கப் போராடுவோம்.

கூட்டணி வெல்லும்—அதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. ஆனல் இந்த வெற்றியை உறுதியாக்க—மிகப் பெரும் கடுமையான உழைப்புத் தேவை. காங்கிரசுக்கு இந்தத் தேர்தல் ஜீவ மரணப் போராட்டம். சாகப் போகிற புலி எப்படி எதிர்க்குமோ அது போல எதிர்ப்பார்கள். எத்தனை சாகசத்தை பிரயோகிக்க முடியுமோ—பணபலத்தைப் பாய்ச்ச முடியுமோ—அதிகாரத்தைப் பயன் படுத்த முடியுமோ அத்தனையையும் பயன் படுத்தி ஓட்டுகள் எதிர்க் கட்சிப் பெட்டியில் விழாமல் முறியடிக்கப் பார்ப்பார்கள்.

ஓட்டுச் சாவடிக்குள்ளேயே ஓட்டுச்

என்பதை ஆலோசித்து—தி.மு. கழகமும்—கம்யூனிஸ்ட் கட்சியும் உடன்பாடு கண்டிருப்பது தமிழக வரலாற்றில் குறிப்பிடத் தக்க—சிறப்பு மிக்க ஒன்றாகும். இந்த ஏற்பாட்டை தி. மு. கழகம் முன்னின்று செய்ததை நாங்கள் பாராட்டுகிறோம்.

ஆனல் வலதுசாரிக் கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஜெயிக்க வைப்பதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் வெளி வேஷமான காங்கிரஸ் எதிர்ப்பு என்பது உறுதியாகவும் இல்லை நாணயமாகவும்இல்லை. இடதுசாரிக்கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் போட்டியிடும் சில தொகுதிகளில் கூட அவர்கள் வேட்பாளர்களை நிறுத்தி வைக்கிறார்கள்-ஆனல் உறுதியாகச் சொல்லுவேன் எந்தத் தொகுதியிலும் எங்களை அவர்கள் வெல்ல முடியாது. அதற்கு எடுத்துக் காட்டு-கம்யூனிஸ்ட் கட்சி அமைத்த கேரள அமைச்சரவையில் அமைச்சராயிருந்த டி. வி. தாமஸ் போன்றவர்களே இடதுசாரிகளை எதிர்த்து டெப்பாசிட் தொகையை இழந்தார்கள் என்றல்—இங்குள்ள வலது சாரிகள் எங்களை—எதிர்ப் பணியை வெல்லுவதென்பது ஒருக்காலும் நடக்காது.

நான் ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்லித்தான் ஆக வேண்டும். வலது சாரிக்கம்யூனிஸ்டுகளான — பாலதண்டாயுதம், ராமகிருஷ்ணன், மணலி கந்தசாமி, கல்யாண சுந்தரம், மோகன் குமாரமங்கலம், என். கே. கிருஷ்ணன் போன்றவர்கள் கட்சி ஒன்றாக இருந்த போது-தி. மு. கழகத்துடன் கூட்டு வைத்துக் கொள்ளக் கூடாது என்று வாதிடுவார்கள். நானும் ராமமூர்த்தியும் மற்றவர்களும் சிறையில் இருந்த நேரத்தில்—சிறையில் எங்களைச் சந்திக்கும் போதெல்லாம் — வெளியே தி. மு. கழகத்தை ஒழிப்பதுதான் நமது வேலையாக இருக்க வேண்டு மென்று சர்ச்சை செய்வார்கள். காங்கிரசை ஆதரிக்க வேண்டும் என் பார்கள். நாங்கள் காங்கிரசை ஆதரிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் என்று வாதாடுவோம். எங்கள் பிரிவுக்கே இது ஒரு காரணம்.

அந்த மனிதர்கள் — வலதுசாரிகள் இன்று தி. மு. க அமைத்துள்ள எதிர்ப் பணியில் இடந்தேடி நிற்கிறார்கள் என்றல் அதை காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி என்று நான் நிச்சயம் சொல்லமாட்டேன்.

நான் இன்னென்றும் சொல்லுவேன் எதிர்ப்பணி ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு குறைந்த பட்ச திட்டத்தை அமுல் நடத்துவதற்கு மற்ற கட்சிகள் நிச்சயம் ஒத்துழைப்புத்தரும். இதில்பிரிவினை ஏற்படும் என்று யாரும் கனவுகாண வேண்டாம்.

இன்னும் அழுத்தமாகச் சொல்லுவேன்— தி. மு. கழகம் அறிவித்துள்ள திட்டத்தின் அடிப்படையில் - அது அமைக்கும் மந்திரிசபைக்கு தமிழக இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி முழு ஆதரவு தரும்: காமராசரே நீர் இடையில் வந்து எதையோ கூறிக் குழப்பாதீர்-அது நடக்காது:

எதிர்க் கட்சிகளுக்கு ஆளும் தகுதியில்லை என்று கூறியிருக்கிறார் இந்திரா காந்தி? ஏன் இல்லை அதுதவறு—மக்கள் தேர்ந்தெடுக்கத்தான் நினைக்கிறார்கள். நீ விட வில்லை அதை ஒப்புக்கொள்.

அடுத்து எதிர்க் கட்சிக்கு ஆளும் தகுதியில்லையென்று கூறவேண்டியது யார்? இந்திரா காந்தியா? காமராஜரா? அல்ல—அல்ல அதை மக்கள் கூற வேண்டும். படித்த மக்கள் காமராஜரையே தோற்கடித்தார்களே மணி மணியான எதிர்க்கட்சித் தலைவர்களை விலக்கியா வைப்பார்கள்? ஆகையால் முடிவு கூற வேண்டியது மக்களே தவிர காமராஜர் அல்ல. அதுதான் ஜனநாயக முடிவு அந்த ஜனநாயக முடிவில் நம்பிக்கை இல்லாத காரணத்தினுல்தான் இப்படியெல்லாம் பேசுகிறார்கள்.

எதிர்ப்பணியின் உடன் பாடு தமிழகத்தில் பெரிய மாறுதலை ஏற்படுத்தும் இதை உணர்ந்துதான் காமராசர் கன்னு பின்னு என்று பேச ஆரம்பித்திருக்கிறார். எதையும் பொருட்படுத்தாது உடன்பாட்டின் அடிப்படையில் ஒன்றுசேர்ந்துள்ள தி.மு.க. கூட்டணிக்கு மக்கள் ஆதரவு தரவேண்டும் — ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டும் இதுதான் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தாழ்மையான வேண்டுகோள்.



ஒரு திருப்பம் வரலாற்றில்



காயிதே மில்லத்

புத்தண்டிலே மக்களுக்கு எல்லாநலன்களும், நல்வாழ்வும் கிடைக்கவேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன். இந்த ஆண்டு நாட்டின் வரலாற்றிலேயே ஒரு பெருந்திருப்பமாக அமைந்திருக்கிறது அதன் காரணமாக நாட்டின் ஆட்சியை செம்மையான பாதையில் நடத்தச் செய்து மக்களுக்கு வெற்றியையும்—மகிழ்ச்சியையும் கொண்டு தரத் தக்க வழியிலே நாட்டைச் செல்லும்படி உதவுவது அவசியமாகின்றது.

இதை மக்கள் அனுபவத்தில் நல்லபடி உணர்ந்து கொண்டார்கள்--இதுவரையிலும் ஆட்சியிலிருந்தவர்கள் மக்களிடமிருந்து பெற்றிகரற்ற ஆதரவுக்கு தகுந்த நன்மைகளைச் செய்யாததோடு—தீமைகள் பலவற்றைச் செய்து விட்டார்கள்.

பொங்கல் திருநாளுக்கு அடுத்தாற் போலிருந்து ஆரம்பிக்கும் தேர்தலிலே தி. மு. க.வுக்கும்—அதன் நேசக் கட்சிகளுக்கும் மக்கள் மகத்தான வெற்றியைத் தரத்தக்க எல்லா முயற்சிகளையும் மனமுவந்து செய்யக்காத்திருக்கிறார்கள் என்பதை நான் அனுபவத்திலிருந்து நிச்சயமாகக் கூறுகிறேன்.

நாங்கள் பெருங் கட்சி என்று இதுவரை பெருமையடித்துக் கொண்டிருந்த ஆட்சிக்கட்சி இன்று துண்டு துண்டாகச் சிதறிக் கொண்டிருக்கும்போது—இதுவரை தனித்தனியே இருந்த கட்சிகளும், தலைவர்களும் மனமொத்து ஒன்று சேர்ந்திருப்பதே ஒரு பெரும் சாதனையாகும். அச்சாதனைக்குரிய பெருமை தி.மு.கழகத்திற்கும் இதர கட்சிகளுக்கும் உரியதாகும்.

இவர்கள் ஒன்று சேர்ந்து பிரிக்க முடியாத பலம் பெற்ற கூட்டணியாக அமைந்ததற்குப் பெரும் காரணம் உயர்திரு அறிஞர் அண்ணா அவர்களின் திறனும் குணமும் ஆகும்.


உலக மேதையாகிய ராஜாஜி அவர்களும் கூட இக்கூட்டில் சேர்ந்து அசைக்க முடியாத ஆதரவு தரும்படி செய்தது, அறிஞர் அண்ணா அவர்களின் நேச மனப்பான்மையையும்—சகிப்புத் தன்மையையும் காட்டுகிறது.


கூட்டணியினர் ஒன்று சேர்ந்திருப்பதே அவர்கள் அசைக்க முடியாத நிறுவனம் என்பதற்குச் சான்றாகும். தி. மு. க. விடமும் இதர கூட்டணியார்களிடமும் இருக்கிற திறமையை மக்கள் நன்கு உணர்வார்கள். காங்கிரஸ் கட்சியிடம் ஆரம்பத்திலும் இப்போதும் என்ன திறமை இருந்ததோ அதைவிடக் குறைவானதில்லை கூட்டணியாளர்களின் திறமை!

தி. மு. க. கூட்டணிக்கும் நாட்டு மக்களுக்கும்—நாட்டுக்கும் வெற்றியும்—வாழ்வும்—மற்றும் பல நலன்களும் உண்டாவதாக என்றுள்ளுடைய ஆசியைக்கூறி மறுபடியும் வாழ்த்துகிறேன்.

பேட்டி: **தினகரன்**



மாநிலத்தைத்
தழுவுங்கலைத்த
மாநாட்டுக்
காட்சிகள்!
உலகின் தாயர் தீர
உங்கள் தூயர்தீர
ஒரே வழி - தேயகரியன்
வெற்றிபெறும்வழி
என்கிறார் நமது அண்ணா
மாநாட்டின் நுழைவுவாயில்


வந்தார்கள் வந்தார்
ஜெயவர்த்தனா
ரயில் மூலம் வந்தனர்
வண்டிகளில் வந்தனர்
நடந்தே வந்தனர்
புறப்பட்டுவிட்டது
மறுவாப் படை


தமிழ்மொழிக்கு
தீங்குநினைத்த
தியோகி
ஆழி சூழ் இவ்வுலகை சிறுத்தைதே
அன்னாரின் பிரமாண்ட பெருந்தலைவா


மக்கள் கடலிடையே மலராத் தோழர்
மாபெரும் தலைவனின் பவனி
மேடையில் தலைவர்கள்
ஏகாதிபத்தியத்தை முறியடிக்க
கூடியிருக்கும் எதிர்ப்பு அணித்தலைவர்கள்


உதயசூரியனும் - பிறைநிலாவும்
நட்சத்திரமும் தேசிய
கண்காட்சிசாலை அரிவாள்மனை
கூடும் கூடு
மாநாட்டுப் பந்தலில் தொழில்
ஓர் பக்கம்! தொழிலாளர்
மாநாட்டுப் பந்தலுக்குள்ளே
மாசொல்லி முடிக்கும் கும்பல்
உணவு தயாரிக்கும்


குடிநீர் வசதியுமுண்டு
ஓணவுப்பாயாசம்வரைக்கும்
ஓட்டை முடிச்சுகளுடன்
இதாயாக்கள்
இரவு நேரத்தில் தொட்டிகளில்
தூங்கும் குழந்தைகள்
மூன்றும் குடும்பமுண்டிரும்
உணவு தயாரிக்கின்றனர்


அண்ணாவின் பேருரை!
லட்சத்தைத் தருகிறார் பொருளாளர்
Prakash
R.E.C.
தேம்பியழும் ஏழை கண்ணீர்
துடைக்கும் தோழில் அரிக்கை
மனம் கவர்ந்த தலைவர்!

வர்ணப் பட்டாடை...இன்று அம்பாள் தரிசனம் அமோகமாக இருத்தது.

பிரகாரத்தின் இருள் வளைவில் சுற்றி வரும்போது வசுமதி பின்னலேயே வருகிறாளா என்று திரும்பிப் பார்த்தேன், அவள், 'கச்சிறுக்கை பிசகெறிந்த முகிலெதிரியும்' பாவை விளக்கருகில் 'நமஸ்கரி'த்துக் கொண்டிருந்தாள். பாவை விளக்கு. அல்ல, விளக்கின் பாவை! என்ன கம்பீரம்! ஆறடி உயரத்தில் தலையும், மார்பும், பின்புறச் சரிவும் நல்ல செதுக்கு வேலை!

இன்றும் அம்பாள் தரிசனம் அமோகமாக இருந்தது. நடையைத் தளர்த்தினேன். வழக்கம்போல் வசுமதியும் பின்னல் வந்துக் கொள்ளட்டுமே. இந்தப் பிராகாரத்தின் யாளி தூக்கியாளிகளும், ஆள் தூக்கி வேங்கைகளும் அவளுக்கு பயமாக இருக்குமோ... வசுமதியும் வந்துக் கொள்ளட்டுமே...அடிவிட்டு எரியும் ஒற்றை எண்ணெய் விளக்குகள், மௌனத் தியானம் செய்யும் யோகிகள் போல அமைதியில் நின்று சுடர் விடுகின்றன. இருளான பிராகாரத்திற்கு அந்த தளி விளக்குகளின் ஒளி சத்தியத்தின் பலவீனம் போல எட்டமாட்டேன் என்கிறது.

நடையை தொடர்ந்து வசுமதி பின்னல் வந்தாள். 'வசு, இன்று அம்பாள் தரிசனம் திவ்யமாக இருக்கிறது. பார்த்தாயா? பட்டர் கை வண்ணம் இன்று ஜ்வாலிக்கத்தான் செய்கிறது....''

''அம்பாளுக்கு இன்று திருக்கல்யாணம். அதனால் திருக்காப்பு திவ்யமாக செய்திருக்கிறார்கள். ஆனால் எனக்கு அம்பாள் என்றும் போலதான் தெரிகிறாள்...''

மூலஸ்தானத்தின் பின்புறம் பிரகாசமான விளக்கொளியில் வசுமதியை வியப்பால் அளக்கிறேன்.

விடியாக் காலையிலேயே மஞ்சள் தடவி, குளித்த முகம். டாலடிக்கும் அன்ன மூக்குத்தி. நேற்றிரவின் வெற்றிலைக் காவி துடைத்த உதடுகள். காதின் சரிவில் பூனை மயிரின் ஒழுங்கு தளங்கும் கழுத்து. அம்பாளின் பெரிய குங்குமமணிந்த நெற்றி எழுதி விட்ட புருவம். வசுமதியே அம்பாள் தரிசனமாக சொலிக்கிறாள்.

ஆமாம் அம்பாள் என்றும் போலதான் இருக்கிறாள். ஆனால் இவள் நேற்று போல இல்லை. நேற்று முன் நாள் போலவும் இல்லை. பத்து, பதினைந்து, இருபது நாட்களுக்கு முன்பு முதன்முதலில்-காலை முதல் தொழுகைக்கு வந்தபோது கண்டது போலவும் இல்லை. அத்தனை சிறிய கெடுவில் எத்தனை மாறுதல். கீழ்வான நட்சத்திரம் போல, அந்தியில் புள்ளியாகத் தோன்றி, இரவின் சந்திப்பில் வைரமாக சொலிக்கும் திறமோ! வசுமதி. அழிவற்ற இளமையின் ரிஷி பத்தினி போல திகழ்கிறாள்.

"என்ன மௌனம் சாதித்து விட்டீர்கள்? மூன்று சுற்று வலம் வந்துவிட்டோம். நான் தெற்கு வாயில் வழியாக போகிறேன். தினமும் வடக்கு வாசலில் தங்களையும் என்னையும் சேர்த்துப் பார்க்கிறவர்களுக்கு என் பக்தியும் தங்கள் நோமையுமா தெரிகிறது? என்னை இனியும் பழைய கதாநாயகியாகவே பார்க்கிறது. குளித்து வந்த பின்னர் சேற்றைத்தான் என் அபிஷேகத்திற்காக வைத்துத் தருகிறார்கள். நான் இது வழியே போகிறேன்..''

வசுமதி போகிறாள். அந்த தெற்கு வாசலே திடீரென்று அடைத்துக்கொண்டு இருள் கவிழ்ந்தது போலிருக்கிறது. ஆனால் பிராகாரத்தின் அத்தனை பாவை விளக்குகளும் நின்று எரிகின்றன. ஒளியில் இருட்டு வருமோ?

என் பக்தியும் உங்கள் நேர்மையும்' என்றாளே, நல்ல நேர்மை. கோழி அடை காத்து பொரித்த வாத்துக் குஞ்சு தண்ணீரைக் கண்டதும் நழுவி விட்டது போல மனதின் ஆண்மை அவள் கவர்ச்சியில் லயித்து விடுகிறது. அதிலும் அம்பாள் தரிசனத்தின் அமோக பொலிவு நிறை குடத்தில் கல் விழுந்தது போல மனவெளியில் வழிகிறது. வசுமதி மஞ்சள் குளித்த முகத்துடன் சிரிக்கிறாளே?

வெளியே வீதியில் வந்தபோது விடிந்துகொண்டு வருகிறது. உதயதாரகை அரச மரக்கிளைகளுக்குக் கீழ் வந்த வழி பார்த்து திரும்புகிறது. அடிவானம் சூல் கொண்ட பெண்ணின் முகமாக விளறி சிவக்கிறது. பக்கவாட்டு குளக்கரையில் துணி துவைக்கும் 'டப்டப்' கேட்கிறது. பூக்கடைக்காரன் தூங்கி வழிகிறான். அத்தர் சந்தனக் கடையில் பையன்கள் கடை பரப்புகிறார்கள். கோயில் பசுதேர் வீதியில் படுத்துக் கிடக்கிறது. குளிர்ந்த காற்றில் நீந்துவது போல நடந்து வருகையில் தரிசனத்தில் அம்பாள் முகமாக மலர்ந்த இடத்தில் வசுமதி அமர்ந்து சிரிக்கிறாள்...

சீ; இதென்ன அபச்சாரக் கூத்து. போயும் போயும் அந்தப் பெண்ணையா மனதில் ஏற்றுவது? கோயில் என்ற நற்கூடத்தின் நெருக்கத்தினுள்ளே அவளுடன் நடந்து பேசுகையில், வசுமதி ரிஷி கன்னி போல புனிதமாக தெரிகிறாள். ஆனால் வெளியே தெருவில் வசுமதி அந்த பழைய கழிசடைதான். என்னதான் எண்ணெய் குளித்து காப்பிட்டாலும் அம்பாள்கூட கோயிலுக்கு வெளியே வெறும் சிலைதானே?

வசுமதி ஆரம்பத்தில் எப்படியோ வாழ்ந்தவள். அழகி ஒருத்தி ஆரம்பத்தில் எப்படி வாழ்ந்திருந்தால் என்ன? இந்த உலகம் ரொம்பவும் முன்னேறி விட்டது. அவளின் வாடிக்கைக்காரரில் ஒருவேன அவளை நிரந்தரமாக்கிக் கொண்டு கழுத்தில் சரடேற்றி விட்டிற்கு அழைத்துக்





கொண்டு வந்து விட்டான். முரடன், ஊர் முதலி கொள்ளை யடித்தால் கேட்பார் வேண்டுமே? அதிலிருந்து இவள் தன் பத்தினித் தன்மையை நிலை நாட்டிக்கொள்ள தினமும் விடியாக் காலையின் முதல் தொழுகைக்கு கோயிலுக்கு வருகிறாள். கோயிலின் சங்கூதும் ஆள்; எனக்கென்ன என் சங்கை விட்டு பிராகார வாசலில் அவளுடன் சுற்றிவிட்டு மனதோடு அலமலங்கல் படுகிறேன். கிராமத்தில் அவளை அறியாதவர் யாரிருக்கிறார்கள்? அந்த அறிமுகத்துடனேயே முதன் முதலில் கோயிலில் அவளை சந்தித்ததும்;

"நீயா-?" என்றேன் வியப்பில்

"ஆமாம். நான் வரக் கூடாதா? பாப பரிகாரத்திற்கென்று வைத்துக் கொள்ளுங்களேன் இப்பொழுது நான் முறைப்படி. என்னை மணந்து கொண்ட ஒருவரின் மனைவி. வாழ்ந்து வந்த சுடிவன், குழியில் மனசு விழுந்து விடாமலிருக்க இந்த விடியாக் காலை தேவதரிசனத்தை விரதமாகக் கொண்டிருக்கிறேன்—"

குச்சியில் நிமிண்டி எடுத்த அருவருப்பான பிராணியை எட்ட இருந்து பார்ப்பது போல அவளைப் பார்க்கிறேன்... ஆனால் நாட்களின் சுழலிலே— வசுமதி மனதின் பீடத்தில் கொலுவேறி வந்தாளோ?

—பிறகுள்ள நாட்களில் கோயிலுக்கு வெளியே அவளுடன் நடந்து வருகையில். தெருவின் தூங்கு மூஞ்சி கண்களில் கரிப்புப் கொட்டுவதைப் பார்க்கத்தான் செய்கிறேன்.

"வசுமதி நீ என்னதான் புது வாழ்வு துவங்கி விட்டாலும் உலகம் உன்னைப் பழைய கதா நாயகியாகத் தான் கணிக்கிறது. நீ உன் சோதரனுடன் நடந்து போனால் கூட விஷமப் பார்வையே உன்னைத் தொடரும். தவறை நீராடி நோம்பு நோப்பதுபோலதான் இருக்கிறது உன் செய்கை...என்னதான் நீ தேவி தரிசனம் செய்தாலும் உன்னை பழைய வசுமதியாகவே—ஊர் பார்க்கிறது..."

"உலகம் ஒரு கண்ணாடி. கண்ணாடியில் பார்ப்பவர்களுக்கு அவரவர் முகம் தான் தெரியும். மனதைப் பார்க்க கண்ணாடி உதவுமோ?"

பிறகு ஒவ்வொரு நாளும் கோயிலில் அவள் தரிசனத்திற்காக சங்கை மூலையிலிட்டு காத்துக் கிடக்கிறேன்.

உறக்கத்திலிருந்து விழித்துணரும் போது, அவளை நினைக்கிறேன். 'தேவீ! மகாமாயே" என்று கொட்டாவியுடன், என் சங்கை முழக்குகிறேன். குளிர்ந்த நீரில் குளித்து சுத்தமான ஆடை உடுத்தி தெருவில் நடக்கும் போது, தூங்கு மூஞ்சி உலகம் இன்னும் இழுத்து மூடி தூங்கிக் கொண்டுதான் இருக்கும். தெருக்கோடியின் மாடி வீட்டின் வாசலில்—விடியாக் காலையில்-என் வருகைக்கு முன்பு அவள் காத்து நிற்கிறாள். சந்தடியற்ற காலைப் பொழுதில் கோயில் பணியாள் என் வருகை அவளுக்கு துணை. வாசலில் வந்ததும், 'போவேமே...' என்கிறேன். அவள் தொடர்கிறாள்.

வயலுக்கு போகும் மாட்டுக் காரனும், கீற்றுச் சாய்ப்பின் இட்லிக் கடைக்காரனும் காலை இருளில் விகற்பத்தால் பார்க்கிறார்கள், இது வாழ்க்கை. ஆனால், புதிய வாழ்விற்கு அவளை இட்டு வந்த அந்தப் புதிய கணவன், இவளை இப்படித் தனியாக தெய்வதரிசனத்திற்கு விட்டுவிட்டு நிம்மதியாக அங்கே தூங்குகிறானே என்ன இருந்தாலும் அதிதைரியசாலி அவன்!

கோயிலில் கொடியேறி திருவிழா துவங்கியிருக்கிறது இனி பத்து நாளும் கூத்தும் குரவை அலமலங்கல்படும். எங்கும் தொங்கலும் தோரணங்களும் தேவி, புதிய ஆடை ஆபரண பூஷிதையாக கல்யாண கோலத்தில் திகழ்கிறாள். விழா துவங்கி விட்டபின்பு அவளுக்கு நித்யமும் வாணவேடிக்கைதான். இப்பொழுது விடியக் காலையிலும் நிறைய கும்பல் வருகிறது. புதிய ஆடைகளின் மணமும், சந்தனமும் ஊதுவத்தியும் பன்னீருமாக பிரகாரமே மனத்தில் நிறைகிறது. இத்தனைக்கும் எந்த கும்பலிலும் பிராகாரத்தில் என் நிழல் போல பின்னாலேயே வருகிறாள், வசுமதி.

"கும்பல் அதிகமாகி விட்டால் மனதின் ஏகாந்தம் கலைந்து விடுகிறது. இல்லையா வசுமதி?"

"என்னமோ கும்பலைப் பற்றி எனக்கு தெரியாது—"

"நீ இன்னும் பக்குவமடையவில்லை. நான் இந்த வெள்ளை சங்குடன் ஆண்டவன் சேவைக்கு வந்து வெகு காலமாயிற்று...எந்த 'வித்தி'க்கும் ஏகாத்தமே மூலதனம்? தீபாராதனைக்கு முன்பு-கதவை அடைத்துக் கொண்டு அர்ச்சகன் என்ன செய்கிறான் தெரியுமா?

"எனக்குத் தெரியாது—"

"அதனாலேயே கேட்டுக் கொள். அர்ச்சகன், வெளியே தொழுகைக்கு வந்த கும்பலிலிருந்து தேவியை அடைந்து கதவிற்குள் தனிமையில் சந்திக்கிறான். சந்தித்து பக்தர் பால் கண் திறந்து பார் என்று அவளை தட்டி எழுப்புகிறான். அவள் கண் திறக்கும் அபூர்வ பொழுதை கதவை திறந்து நமக்கு காட்டுகிறான். இப் பொழுது புரிந்ததா? எந்த முந்திக்கும் ஏகாந்தமே உறைவிடம். உனது இந்த விடியாக் காலையின் நிர்மால்ய தொழுகை இருக்கிறதே இதுவும் ஒரு வகை ஏகாந்தம் தான். ஆனால் இந்த பத்து நாள் திருவிழாவின் சலசலப்பு - ஆலயத்தை எதிர் மேடையாக கலகலங்க அம்பாளின் இந்த கலகலப்பை வெறுக்கத்தான் செய்வாள்... வசுமதி—உன் தொழுகைக்கு கூட ஏகாந்தமே சிறப்பானது, வா அதோ ஈசானிய மூலைக்கு போவோம். அங்கு கும்பல் இல்லை..."

வசுமதிக்கு பக்தி முக்கியம். அவள் என்னை தொடர்கிறாள்.

ஈசானிய மூலையின் ரதிமன்மத சிலையை அழகாக வடித்திருக்கிறான், சிற்பி. பொங்கும் இளமையின் பொற்கலசங்களை மார்பிலேந்திக் கொண்டு மோகக் கிறுக்கில் மன்மதனின் இடையை சுற்றி அவன் கைக்கரும்பை வளைக்க முயலும் ரதிப் பெண். அவள் கைக்கிளி. மன்மதனின் இதழுருகில் முத்தமிட முந்தும் வேகம், மனிதனின் பொறி பறக்கும் கோலத்தை வசுமதியின் கண்கொண்டே பார்த்தபோது வெளியே உற்சவ மண்டபத்தில் முரசு அறையும் ஒலி நெருப்பிற்கு நெய்யூற்றியது போல மனதின் எரிவிற்கு எண்ணெயாகிறது.

"வசுமதி மன்மதனும் ரதியும் நிற்கும் பரவசத்தில் சிற்பியின் கை வண்ணத்தை விட காதலின் திமிர்ப்பே கல்லில் பளிச்சிடும் கலையின் வெற்றியை பார்த்தாயா?'

"எனக்குக் கலை தெரியாது."

வசுமதி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வசு. உனக்கா கலி தெரியாது? நீ கலிக்கூடம் வைத்திருந்த கதையை மறந்து விட்டுப் பேசுகிறாய்..."

"என்ன இது? உங்கள் சுவரமே மாறுகிறது... பாம்பாபழுதையா என்றே பயமாக இருக்கிறது... பாபத்தை கழுவிக்கொள்ள கன்னி தேடி வந்த இடத்தில் நாற்றக் குப்பையை கிளறுகிறீர்கள். தேவியின் சன்னிதானத்தில் சங்கொலிக்கும் நல்லவரென்று— உங்களை பின் தொடர்ந்தேன் பொறி நெருப்பாமுன் நான் போகிறேன்..."

ஈசானிய மூலியின் ரதிமன் மதக் கோலத்தில் எதிர்சுவறில் சனி தேவன் காக்கை உருவில் தியானம் செய்கிறான்.

பிரபஞ்சம் என் உள் எரிகிறது. காலகாலமாக எட்டிய கைகளிலெல்லாம் துவண்டவள். இன்று தியான வேஷத்தில் என் மனத்தை எறிக்கிறாள். தாகம் கொண்ட மிருகம், கானல் நீரை ஓடிஓடி துரத்தியது போல மனம் தரிசனநாயகியை வசுமதியாகவே கண்டது.

"வசுமதி எங்கே போகிறாய்.. என் குரலுக்கு பதில் சொல். என்னை பின் தொடர்ந்த நாளிலெல்லாம் என்னை நீ புரிந்துக் கொண்டிருப்பாய் என்றே எண்ணினேன். உன் விரதத்திற்கு என் துணை அவசியமாயினும் என் வேண்டுகோள் ஒன்றே ஒன்று. ஒரே ஒரு முறை... பிறகு உன் விரதத்திற்கு நான் குறுக்கே வரவில்லை..."

"என்னை வழிவிடுங்கள். இது பாபம்..."

"நீ பாபகாரியம் செய்துக் கொண்டிருந்த காலத்தில் உன் மேல் சுமத்தப் பட்டிருந்த மலிவு காரணமாக என்னால் உன்னை அணுக முடியவில்லை... இப்பொழுது நீ புடம்போட்ட தங்கம். தீக்குளித்து வந்த புராண நாயகி போல புனிதமான உன்னை நான் வேண்டுவதெல்லாம் ஒரே ஒரு முறை..."

"நான் தீக்குளித்து விட்டு என்னை நம்பும் ஒருவருக்கு மனைவியாகி விட்டேன். இன்னும் என்னை பழைய சேற்றுக்கு இழுக்காதீர்கள். இது தேவாலயம்... எனக்கு வழி விடுங்கள்... விடுங்கள்... விட்டுவிடுங்கள். உங்களது புனிதமான தொழிலுக்கும் உங்கள் ஆண்மைக்கும் இந்த பாபம் பொருந்தவே இல்லை... ஆலயத்தில் உங்களை என் பக்திக்கு வழி காட்டியாக எண்ணி தொடர்ந்தேனேயன்றி களங்கமாக எண்ணினேனில்லை... பிரகார வீதிவுகளில் உங்களுடன் தனிமையில் வருகையில் அந்த தனிமையே என் முக்தியின் பலம் என்று எண்ணினேன்... விட்டுவிடுங்களேன்..."

"வசு, இன்று நீ என்னிட மிருந்து தப்ப முடியாது..."

"என் பேச்சுக்கு கொஞ்சம் செவி கொடுங்கள்..."

"முதலில் என் செயலுக்கு வழிவிடு..."

"அவ்வளவு தானே! இது தேவி சன்னிதானம். மோகம் உங்கள் கண்ணை மறைக்கிறது..."

"இனி பேசி பயனில்லை..."

பிரகார வதிவில் யானை தூக்கி யாழிகளும், ஆள் தூக்கி வேங்கைகளும் வடித்து வைத்த சிலைகளாக கம்பீரம் குறையாமல் எழுந்து நிற்கின்றன. ஈசானிய மூலியின் முகட்டில் ரதி-மன்மத இணைகள் தங்கள் மோகக் கிறக்கிலும் இருளில் எங்களை தேடியிருக்குமோ?

0 0 0

பொழுது நிம்மதியாக விடிந்திருக்கிறது. வழக்கம் போல சங்கையும் எடுத்துக்கொண்டு கிளம்புகிறேன். வயலுக்கு போகும் மாட்டுக்காரனும், கீற்றுச் சாய்ப்பின் இட்லி கடைக்காரனும் அதே விகல்ப பார்வையினால் என்னை அளக்கிறார்கள். தெருக் கோடியில் அந்த அவளது மாடி வீட்டு வாசலுக்கு வருகிறேன். என்றுமில்லாத புதுமையாக வசுமதி, தெளித்த வாசலில் கோலமிட்டுக் கொண்டிருக்கிறாள்.

"வசுமதி இன்று கோயிலுக்கு வரவில்லையா? நேரமாகி விட்டது..."

அப்பொழுதுதான் அவளை கூர்ந்து பார்க்கிறேன். கந்தர்வ சாபம் கொண்ட ரிஷி பத்தினி போல கலைந்த கேசமும் குலைந்த ஆடைகளுமாக- என்ன இது? என் வியப்பு அடங்கு முன் அவளே பேசினாள்.

"கோயிலுக்கு நான் வரவில்லை. என் விரதத்தின் ஈடேற்றம் அம்பாள் சன்னிதியில் இல்லை. என் தேவன் விடிவின் பொய்மையை அறியாமல் வீட்டினுள் தூங்குகிறார். எனக்கு கோயில் வேண்டாம்...!"

திரும்பி நடக்கிறேன். பொழுது விடிந்து கொண்டிருந்தது!





அந்தமான் பயணம் என்று எண்ணியவுடனே என் நினைவில் வந்தது புகழ்பெற்ற அந்தமான் சிறைச்சாலை தான். கழகத் தோழர்கள் D. I. R. வழக்கை நடத்த என்னை அழைத்திருக்கின்றார்களே என மகிழ்வுடன் புறப்பட்டுக் கல்கத்தா சென்று அங்கிருந்து கப்பலில் புறப்பட்டேன். கப்பல் பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது சில மணி நேரம். ஆனால் பின்பு 'கடல் பயண நோய்' வாய்ப்பட்டு வாந்தி எடுத்துப் படுக்கையில் மூன்று தினங்கள் கழிந்தன. கப்பலில் தனி அறையாயிருந்ததால் சற்று அமைதியாயிருந்தேன். மூன்று தினங்கள் கழிந்து மாலையில் கோகோதீவு என்று சொல்லப்படும் பர்மா நாட்டின் ஒரு தீவிலிருந்த கலங்கரை விளக்கத்தின் வெளிச்சம் உற்சாகத்தைக் கொடுத்தது. அத்தீவையடுத்த ஐம்பது மைல்களுக்குள்ளாகவே அந்தமான் தீவுக்கூட்டங்களின் ஆரம்பம் தெளிவாகத் தெரிகிறது. கருநீலக் கடலும் பசுமையான மலைகளால் சூழப்பட்ட தீவுக்கூட்டங்களும் மிகவும் அழகாக இருந்தன.

சாத்தம் கப்பல் துறையைச் சரியாகக் காலை 6 மணிக்கு கப்பல் சேர்ந்தது. திரளான தோழர்கள், அந்தமான் தி.மு.க மாவட்டச் செயலாளர் திரு. மருதவாணன் அவர்கள் தலைமையில் வந்திருந்து வரவேற்றனர். மழை பெய்த ஈரத்தில் மண்ணும் செடி கொடிகளும், காலை வெய்யிலில் பளபளத்தன. ஊட்டி, கோடைக்கானல் மலைப்பாதை போன்ற பாதையில் சென்று சுமார் 300 அடி உயரமுள்ள மலையில் அமைந்துள்ள பயணிகள் இல்லத்தை அடைந்தோம். அந்த மானில் அடிக்கடி பூமி அதிர்ச்சி ஏற்படுவதாலும் மரங்கள் ஏராளமாகக் கிடைப்பதாலும் வீடுகள் யாவும் மரப் பலகைகளால் தான் கட்டப்பட்டுள்ளன.

எங்கு நோக்கினும் பசுமையான புல்வெளிகள் ஓங்கி வளர்ந்துள்ள மரங்கள், பல மைல்களுக்கப்பால் அமைந்துள்ள பல தீவுக் கூட்டங்கள் அழகிய கருநீலக்கடல் என கவின் மிகு காட்சிகள் ஏராளம்!, ஏராளம்!!

மாலையிலே பாறைப் பகுதியில் சந்தப்பனூர் மன்றத்தின் சார்பாக வரவேற்பளித்தார்கள், பாறைப் பகுதியில். சுரங்கத்தில் நிலக்கரியைத் தோண்டுவது போலவே, சாதாரணமான கற்பாறைகளை வெடிவைத்துத் தகர்த்து உடைக்கின்றார்கள். உடைத்த கற்களைப் பாதைகள் போடுவதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் பயன்படுத்துகின்றனர். அந்தச்சுரங்கங்களைச் சுற்றிப் பார்த்தோம். இதில் வேலை செய்யும் தொழிலாளர்களில் பெரும் பான்மையோர் தமிழர்கள். ஒட்டுக்குடிசையில் மருத்தவ வசதிகள் ஏதுமின்றி வாழ்ந்து கொண்டுள்ளனர்.

இந்தப் பாறைப் பகுதியில் 1962ல் ஐந்து ரூபாய் கூலி உயர்வு கேட்டத் தொழிலாளர்கள் மீது துப்பாக்கியால் சுட்டு மூன்று தமிழ்த் தொழிலாளர்களின் உயிரைக் குடித்ததாம் இந்தக் காங்கிரசு ஆட்சி. நீதி விசாரணை நடந்ததாம் உடனடியாகவே. ஆனால் விசாரணையின் தீர்ப்பு இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது! தமிழ் நாட்டு அரசாங்

கத்தின் அராஜகப் போக்கிற் கும் வெறித்தனத்திற்கும் மத் திய ஆட்சி ஒன்றும் சளத்த தல்ல என்று நினைத்துக்கொண் டேன். அதில் குண்டடிபட்டு உயிர் தப்பிய திருச்செங் கோடுத் தோழர் ஆறுமுகத் திற்கு ஆறுதல் கூறும்போது உங்களைப் போன்ற ஏராள மான தோழர்கள் தமிழகம் முழு தும் இந்த வெறியாட்சியின் துப்பாக்கிச் சூட்டால் தியாகத் தழும் பேற்றுள்ளார்கள் என் றேன்.


தமிழர்களை அந்தமான் வாழ் வடவர்களும், அதிகாரிகளும் 1962 வரை 'கடாபாணி' (புளித் தண்ணீர் ரசம்) என்று அழைத்து வந்துள்ளனர். 1962 ஆண்டு இறுதியில் அந்த மான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த உடனேயே கேலி பேசியவர்கள் வாய்மூடி நிற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இரு வண்ணக் கொடி ஏற்ற போலீஸ் தடை, ஆளும் கட்சி யினரின் அநியாயப் போக்கு இவைகளுக்கு இடையேயும் கறுப்பு-சிவப்புக் கொடி பல தீவுகளில் பட்டொளி வீசிப் பறந்து வருகின்றது.


திராவிட முன்னேற்றக் கழ கம் ஏற்பட்டவுடன் தான் பாறைப்பகுதி, நம்நகர், மூங் கில் பண்ணை, நீளத்தீவு போன்ற தமிழ்ப் பெயர்கள் ஏற் பட்டன. பல இடங்களுக்கு அந்தமான் நிகோபார் தீவு களைத் தமிழ் மன்னர்கள் ஆண் டார்கள் என்பதற்குச் சான்றாக நம்நகரிலும், நங்கோரியிலும் கல்வெட்டுக்கள் உள்ளன, இன்று நிகோபார் தீவுக்கு அருகிலுள்ள நங்கோரித் தீவு தான் அன்று நங்கவரமாகத் திகழ்ந்ததாகவும் இவை களனைத்தையும் இராஜேந்திர சோழன் ஆண்டதாகவும் தோழர்கள் கூறினர்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தமிழினம்தான் இன்று ஒதுக்கப்பட்ட இரண் டாம்தர இனமாக இருக்கின் றது. இத்தீவுகளில் தமிழனு? வேலை இல்லை என்ற நிலைமை யைத் தட்டிக்கேட்பது திரா விட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான். பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இருப்பதால் ஒரு தொழிலாளர் யூனியன் தேவையென்று உணர்ந்து அந்தமான் நிகோ பார் தொழிலாளர் யூனியனை ஆரம்பித்து வெற்றிகரமாகச் செயல்பட்டும் வருகின்றனர் நம் கழகத் தோழர்கள்.

75 தொழிலாளர்களை வேலை யினின்று நீக்கிய போதும் 411 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தபோதும் கழகமும் யூனியனும் இணைந்து அமைதி யான அறவழி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டும் அமைதியான வேலை நிறுத்தம் செய்தும் நீதியை நிலை நாட்டி யுள்ளன. வேலை நீக்கம் செய் யப்பட்ட தொழிலாளர்களுக்கு














வேலையும் கிடைத்தது. இதனால் பலர் சிறையே கதி நேர்ந்தது. D.I.R. சட்டத்தால் பிடிக்கப்பட்டு காரக்கிரகத்தில் அடைக்கவும் பட்டனர். அந்தமான் மக்களுக்கு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இவைகளின் பணியை உணர்த்தி அறவழிப் போராட்டத்தை நடத்திக் காண்பித்ததும் தி. மு. க. தான்.

இந்திய சுதந்தரப் போராட்ட வீரர்களுக்குப் பிறகு புகழ் பெற்ற அந்தமான் சிறையில் அரசியல் காரணத்திற்காக சிறைவாசமேற்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தான் என்று எண்ணும்போது மிகவும் பெருமிதப்பட்டேன்.

மறுதினம் போர்ட்பிளேர் நகரில் தி.மு.க பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். திரளாகக் கூடியிருந்தனர் தோழர்கள். பதினைந்து மைல் தொலைவிலிருந்தும் நடந்து வந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர் பல தொழிலாளத் தோழர்கள் எனக் கேள்வியுற்றேன். கூட்டம் ஆரம்பிக்கும் முன்னரே மழை பெய்யத்தொடங்கி விட்டது. கடுமையான மழை! ஆனால் அப்படிப்பட்ட மழையிலும் "அண்ணா வாழ்க! அண்ணா வாழ்க!" எனத் தோழர்கள் விண்ணதிர முழங்கியதைக் கேட்டபோது உடல் புல்லரித்தது, ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள திராவிட முன்னேற்றக் கழகந்தான் தங்கள் உயிர்மூச்சு, அதன் அரும்பெரும் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான் தங்கள் இதயம் என இத்தீவுகளில் வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான தோழர்களின் உற்சாகத்தைக் கண்கூடாகக் கண்டேன். கடல் கடந்து வாழும் தோழர்கள் தமிழ் மொழிக்காகவும் தமிழ் இனத்திற்காகவும் போராடி வரும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை உணர்ந்து கழகத்திற்கு ஒருமித்த ஆதரவு அளித்து வருகின்றார்கள். தமிழர்கள் அனைவரையும் அந்தமான் தீவுகளில் தி.மு.க. என்றுதான் பிற மாநிலத்தவர்கள் அழைக்கின்றார்கள். ஒரு அதிகாரி தமிழராயிருந்தால் அவரையும் தி. மு. க. என்றே அழைப்பதாகக் கேள்வியுற்றேன்.

மொழிப் பிரச்சனையைப் பொறுத்தவரை அந்தமான் தீவுகளில் உள்ள தமிழர்கள் மிகவும் தெளிவுடன் உறுதியாக இருக்கின்றனர். பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாகப் படவேண்டும், இந்தி மொழி தான் ஆட்சி மொழி என்று கூறி மற்ற தேசிய மொழிகளை ஒதுக்குவது அரசியல் சட்டத்தின்

அடிப்படை உரிமைகளுக்குப் புறம்பானது என்று நன்கு புரிந்து கொண்டுள்ளனர் மேலும் இந்தி மொழியை, பதினான்கு மொழிகளில் அதுவும் ஒன்று என்ற அளவிற்கு அதை மதிப்போம். ஆனால் இந்தி தான் ஆட்சி மொழி என என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்ற உறுதியை ஒவ்வொரு தொழிலாளி யிடமும் கண்டேன். நம் மொழிக் கொள்கையைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளதற்குச் சான்றாகப் பல வட நாட்டுத் தொழிலாளிகள் (பீகார் மாநிலத்தின் ராஞ்சிப் பகுதியிலிருந்து வந்துள்ளவர்கள்) கழகத்தைச் சார்ந்துள்ள அந்தமான் நிகோபார் யூனியனில் உறுப் பினராக அங்கம் வகிக்கின்றனர். மேலும் கழகக் கூட் டங்களிலும் அவர்கள் பங்கு பெறுவதைக் கண்டேன். இவர்களுக்காக யூனியன் நடத்தும் கூட்டங்களில் சில நிமிடங்கள் இந்தியிலும் நம் தோழர்கள் உரையாற்று கின்றனர். இந்தியிலும் கூட நம் தோழர்கள்தான் சிறப் பாக உரையாற்றுகிறார்கள்.


அந்தமான் தீவுகளில் கழகத்துக்குள்ள செல்வாக் கையும் ஆதரவையும் கண்டுபொறுத காமராசர், பலரை அனுப்பி வைத்தாராம். அந்த மான் சென்ற காங்கிரஸ் தோழர்கள் கழகத்துக்குள்ள ஆதரவைக் கண்டு பல கூட்டங்களில் அவர்கள் பேச்சைக் கேட்பதற்கு ஆளில் லாததால் உரையாற்றாமல் தலைகுனிந்து திரும்பினர் களாம். தமிழகத்தில் தான் எங்கு நோக்கினும் கழகக் கொடிகள் என்றால் இங்கும் இப்படியா எனக் குறைப் பட்டுக் கொண்டனராம்.

போர்ட்பிளேர் நகரிலிருந்து இரண்டுமைல் தொலை வில் ரோஸ் (Ross) தீவு என்ற அழகிய செழிப்பான சிறு தீவைப் பார்ப்பதற்காகச் சென்றோம். சுமார் மூன்றுமைல் சுற்றளவுள்ள அத்தீவு முன்பு வெள்ளையர் கள் ஆதிக்கத்தின் போது அரசாங்கக் காரியாலயங் களின் தலைமையிடமாக விளங்கி வந்துள்ளது. அத்தீவி லுள்ள பழைய அழகான கட்டிடங்கள் யாவும் அர சாங்கத்தின் கண் காணிப்பற்று அழிந்து கொண்டுள் ளன. அந்த கட்டிடங்கள் அனைத்திலும் ஓர் சோகமான கலையழகு நிரம்பியிருந்ததைக் கண்டேன்.

மேலும் குறிப்பாக அங்குள்ள சர்ச் மிகமிக அழகாக இருந்து அழிந்து கொண்டுள்ளது.அத்தீவு முழுதும் தென்னை, வாழை, கொய்யா, மா போன்ற மரங்கள் டங்கிய சோலையாக வுள்ளது. இதனூடே ஏராளமான மயில்களும் உள்ளன. அழகிய வெண்மணல் பரப்பும், வெளி நீலக்கடலும், பவளப் பாறைகளும்கடும் அலை கள் மோதி சிதைவுற்ற சிற்பங்களென விளங்கும் வித விதமான பாறைகளும் மறக்க வொண்ணாத காட்சிகள்!

போர்ட்பிளேர் நகரிலிருந்து 12 மைல் தொலைவில் சிலியாடாப் என்னும் இயற்கை எழில்நிறைந்த இடம் உள்ளது. உயர்ந்த தோங்கி விண்ணை முட்டும் பெரிய மரங் களும் தென்னந்தோப்புகளும், வழியில் நிறைந்துள்ளன.

ரைட்மேயா என்ற இடத்தில் மரங்களை வெட்டி உளநோக்கி



அந்தமானில் கழகப் பிரச்சாரம்

வந்துள்ள கடல் நீரில் ஒன்றுக் கட்டி மிதக்கவிட்டு 'சாத்தம்' மரம் அறுக்கும் தொழிற்சாலைக்குக் கொண்டு வருகின்றார்கள். அங்கு கொசுக்களும் இரத்தம் உறிஞ்சும் அட்டைகளும் நிறைந்துள்ளன. இப்படிப்பட்ட இன்னல்களையும் தாங்கிக் கொண்டு பாடுபட்டு வருகின்றனர் நம் தொழிலாளத் தோழர்கள்.

இவை அனைத்திலும் மிகவும் ஆபத்து என்று சொல்லத் தக்கது ஜரவா என்ற ஆதிக் குடியினர் கொடுக்கும் தொல்லைகள் தான். ஜரவாக்கள் என்பவர்கள் எப்படியிருப்பார்கள் அவர்கள் பழக்க வழக்கங்கள் என்ன என்று எவரும் இது வரை கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயினும் அவர்களின் ஆற்றல் அனைவருக்கும் தெரிந்துள்ளது. அவர்களின் ஆயுதம் வில் அம்புதான். ஜரவா இனத்தவர்களின் அம்பு நவீனகாலத் தொழிற்சாலையில் செய்வதை விட சிறப்பாக இருக்கின்றதாம். காட்டுப்பாக்கு என்ற மரத்தின் பாகங்களை நன்றாக இழைத்து, நுனியில் இணைக்கப்பட்டிருக்கும் இரும்பையும் சேர்த்துப் பயன்படுத்தினால் குறிவைக்கப்படும் இலக்கு எதுவானாலும் முடிவு சாவு ஒன்று தான்! அவர்களுக்கு இரும்பு எப்படிக் கிடைக்கின்றது என்று எவருக்கும் புரியவில்லை. அவர்கள் உணவு மான், மீன். காட்டுப்பன்றி மற்றும் தேன். அவர்களிடையே ஒரு தனி அரசாட்சி முறையே இருப்பதாகவும் கூறுகின்றார்கள். அவர்கள் நிறைத்துள்ள பகுதியில் நம் தொழிலாளர்கள் பாதைபோடுதல், மரம் வெட்டுதல் போன்ற வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால், பாதுகாப்பிற்காக "புதர் காவலர்" என்ற ஒரு படையை நிறுவி ஒவ்வொரு இடங்களிலும் காவலாகப் பல துப்பாக்கிப் போலீஸ்காரர்களை அமர்த்தியுள்ளது அரசாங்கம்.

ஆயினும் ஜரவாக்களின் அம்புகளுக்குப் பலியான புதர் காவலர்களும் நம் தொழிலாளத் தோழர்களும் எண்ணிலடங்காதாம். பலியானவரின் தலையை மட்டும் வெட்டி எடுத்துச் சென்று தங்கள் அரசனிடம் கொடுத்து சன்மானம் பெறுவார்களாம்.

இதே போன்று நம்மைக் எதிரிகளாகக் கருதும் இனங்கள் சென்டினல்ஸ் மற்றும் நிகோபார்த் தீவுகளிலுள்ள சேம்பன்ஸ் தான். சென்டினல்ஸ் நிறைந்துள்ள ஒரு தீவு சென்டினல் தீவு என்று அழைக்கப்படுகின்றது. காலப்போக்கில் இவர்களின் மனம் மாறுபட்டு நாகரிக உலகில் காலடி வைத்து சமாதானமாக வாழ்வார்கள் என நம்புகிறார்கள்.

ஒன்ஜிங் என்ற பிறிதொரு இனம் மற்றவர்களுடன் நன்றாகப் பழகுகின்றார்கள். சின்ன அந்தமான் என்ற தீவில் இவர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து கொண்டுள்ளனர். ஆப்பிரிக்க ஆதிவாசிகளைப் போன்ற தோற்றத்தினைக் கொண்டுள்ளனர். குள்ளமான கட்டுடலுடன் இருக்கின்றார்கள். நிறம் கறுப்புத்தான். இன்றும் அரை நிர்வாணமாகத்தான் உள்ளனர். இப்பொழுது இவர்கள் இனத்தில் ஒரு சிலர் நல்ல நாகரிகத்துடன் வாழ்ந்து வருகின்றனர். சிலர் போலீஸ்காரர்களாக இருந்ததையும் பார்த்தேன். அரசாங்கம் இவர்களின் ஆரம்ப கால வாழ்விலிருந்து இன்று வரை நன்கு ஆராயுமானால் மானிட இயலில் இவைகள் யாவும் சுவை மிக்க பகுதியாக மாறக்கூடும்,

அந்தமான் மக்கள் தொகையில் இரண்டாவது இனமாக உள்ள தமிழர்களுக்குத் தமிழ் மொழி கற்றுத்தர எவ்வித ஏற்பாடும் அரசாங்கம் செய்யவில்லை. தொழிலாளிகள் வீடு கட்டிக்கொள்வதற்கும் அந்தமான் அரசாங்கம் எவ்வித வசதியும் செய்து தரவில்லை. தொழிலாளிகள் வீடு கட்டிக் கொள்ள நிலம் வாங்கவும் முடியாது—காரணம், ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும், நிலம் உட்பட அரசாங்கத்திற்கே சொந்தம். தமிழர்கள் என்றால் மருத்துவமனைகளில் மருத்துவ வசதியும் மறுக்கப்படுகின்றது. வேலையிலிருக்கும் தமிழர்களை நீக்கிவிட்டு வடவர்களைத் திணிக்கின்றனர்; அக்கிரமமான வழக்குகள் தொடுக்கப்பட்டு சிறைச்சாலையில் தள்ளுகின்றனர்; கழகத்திற்கு வாதாட உண்மையான வழக்கறிஞர் எவருமிலர். மேலும் தேர்தல் நேரத்தில் வாக்குரிமையைப் பறிக்கும் முறையில் தமிழர்களை நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் வேலை மாற்றம் செய்து வாக்களிக்க வகையற்றவராக்கி விடுகின்றனர்.

கழகத் தோழர்கள் பல தீவுகளுக்கும் சென்று பொதுக் கூட்டங்கள் நடத்தவேண்டி விரும்பியதால் லிட்டில் அந்தமான் என்னும் விசைப் படகில் புறப்பட்டோம். வழியெல்லாம் கவினுறு காட்சிகள் மனத்தை விட்டகலாத வண்ணமிருந்தன. நார்த்பே என்னுமிடத்தில ஓர் பெரிய, பல மைல்கள் பரப்பளவுள்ள பல உயரமான குன்றுகள் நிறைந்த தீவு. தீவு முழுதும் தென்னை மரங்கள். எதிரே வெண் மணற் பரப்பு. அலை மோதும் கரு நீலக்கடல். நாழிகள் என்று சொல்லப்படும் இரு பக்கமும் தீவுக் கூட்டங்கள். இடையில் 100 அடி அகல முள்ள கடலில் விசைப்படகு செல்லுகின்றது. நாழிகளில் விசைப்படகு மெதுவாகச் செல்லுகின்றது. இரு பக்கங்களிலும் இருண்ட அடர்ந்த காடுகள். மற்றும் சிறுசிறு குன்றுகளடங்கிய சிறிய தீவுகள். மிகவும் அழகாக உள்ளன. வழியில் சில இடங்களில் 'புதர் காவலர்கள்' துப்பாக்கியுடன் தங்கள் குடிசைக்கு முன் காவலிருக்கின்றனர்.

உரல்கஞ்சு என்னும் தீவில் கழகத் தோழர்கள் காத்திருந்து வரவேற்றனர். இங்கிருந்து சில மைல் தொலைவில் பேரன் தீவு (barren island) என்னுமிடத்தில் எரிமலை ஒன்றுள்ளது. ஆனால் இது தீக்குழம்பைக் கக்குவதில்லையாம்.

மாலையில் நீளத் தீவை அடைந்தோம், அந்தமான் தி.மு.க அவைத்தலைவர் திரு.

கந்தசாமி மற்றும் தோழர்கள் வரவேற்றனர். மறுதினம் அதிகாலையில் ரங்கத் தீவுக்கு புறப்பட்டோம். வழியெல்லாம் காஷ்மீர் காட்சிகளை நினைவு படுத்தும் இயற்கை எழில் நிரம்பிய காடுகள், தீவுகள் நிறைந்துள்ளன.

பேடாபூர் படகுத்துறையிலிருந்து 7 மைல்கள் டிராலி என்னும் சிறு தண்டவாளத்தில் மரங்களை இழுத்துச் செல்லும் வண்டியில் பின்னல் இருவர் தள்ளிக் கொண்டு வர, மழையில் நனைந்து ரங்கத்தை அடைந்தோம்.

இரங்கத் அண்ணா மன்றத்தில் பொதுக் கூட்டம் நடந்தது. கடும் மழையிலும் பல தோழர்கள் நீண்ட தூரத்திலிருந்து வந்து கலந்து கொண்டனர்.

அந்தமானில் பல வேடிக்கையான சட்டங்கள் உண்டு. அவற்றில் மதுவிலக்கு பற்றிய சட்டம் குறிப்பிடத்தக்கது.

அந்தமானில் சாராயம் குடிக்கலாம். ஆனால் சாராயம் காய்ச்சக் கூடாது.

மறுதினம் பகுந்தலா நாவலர் மன்றத்தில் பொதுக்கூட்டம். பல தாய்மார்கள் உட்பட திரளான தோழர்கள் பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். பகுந்தலாவில் பணி முதலாளி பிர்லாவின் செயசிரீ பிளேவுட் தொழிற்சாலை உள்ளது.

மறுதினம் பேடாபூர் திருவள்ளுவர் மன்றத்தில் பொதுக் கூட்டம். அரசாங்கத்திடமிருந்து ஒரு லாரியை வாடகைக்குப் பெற்று ஒலிபெருக்கியைக் கட்டிக்கொண்டு பலமைல்கள் சென்று கூட்டத்திற்கு விளம்பரம் செய்துவிட்டு மீண்டும் இரவு பொதுக்கூட்டம் நடத்தியது. வேடிக்கையான அனுபவம் சுற்றிலும் மலைகள், பேசும் பேச்சு ஒவ்வொன்றும் மலையில் எதிரொலிப்பதை நாமே மீண்டும் கேட்கலாம். இங்கு பொதுக்கூட்டம் நடக்கும் சமயத்தில்தான் சென்னை மாநகராட்சியில் நம் கழகத்தின் முயற்சியால் திருவள்ளுவருக்குச் சிலையெடுத்த நேரம்.

பேடாபூரிலும் ஒரு மரம் அறுக்கும் அரசாங்கத் தொழிற் சாலை உள்ளது. இப்படிப் பல மரம் அறுக்கும் தொழிற்சாலைகள் இருந்தும் ஒரு காகிதத் தொழிற்சாலை கூட இல்லாமலிருப்பது அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையைத் தான் காட்டுகின்றது.

மறுதினம் அதிகாலையில் ரங்கத்பே கப்பல் துறைக்கு வந்து 'சொலங்கா' என்னும் சிறு கப்பலில் புறப்பட்டு மாயாபந்தர் சென்றடைந்தோம்.

மாயாபந்தர் கூட்டத்தை முடித்துக் கொண்டு மறுதினம் ரெஸ்ட்கேம்ப் என்னும் பகுதிக்குச் சென்றோம். இப்பகுதிகளில் தான் ஜரவாக்கா என்னும் ஆட்கொல்லி இனம் இருப்பதாகக் கூறினர்கள். அங்கு கொடியேற்றும் விழாவும் பொதுக்கூட்டமும் நடந்து முடிந்தது. பொதுக்கூட்ட மேடை போடுவதற்கு மூங்கில் வெட்டச் சென்ற தோழர்கள் அழகிய புள்ளிமான் குட்டி ஒன்றைப் பிடித்து வந்து அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

மீண்டும் கப்பலில் புறப்பட்டு ரங்கத் சென்று மீண்டும் ஒரு கூட்டம் நடத்திவிட்டு போர்ட்பிளேர் புறப்பட்டோம். வழி ஹேவுலாக் என்னும் தீவில் 30 தமிழர்களை திடீரென வேலையைவிட்டு நீக்கி விட்டார்கள் என்று செய்தியைக் கேள்வியுற்றோம். அப்பகுதிக்குரிய பொறியியல் வல்லுனரைச் சந்தித்து ஆவன செய்தோம். பல தீவுகளில் சுற்றுப் பயணம் செய்து விட்டு பத்தாவது தினம் போர்ட் பிளேர் நகரையடைந்தோம்.

மீண்டும் போர்ட் பிளேர், பிலானிபூர், பாறைப் பகுதிகளில் பொதுக் கூட்டங்கள் நடந்தன. விமான திடலிற்கு எதிரேயுள்ள கலிஞர் மன்றத்தில் உறுப்பினர்கள் கூட்டம் நடந்தது. விமான திடலுக்கு அருகிலுள்ள இந்த இடத்தைக் கழகமே விலைக்கு வாங்கியுள்ளது. அங்குள்ள உயர்ந்த கொடிக்



கம்பத்தில் பறந்து கொண்டிருக்கும் இருவண்ணக் கொடி விமானத்தில் வந்து இறங்கும் அதிகாரிகளையும் அமைச்சர்களையும் / கண்ணை உறுத்திக் கொண்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக மூங்கில் பண்ணையில் உள்ள எம். ஜி. ஆர் மன்றத்தை காலஞ்சென்ற பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் திறந்து வைத்தார். பல போலீசு அதிகாரிகள் அனுமதி மறுத்திருந்தும் கூட மூங்கில் பண்ணையில் படகுதுறையில் இறங்கியவுடன் பிரதமர் கண்ணில் பட்டது நான்கு தோரணங்களால் அலங்கரிக்கப் பட்ட எம். ஜி. ஆர் மன்றம் தான். நேராக மன்றம் நோக்கிச் சென்ற, மன்றத்தை திறந்து வைத்துவிட்டு அது மாற்றுக் கட்சியை சார்ந்தது தி.மு.க சார்பு மன்றம் எனத் தெரிந்தும் சில நிமிடங்கள் உரையாற்றிச் சென்றுள்ளார்.

மொத்தத்தில் 285 தீவுகளடங்கிய அந்தமான் நிகோபாரில் இன்னும் நூற்றுக்கணக்கான பெரிய தீவுகளில் எவரும் இன்றி காடுகள் மண்டிக் கிடக்கின்றன, பூமத்திய ரேகைப் பகுதியாய் இருப்பதால் பர்மா, மலேசியா, சிலோன் ஆகிய நாடுகளின் வெப்ப தட்பம் இத்தீவுகளுக்கு ஒத்திருக்கின்றது. மேலும் தமிழகத்தைச் சேர்ந்த சுந்தரம் அவர்கள் இத்தீவுகளின் குன்றுகளில் காப்பி பயிரிடுவதை ஆரம்பித்து வெற்றிகரமாக நிரூபித்தும் உள்ளார் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் இரப்பர் தோட்டமும் பயிர் செய்யலாம். மிகவும் விலை மதிப்பற்ற மீன்கள் கிடைப்பதால் பல இந்தோனேசியா, பர்மா மீனவர்கள் விசைப்படகில் இங்கு வந்து மீன் பிடித்துச் செல்கின்றனர் எனவே மீன் பிடிக்கும் தொழில் விரிவுபடுத்தி மீன் எண்ணெய் தயாரிக்கலாம் மீன்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்து அந்நியச் செலவாணியும் சேர்க்கலாம் மேலும் விவசாயத்திற்கு ஏற்ற நிலம் ஏராளமாக உள்ளதால் பர்மா தமிழர்களையும் சிலோன் தமிழர்களையும் வாழ்விக்க இத் தீவுகள்தான் மிகவும் சிறப்பாக இருக்கமுடியும். மேலும் இத் தீவுகளில் அவர்களை குடியேற்றி இடம் பெயர்ந்து வந்ததாக சிறிது கூட அவர்கள் எண்ணவும் வாய்ப்பிருக்காது. வாழை, தென்னை, பாக்கு மற்றும் அன்னாசிப் பழங்கள் ஏராளமாக விளைவதால் அவைகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

அந்தமான் தீவுக்கூட்டங்களின் இறுதித்தீவான கிரேட் நிகோபாவிலிருந்து இந்தோனேசியா சுமார் 40 மைல்கள் தான். பர்மா சுமார் 65 மைல்கள்தான் மலேசியாவும் 100 மைல்கள்தான் எனவே பாதுகாப்புத் துறையில் இத்தீவுகள் மிகவும் முக்கியமான இடத்தில் அமைந்துள்ளன. பல தீவுகளிருப்பதாலும் மற்றும் கடற்கரை பிளவு பட்டிருப்பதாலும் பல இடங்களில் இயற்கையான துறைமுகங்கள் கட்டி பெரிய கடற்படையை நிரந்தரமாக ஏற்படுத்த வேண்டும். சமீப காலங்களில் அந்தமான் கடலில் அடையாளம் காணமுடியாத நீர்மூழ்கிக் கப்பல்கள் காணப்படுவதாக செய்திகள் வருவதைப் பார்க்கும் போது கப்பற்படையின் முக்கியத்துவம் எளிதில் புரியும் மேலும் பல அழகிய காட்சிகள், மான் கூட்டங்கள் நிறைந்த காடுகள், காட்டுப் பன்றிகள் என பயணிகளுக்குக் காணவும் வேட்டையாடவும் வசதி உள்ளதைக் கருத்தில் கொண்டு இத்தீவுகளை ஹவாய் (Hawai) தீவுகளைப் போல வெளிநாட்டுப் பயணிகள் வருவதற்கு வேண்டியதையும் செய்யலாம்.

கார் நிகோபார்தீவு கடந்த மூப்பதாண்டுகளாக அகூஜி என்னும் கப்பல் முதலாளியின் நேரடிப்பார்வையில் இருந்து வருகின்றது. கார்நிகோபார் தீவு முழுதும் தென்னையும் பாக்கும் நிறைந்துள்ளன. அங்கு வாழும் ஒழிஞ்சி என்னும் நிகோபார் இன மக்கள் குற்ற மற்றவர்கள். இப்படிப்பட்ட வளமான செல்வம் கொழிக்கும் தீவை அகூஜி என்னும் பண முதலாளிக்குப் பல ஆண்டுகளாகக் குத்தகைக்கு விட்டிருக்கின்றது அரசாங்கம். அங்கு எவர் செல்ல வேண்டுமானாலும் அரசாங்கத்தின் அனுமதி பெற்றுப் பிறகு அகூஜிக்கு சுங்கம் செலுத்தி அனுமதி பெற்றுத்தான் கார் நிகோபார் தீவில் காலடி வைக்க முடியும்.

அந்தமான் தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வைத்திருக்கும் பற்றும் பாசமும் அளவிடமுடியாத நம்பிக்கையும் வாழ்வில் நல்லொளி காட்ட வேண்டுமென்ற ஆவலும் கண்டு, இன்ப நினைவுகளை நெஞ்சில் ஏந்தித் தாயகம் திரும்பினேன்.





கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. காலையில் இந்த நேரத்தில் வந்திருப்பது யாராக இருக்கக் கூடும்; என்கிற சந்தேகம் மனதில் ஊசலாட, திறந்து பார்த்தால் தெரிகிறது என்ற முடிவுடன், கையிலிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு, கதவை நோக்கி நடந்தாள் விமலா. அவள் கணவன் வெளியில் போயிருந்தான். வேலைக்காரி மார்க்கட்டுக்குப் போயிருந்தாள்.

வந்திருந்தது ஒரு பெண். அவளைக் கண்டவுடன் அடையாளம் கண்டு கொண்டாள் விமலா.

"நீயா?"

"ஆம்! நான் தான்..."

"இங்கே எங்கு வந்தாய்?"

"ஏன் வரக் கூடாதா?...எல்லாவற்றையும் இங்கேயே கேட்டு...இப்படியே அனுப்பி விடப் பார்க்கிறயே...உள்ளே போய்ப் பேசலாமே?"

"உள்ளே அவர் இல்லை... வெளியில் போயிருக்கிறார்."

"இருக்கட்டுமே..... நான் என்ன புலியா..சிங்கமா? நானும் உன்னைப் போல ஒரு பெண் தானே... ஏன் என்னிடம் உனக்குப் பயமா?"

விமலா சிரிக்க முயன்றாள். "அதெல்லாம் ஒன்றுமில்லை ...நீ அவருடன் தானே பேச வந்திருப்பாய்...? அவர் இல்லையே என்றேன்"

"அவர் வரும் வரைக்கும் இங்கே தங்குவதில் உனக்கொன்றும ஆட்சேபனை இல்லையே?"

அவள் கேட்க, விமலா வேண்டா வெறுப்பாக "இல்லை" என்றாள்.

அவள் உள்ளே நுழைந்தாள். நாற்காலியில் சுதந்திரமாக உட்கார்ந்து, வீட்டைச் சுற்றி முற்றும் பார்த்தாள். வசதியான இடந்தான் என்கிற எண்ணம் அவள் மனதில் விழாமல் இல்லை.

விமலாவுக்கு, அவளிடம் பேசிக் கொண்டிருக்கப் பிடிக்க வில்லை. அதே சமயத்தில் அவளைத் தனியே விட்டுப் போகவும் மனதில்லை. அதற்காக அவள் எதிரில் பேசாமல் நின்று கொண்டிருக்க முடியுமா? உள்ளே போய், அவளுக்கு ஒரு 'கப்' காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். தனக்கு விமலா காப்பி கொண்டு வந்து கொடுக்கக் கடமைப் பட்டவள் போல, அலட்சியமாக அவள் அதை வாங்கிக் குடித்தாள்.

காப்பியைக் குடிக்கும் போது, விமலா அவளை நன்றாகக் கவனித்தாள்.

இந்த ஆறு வருடங்களில் அவள் அதிகம் மாறிவிட வில்லை. உடம்பில் கொஞ்சம் சதை போட்டிருந்தது. செய்து கொண்டிருந்த தேவையில்லாத அலங்காரத்தினால் வெறியூட்டும் 'கவர்ச்சி' அவளிடத்தில் இடம் பெற்றிருந்தது. அதனால் ஏற்பட்டிருந்த அலட்சியமான போக்கு...

அவள் பெயர் சாந்தா...

இருப்பினும்...சாந்தத்திற்கும்...அவளுக்கும் சம்பந்தமே இல்லை.

காப்பியைக் குடித்து முடித்தவுடன், குவளையைக் கீழே வைத்துவிட்டு, விமலாவை நோக்கி,

"பையனை எங்கே காணோம்?" என்று கேட்டாள்.

எந்தக் கேள்வி, அவள் வாயிலிருந்து வரக்கூடாது என்று நினைத்தாளோ, அந்தக் கேள்வி, கடைசியில் வந்து விட்டது.

"பள்ளிக்கூடம் போயிருக்கிறான்..."

"ஓ! பள்ளிக்குப் போகிறானா?" சாந்தாவின் முகத்தில் பெருமிதம்.....

"அவன் எப்படியிருக்கிறான்?" அவள் அடுத்த கேள்வி இது.

"ஏன் நன்றாகத்தான் இருக்கிறான்?" வெறுப்பாகப் பதில் சொன்னாள் விமலா...

வெறுப்புணர்ச்சியை சாந்தா புரிந்து கொண்டவள் போல, விமலாவை நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீ பேசும் தோரணையைப் பார்த்தால், நான் இங்கே வரக் கூடாது என்று சொல்லுவது போலல்லவா இருக்கிறது?" என்று சாந்தா கேட்க...சிரமத்தோடு சிரிப்பை வரவழைத்துக் கொண்ட விமலா,

"ஆமாம்! நீ இங்கு எதற்காக வரவேண்டும்? உனக்கும்... இந்த வீட்டிற்கும் என்ன உறவு?" என்று கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்.

"என்ன அப்படிக் கேட்டு விட்டாய்? என் மகனைப் பார்க்க நான் வரக் கூடாதா?"

"உன் மகனா? அப்படியொரு உரிமையும் உனக்கு இருப்பதாகத் தெரியவில்லையே?" விமலாவுக்கு கோபம் வந்தாலும் அதை அடக்கிக் கொண்டாள்.

"அவனுடைய தாய் நான் தானே?...இத்தனை வருடங்களாக நான் அவனைப் பார்க்க வரவில்லை யென்றால், அந்த உரிமை போய்விடுமா?"

"போய்விட வேண்டும் என்றுதான், அதை நாங்கள் பணம் கொடுத்து வாங்கி விட்டோம்...இன்னும் கொஞ்சம் அதிகப் படியாகச் சொல்லப் போனால், நீ, எங்கள் அனுமதிக்குப் பிறகு தான், எங்கள் மகனைப் பார்க்க வர வேண்டும்." விமலாவின் குரலில் கடுமை நிறைந்திருந்தது.

"பத்து ரூபாய் பணத்திற்காக என் மகனை நான் ஆறு வருடங்களுக்கு முன், உங்களுக்கு விற்றுவிட்டேன் என்பது உண்மையே...! ஆனால் சட்டபூர்வமாக அவன் இன்னமும் என் மகன்தானே?" சாந்தா அழுத்தந்திருத்தமாகக் கேட்டாள்...

"சரி...அப்படியே இருந்தாலும், அதற்காக இப்போது என்ன செய்யச் சொல்லுகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் விமலாவின் கணவன் வாசு.

அவனைக் கண்டவுடன் விமலாவுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது...சாந்தாவின் முகப் பாவமோ சட்டென்று மாறியது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள்...

"பணத்தைக் கொடுத்து விட்டு என் மகனைப் பெற்றுப் போகலாம் என்று வந்திருக்கிறேன்" என்றாள் அவள் அலட்சியமாக.

வாசு வந்திருக்கிறான் என்பதற்காக அவள் எழுந்து அடக்க ஒடுக்கமாக நிற்கவில்லை.

"இத்தனை வருடங்கள் நாங்கள், அவனை, எங்கள் மகனைப் போல் வளர்த்த பிறகு, இப்போது நீ உரிமை கொண்டாட வருகிறாய்...! நடக்கிற காரியமா இது?"

"ஏன் நடக்காது? அவன் என் குழந்தை என்பதை நான் நிரூபித்து விட்டால்...?


வாசு யோசித்தான்.

இவளிடம் அப்போது எழுதி வாங்கிக் கொள்ளாமல் விட்டது தவறுக அல்லவா தெரிகிறது? நகரசபைப் பதிவேடுகளில், குழந்தையின் தாய்—தந்தை யென்று, சாந்தாவின் பெயரும் அவள் கணவனின் பெயரும் தானே பதிவாகியிருக்கும்? கணவன் இவளை விட்டு விட்டு ஓடிவிட்டான் என்பதற்காக அவனும் குழந்தையின் உரிமையை விட்டுக் கொடுப்பானா?

"நீ நிரூபிக்க முடியும்... இல்லையென்று நான் சொல்ல வில்லை. அவன் உன் குழந்தை தான்...இருப்பினும் அவனை இவ்வளவு வருடங்கள் வளர்க்க எனக்கு ஐயாயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது... அதைக் கொடுத்து விட்டு, நீ உன் மகனை அழைத்துப் போ!"

விமலா இடை மறித்தாள்...

"என்ன இது? நீங்கள் இப்படிப் பேசுகிறீர்களே?"


"நீ பேசாமல் இரு...உனக்கு ஒன்றும் தெரியாது... விவகாரம் என்று வந்தால், கடைசிவரை பார்த்துவிட வேண்டும்" என்றான் அவன்.
இந்தப் பயமறுத்தலுக்கும் சாந்தா அசைந்து கொடுத்ததாகத் தெரியவில்லை.
"நான் உங்களைச் செலவு செய்யச் சொன்னேன்? அதனால் என்னிடம் பணம் கேட்டுப்பயனில்லை..."

"அதே போல்...எங்களிடம் குழந்தையைக் கேட்டும் பயனில்லே போய் வா!"

வாசுவின் பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தது. சாந்தா யோசிப்பவள் போல் தோன்றினாள். வாசுவிடம் முரட்டுத்தனமாகப் பேசிப் பயனில்லே என்பதை அவள் உணர்ந்திருக்க வேண்டும். அதனால் தான் அவள் குரலில் இருந்த கண்டிப்பு மறைந்தது. மகனைப் பெற வேண்டும் என்பதற்காகவா அவள் அங்கு வந்தாள்?

"என் மகனை நீங்கள் என்னிடம் கொடுத்து விட நான் என்ன செய்ய வேண்டும் அதைச் சொல்லுங்கள்!" என்றாள் அவள்.

"பிள்ளை இல்லாத குறையைப் போக்கிக் கொள்ளத்தானே உன்னிடமிருந்து குழந்தையை நாங்கள் வாங்கிக் கொண்டோம். உன்னால் அப்போது, அவனை வளர்க்க முடியாததால் எங்களுக்கு விற்றாய். ...அத்துடன், அவனைப் பற்றிய சகல உரிமைகளையும் எங்களுக்குக் கொடுத்து விட்டாய். என்று அர்த்தம். திரும்பக் கேட்பதில் அர்த்தம் இல்லே" என்றான் வாசு...

"கொடுத்தேன்...உண்மை... ஆனால் இப்போது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்தால், அவனை நான் மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும்..."

"உண்மை தான்..." வாசு மென்று விழுங்கினான். அவளைப் பார்த்தால், கொஞ்சம் வசதியோடுதான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாள் போலத் தெரிகிறது. யாரோ அவளுக்கு உதவி செய்யவும் முன் வந்திருக்கிறார்கள் போல் தெரிகிறது. இந்த நிலையில் சட்டம் அது இது என்று பணத்தை வாரி இறைத்து, முடிவில் தோல்வியைப் பரிசாகப் பெறுவானேன்? ஏதோ ஒரு முடிவுடன் வந்திருக்கும் அவளைச் சமாளிக்க, குறுக்கு வழியைக் கையாண்டால்தான் முடியும்! குழந்தை மணியை இந்த ஆறு வருடங்களிலும், எவ்வளவு அருமையாக வளர்த்திருப்பார்கள்? அப்படி வளர்த்தது...இப்படித் தூக்கிக் கொடுக்கவா? எரிச்சலாக வாசு அந்த முடிவுக்கு வந்தாலும், விமலா அதற்குத் தயாராக இல்லை! பாசத்தையெல்லாம் கொட்டி வளர்த்த குழந்தையை அவள், பெற்றவள் கேட்டாலும் கொடுக்க மாட்டாளே? வாசு சாந்தாவிடம், அமைதியாகப் பேசினான்...

"இந்தக் குழந்தையை நாங்களே வைத்துக் கொள்ள நாங்கள் என்ன செய்ய வேண்டும், அதைச் சொல்...!" இது வாசு.

"நீயே யோசித்துப் பார் சாந்தா.. மணியை நாங்கள், எங்கள் குழந்தையைப் போல வளர்த்து விட்டோம் ..இப்போது அவனைப் பிரிந்து எங்களால் வாழ முடியுமா?" என்றாள் விமலா.

அவளிடம், அவர்கள் கெஞ்ச வேண்டிய நிலை. அதை எதிர் பார்த்துத்தான் அவள், அப்படி நடந்து கொள்ளுகிறாளா?

"உங்கள் நிலை உண்மையில் பரிதாபத்திற்குரியது தான். ஆனால் என் கணவர், திரும்ப வந்து குழந்தை எங்கே என்று கேட்கிறாரே.....அதற்கென்ன பதில் சொல்லட்டும்?" கொஞ்சம் இறங்கி வந்தாள்.

"காணமல் போய்விட்டது என்று சொல்லிவிடேன்" யோசனை சொல்லியது வாசு.

"இப்படி ஒரு இடத்தில் வளர்வதாகச் சொல்லி விட்டேனே ...?"

"சரி...மேலே கொஞ்சம் பணத்தைக் கொடுத்தால் உன் கணவன் சமாதானமடைந்து விடுகிறான்..."

சாந்தா எதிர்பார்த்த பேச்சு வந்துவிட்டது.

"மேலே எவ்வளவு கொடுப்பீர்கள்?" சட்டென்று கேட்டு விட்டாள் அவள். அதற்காகத்தானே வந்திருக்கிறாள்?

"நூறு ரூபாய் தருகிறேன்" அதையே அதிகமாக நினைத்து வாசு பேசினான்.

"நூறு ரூபாயா...? பூ... மிகவும் குறைவு... நான் ஆயிரக் கணக்கில்லல்லவா எதிர் பார்த்தேன்?

"ஆயிரக்கணக்கிலா?" வாசு வாயைப் பிளந்தான்.

"ஆமாம்! இல்லையென்றால் என் கணவரைச் சமாதானப் படுத்த முடியாதே—?"

"அதற்கு என்னிடம் வசதியில்லை...நான் ஏதோ குறைந்த வருமானத்தில் அமைதியாக காலத்தை ஓட்டிக் கொண்டு வருபவன்..."

சாந்தா இரண்டொரு வினாடி யோசித்து விட்டு,

"அப்படியென்றால், ஒன்று செய்யுங்கள்... மாதம் ரூபாய் நூறைக் கொடுத்து விடுங்கள்"

"நிரந்தரமாகவா?"

"அது பேராசை அல்லவா...? ஐந்து வருடங்களுக்குக் கொடுங்கள் போதும்...!"

வாசுவிற்குக் கோபம் வர இது போதும். 'விசுக்' கென்று தன் இருக்கையை விட்டு அவன் எழுந்துவிட்டான்.

"என்னை முதலாளி என்று நினைத்துக் கொண்டாயா? எனக்கு வரும் வருமானத்தில் உனக்கு நூறு ரூபாயைத் தூக்கிக் கொடுத்து விட்டால்... நான் பிழைப்பது எப்படி?" என்றான்.

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? குழந்தை வேண்டுமென்றால் சிரமப் பட்டுத்தானே ஆக வேண்டும்?" என்றாள் சாந்தா அமைதியாக.

"என்னால் அவ்வளவு கொடுக்க இயலாது..." என்று அவன் முடிவாகச் சொல்லி விட்டான்...

குறைக்கவும் அவள் தயாராக இல்லை. கணவன் வருவான் என்று பயமுறுத்திப் பார்த்தாள். கோர்ட்டுக்குப் போவேன் என்று கூடச் சொல்லிப் பார்த்தாள்.

இவைகளின் மூலம் அவள் பணம் பறிக்க வந்திருக்கிறாள் என்பதை அவன் தெளிவாகத் தெரிந்து கொண்டானேதவிர

டைய பேச்சுக்களைப் பொருட் படுத்தவே இல்லை. விமலா, கணவனின் போக்கிற்கு விட்டு விட்டாள். இல்லை யென்றால், குழந்தை அவளிடம் தங்க முடி யாதே!

சாந்தா குழந்தை மணியைப் பார்க்க விரும்பினாள். அந்த வேண்டு கோளுக்குக் கூட வாசு செவிசாய்க்கவில்லை. அவன் சொன்ன ஒரே பதில்

"உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள்...!" என்பது தான்.

திட்டத்தோடு வந்தவள் கோபத்தோடு திரும்பினாள்.

2

உண்மையில், கையில் இருந்த குழந்தையை விற்றாவது, இரண்டு நாள் வயிறாரச் சாப்பிட முடியும் என்று தான் சாந்தா, அப்போது குழந்தையை விற்றாள். பிச்சை எடுக்கப் பயந்து கணவன், அவளை விட்டு ஓடிய பிறகு, அவளுக்கு அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. மணி அப் போது ஆறு மாதக் குழந்தை குழந்தையே இல்லாத தம்பதி கள், பணத்தைக் கொடுத்து குழந்தையை வாங்கிக் கொண் டனர். குழந்தையை விற்ற தினத்திலிருந்து சாந்தா 'புதிய' தொழிலில் இறங்கி விட் டாள். ஓயாத வருமானம். நிலை உயர்ந்தது. அப்போது கூட அவளுக்குத் தன் குழந் தையின் நிலையைக் குறித்து, கவலை ஏற்படவில்லை. அவளை ஒரு தொல்லையாகவே அவள் நினைத்தாள். தாய்ப்பாசம்— அது—இது என்கிறார்களே... அது எல்லா தாய் மார்களிட முமா இருக்கிறது? சாந்தா வைப் போன்ற பெண்களே உலகத்தில் இல்லையா? இருக் கிறார்கள்! அவர்களுக்குப் பெற்ற குழந்தைகளை விற்று விடுவதும், விட்டுப் போவதும் சகஜமான தொழில்! சுய நலம் தான் அதற்கு அடிப்படை— அதற்கு 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானு?" என்கிற பழைய மொழி தையி யம் சேர்க்கும் மந்திரம்! நல்ல வர்கள் மட்டும் நடமாடும் இடத்தில், கெட்டவர்கள் எந்த ரூபத்திலாவது இருப்பதில்லை யா...? அதைப் போலத் தான் இதுவும்...!

மேனியின் பள பளப்பு குறைந்தவுடன் சாந்தாவின் தொழிலில் 'சுறுசுறுப்பு' குறைந்து விட்டது. உள்ளூர் வாடிக்கைக் காரர்கள் சுத்த மாக அவளைத் தேடிக் கொண்டு வருவதையே நிறுத்தி விட்டனர். வெளியூர் காரர்களுக்கு புதுமுகங்கள் கிடைக்கும் போது பழைய முகங்களிடம் ஏன் வருகிறார் கள்? வசதியான வாழ்க்கை யில் மீண்டும் ஒரு மாற்றம்— இருந்ததைக் கொண்டு, அவ ளால் சில நாட்கள் காலந் தள்ள முடிந்தது. ஓடிப் போன கணவனை, அவள் நிலைபுரிந்து வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டான். பழையவளை விட புதியவள், சகல விதத்தி லும், அவனுக்கு ஏற்ற வகை யில் இருந்தாள். சாந்தாவுக்கு வசதி குறையவே, அடுத்து என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசித்தாள் கணவனி டமும் போக முடியாது. பழைய வாழ்க்கை நடத்தவும் உடலில் கவர்ச்சி யில்லை.—

ஒரே ஒரு வழி?

குழந்தையைக் கொடுத்த இடத்தில், தொடர்ச்சியாக வரு மானத்திற்கு வழி செய்து கொண்டால் என்ன? எப்படி யும் குழந்தையை அவர்கள் கொடுக்க மாட்டார்கள். அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு பணத்தைப் பறிக்க லாம் எனறு நினைத்தாள்... அதற்காக தன் கணவனும், இதற்காகத் தன்னை வற்புறுத்து கிறான் என்று பொய் சொல்லி யும் பார்த்தாள்...ஆனால் வாசு தான் முடிவாகச் சொல்லி விட் டானே? கோர்ட்டுக்குப் போகாமல் ஏதும் நடக்காது என்பதாக, அவள் முடிவு கட் டிக் கொண்டு, தான் குடி யிருந்த வீதியில் இருந்த, ஒரு இளம் வக்கீலிடம் போய்ச் சேர்ந்தாள்.

"நீ பேசுவதைப் பார்த்தால் உனக்கும் குழந்தை முக்கிய மில்லை போல் தெரிகிறது... மாதாமாதம் பணம் வந்தால் போதும் என்று பார்க்கிறாய்... இல்லையா?"

"மணி பெரியவனாகி விட் டால் எனக்குச் சம்பாதித்துப் போட மாட்டானா சார்? அதைப் போலத்தான் இதுவும். அவன் பெயரைக் கூறிக் கொண்டு நான் நிம்மதியாக வாழவேண் டும்...பாருங்கள் அது கூட இல்லாவிட்டால் நான் பிழைப் பிற்குப் பிச்சை எடுக்க வேண் டியது தான்..."

"அதைவிட கணிசமான ஒரு தொகையை வாங்கிக் கொண்டால், நீ ஒரு கடை வைத்துப் பிழைத்துக் கொள்ள லாமே!"

"அதற்குத்தான் அந்த வாசு ஒத்து வரமாட்டேன் என் கிறாரே!"

"அவர் என்ன ஒத்து வரு வது? நான் சொல்கிறபடி செய்! மணி பள்ளிக்கூடத்தி லிருந்து வரும்போது அவனை, நீ, கூட்டிக் கொண்டு வந்து எங்காவது ஒரு ஓட்டலில் தங்கிக் கொள்...பிறகு எனக் குப் போன் செய்! ரூபாய் பத் தாயிரத்தைக் கொண்டு வந்து கொடுத்தால் தான் மணியை விட முடியும் என்று சொல்லி பணத்தைப் பெற்றுக் கொள்ள லாம்!" என்றார் வக்கீல்.

"அடே...டே...இது ரொம்ப பயங்கரமான வழி சார்... எனக்குப் பயமாக இருக்கிறது சார்..."

"என்ன பயம்? சட்டப்படி அவன் உன் குழந்தை என் பதற்குத் தான் ரிகார்டு இருக் கிறதே... அவர்கள் கேஸ் போட்டு வேண்டுமானால், குழந்தையை அழைத்துக் கொள்ளட்டும்... அது வரை குழந்தை பாசத்தை அவர்க ளால் தாங்கிக் கொள்ள முடி யுமா?...அதனால் பணத்துடன் வருவார்கள்... இல்லையென்றால் உனக்குப் பணம் கிடைக்க வழியில்லை...கோர்ட்டில் கூட உனக்குக் குழந்தையைத்தான்

மீட்டுத் தருவார்கள்...யோசித்துப் பார்.''

''குழந்தை மணியை அழைத்துக் கொண்டு வந்து நான் என்ன சார் செய்யட்டும்? என் வயிற்றைக் கழுவிக் கொள்வதே பெரிய பாடாக இருக்கும் போது அவனையும் காப்பாற்றுவது எப்படி?''

''இதோ பார் சாந்தா... நீ எப்படி சொன்னலும் நான், அதன்படி நடக்கிறேன்... எனக்கென்ன? உன் நன்மைக்காக ஒரு யோசனை சொன்னேன். அயல் நாடுகளில் இம் மாதிரி வழக்குகள் தினமும் நடக்கின்றன...'' என்றார் வக்கீல்...

கடைசியில் சாந்தா வக்கீல் சொற்படி யெல்லாம் கேட்பதாக ஒப்புக் கொண்டாள்.

நாடகம் தயாராகி விட்டது. அதை அரங்கேற்ற வேண்டிய வேலைதான் பாக்கியாக இருந்தது.

3

''அதோ வருகிறான் பார் உன் மகன் மணி... பையைத் தோளில் போட்டுக் கொண்டு! அவனிடம் போய்... நீ அவன் வீட்டிற்கு வந்திருக்கும் புதிய வேலைக்காரி என்று உன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு அழைத்து வா!'' என்று வக்கீல், பள்ளி வாசலில் சாந்தாவை விட்டு விட்டுப் போய் விட்டார். அவளும் வேலைக்காரி போலவே அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்...

மணியின் கேள்விகளுக்கு அவளால் உடனுக்குடன் பதில் சொல்லுவது கடினமாகவே இருந்தது.

''இன்றுதான் உங்கள் வீட்டிற்கு நான் புதிதாக வந்திருக்கிறேன்'' என்பதைத் திரும்பக் கூறினாள். குழந்தை தானே? நம்பிவிட்டான்!

ஏற்கனவே அவள் எடுத்து வைத்திருந்த ஓட்டல் அறைக்குப் பையனைக் கொண்டு வந்து சேர்த்த பிறகு, பையன் வந்த விபரத்திற்கு வக்கீலுக்கும் தகவல் கொடுத்து விட்டாள்.

''வீட்டிற்குப் போகலாம்!'' என்று இரண்டொரு தடவை அடம்பிடித்த மணியின் கையில் அவள் சாக்லெட்டையும், மிட்டாய்களையும் கொடுக்க அவனும் அடங்கிவிட்டான்.

அப்போதே பணம் கைக்கு வந்து விட்டதைப் போன்ற நினைப்பு சாந்தாவுக்கு.

ஆனால் தன் மகனை வைத்துக் கொண்டு சம்பாதிக்கிறேமே என்கிற எண்ணம் அவளுக்கு எழவே இல்லை.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, போலீசார் அறைக்குள் நுழைந்தார்கள். மணி சுறு சுறுப்பாக எழுந்து உட்கார்ந்தான்:

''இந்தப் பையனைக் கடத்திக் கொண்டு வந்ததற்காக உன்னைக் கைது செய்கிறேம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''இல்லை சார்... இவன் என் மகன்... இதோ அத்தாட்சி... பாருங்கள்...''

''இவன் பெயர் என்ன?'' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''ஏன்? மணி!''

''இல்லையே என் பெயர் சேகர்...மணியே அல்ல... சார்... என்னை வீட்டிற்குக் கூட்டிப் போங்கள் சார்...'' என்றான் குழந்தை

''இல்லை... இவன் என் மகன் தான்...!''

''ஏனப்பா... இது உன் தாயா?''

''இல்லை சார்... இவர்களை நான் இதுவரை பார்த்ததே கிடையாது''

பெற்றவள் கண்ணீர் உகுத்தாள். அப்போது அங்கே வந்த வக்கீலின் மீது எரிந்து விழுந்தாள்...

''நீங்கள் அவளுக்காக வேலை செய்து விட்டீர்கள்''

''இல்லையம்மா... நான் என் கடமையைத்தான் செய்தேன். விற்ற குழந்தையை நீ மறுபடியும் வாங்க முயன்றது தான் தவறு! பாசத்தை அறுத்துக் கொண்ட பிறகு...மறுபடியும் அதைப் பயிராக்குவது கடினம்...''

இன்ஸ்பெக்டர் சாந்தாவை அழைத்துப் போக வாசு, மணியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போனான்.

''அப்பா, சொல்லிக் கொடுத்த மாதிரியே என் பெயரைச் சேகர் என்று சொல்லிவிட்டேன்! அப்பா நான் செய்தது சரிதானே?''

ரொம்ப சரி... வக்கீல் சித்தப்பா வந்தால் அவருக்கு நன்றி சொல்ல மறந்து விடாதே... தெரியுமா?''

''தெரியும் அப்பா...!''

இனி சாந்தாவின் தொல்லை இருக்காது என்பதை வாசு அறிவான்!



தரணி போற்றும் தமிழ் மரபு அழிக்கப்படுகிறது. அதைத் தடுக்க வேண்டும்; தமிழ் மரபை—தமிழ்ப் பண்பைத் தழைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம்.

அத்தகைய தமிழ் மரபில்—அரசியல் தலையிடுகிறது என்பதற்காகத் தான் நாங்களே கூட அரசியலில் நுழைந்திருக்கிறோம்.

—அறிஞர் அண்ணா


சென்னை
பிளாசா · மகாராஜா
மஹாலக்ஷ்மி · ஜெயராஜ்
மற்றும் தென்னகமெங்கும்
விவித பாரதியின்
மதுரஸ் TO
பாண்டிச்சேரி
நவீன நகைச்சுவை சித்திரம்
கதை, வசனம், டைரக்ஷன் : தி. சோமநாதன்
பாடல்கள் : ஆலங்குடி சோமு, தஞ்சை வாணன், பஞ்சு அருணாசலம்
இசை : மெல்லிசை மன்னர் T.K. ராமமூர்த்தி
ஒளிப்பதிவு : G. விட்டல் ராவ் : எடிட்டிங் : A. பால்துரைசிங்
கலை : H. சாந்தாராம் : ஸ்டுடியோ : ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிடோன்
மேற்பார்வை · A. பீம்சிங்
டைரக்ஷன் · திருமலை · மகாலிங்கம்


சினிமா சினிமா



கதை எழுதுபவர்களுக்கு, நான் சொல்லும் 'விஷயம்' சட்டென்று பிடிபடும்! வாரப் பத்திரிக்கையில் தொடர் கதைஎழுதி

னால், வாரந்தோறும், சுவையான திருப்பத்தோடு முடிவு பெறவேண்டும். அதாவது அடுத்த வாரம் என்ன வரப்போகிறது என்று வாசகர்கள் ஆவலோடு எதிர் பார்க்க வேண்டும். அதைப் போல, நாவல் எழுதும் பொழுது ஒவ்வொரு 'அத்தியாயம்' முடிகிற பொழுது நல்ல திருப்பம அமையும் வகையில எழுதி

டல் வேண்டும். அதைப் போல திரைக்கதை எழுதுபவர்களுக்கு, கடைசியில் நல்ல திருப்பம் இருக்கிற மாதிரியில், கதையில் உச்சக் கட்டத்தில் எதிர்பாராத நடப்புகள் ஏற்படுகிற மாதிரி அமைக்க வேணடும்! இப்படி, 'கதை



கிறார். இது, 'கனக வல்லியின் கதை' எனற என் எழுத்தோவியத்தை 'காபி' அடித்தது, ஆகவே, இதன் உரிமைக்காக எனக்கு இரண்டு இலட்சம் பணம் தேவை என்பது வழக்கின் அடிப்படை.

உலக' 'பிரம்மாக்கள்' 'கதைக் குடும்ப கட்டுப்பாட்டு' விதிகள் கூறுவார்கள்.

இங்கு சொல்லப்படுவது, திரைக்கதை பாணியில் சொல்லப்படுகிறது.

இரண்டு வகை இடங்கள்— ஒன்று கோர்ட் 'செட்'— மற்றவை 'அவுட்டோர்'

இதில் முக்கிய பாத்திரங்கள் மூவர். மூலக்கதை ஆசிரியர் முகிலன் — திரைக்கதை ஆசிரியர் தினகரன் — கதா நாயகி கனகவல்லி. இதில் கதாநாயகர்களும், வில்லன்களும் முகிலன், தினகரன் இருவருமே! ஏனெனில், இதில் 'வில்லன்' யார், கதாநாயகன் யார் என்பது நமக்குப் பிடிபட வில்லை. ஆனால், கதையின் நாயகி கனகவல்லியே!

இனி கதையின் சாரத்தைச் சொல்லட்டுமா? 'என் கதை' என்ற திரைப்படம் 'ஓகோ' என்று ஓடுகிறது! அதன் திரைப்படக்கதை, வசனம், டைரக்ஷன் யாவும் தினகரனே! இதைக் கண்ட முகிலன் ஒரு வழக்கு போடு தினகரன் இதனை எதிர்த்து வழக்காடுகிறார்.

இனி முக்கிய காட்சிகள் மூன்றினைக் காட்டினால், 'என் கதை' முடிந்துவிடும்.

[காலை மணி 11 — நீதிமன்ற மண்டபம், மக்கள் கூட்டத்தால் நிறைந்து வழிகிறது. நீதிபதி நிர்மலானந்தர் வருவது அறிவிக்கப்படுகிறது.]

காவலாளி:— அமைதி! அமைதி!

[நீதிபதி தம் இருக்கையில் வந்து அமர்கிறார். கலைமை

எழுத்தாளர் அன்றைய வழக்கை குறிப்பிட்டு, வழக்காடுபவர்களை அழைக்கிறார்]

தலைமை எழுத்தாளர்: முகிலன் Vs. தினகரன்.

[முகிலனும், தினகரனும் எதிர் எதிரில் வந்து நிற்கின்றனர்.]

த.எ:—முகிலன்.

[முகிலன் கூண்டில் ஏறி நிற்கிறார். பிரமாணம் செய்கிறார். முகிலன் வழக்கறிஞர் மணியன் விசாரணையைத் துவங்குகிறார்.]

மணியன்:— 'என்கதை'யை உங்கள் கதை என்று எப்படிச் சொல்கிறீர்கள்?

முகிலன்:— 'என்கதை'யின் கதாநாயகி பெயர் கனகவல்லி. இந்தக் கதையின் முற்பகுதியில் அவள் கிராமத்துப் பைங்கிளி கதையின் நாயகன், அவளை. அவளது சிற்றூரில் சந்திக்கிறான். காதலிக்கின்றான். காதல் கனிந்து விடுகிறது. பிறகு, 'நடை'யைக்கட்டி விடுகிறான், நகரத்திற்கு. ஊருக்குப் பயந்து கொண்டு ஏங்கித் தவிக்கிறாள், அந்த இளநங்கை, ஏது செய்வதென்றறியாது! காரிகையோ, காரிருளில், யாரும் அறியா வண்ணம், பெற்றோரை, உற்றாரை மறந்து, காதலித்து கைவிட்ட காதகனைத் தேடிப் புறப்படுகிறாள். அவள் நகருக்கு வந்து சேர்வதற்குள் அடுக்கடுக்கான துன்பங்கள். அவளோ, வண்ணமயில்—வாலிப மேகங்கள் சூழ்ந்து, அவளை ஆடச் செய்ய எத்தனை முயற்சிகள்.....

[முகிலன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில், ஒரு இளம் பெண், நீதி மன்ற மண்டபத்தில் எல்லோரையும் விலக்கிக் கொண்டு, வந்து அமர்கிறாள். அவள் முகிலன் பேசப்பேச, கண்ணீர் பொழிகிறாள்.]

மு: கதாநாயகன், கைவிட்டுவிட்டான் என்று அவள் எண்ணி, அவனைத் தேடி, அவன் குற்றத்தை எடுத்துக் காட்டி, தன் உயிர் மாய்த்துக் கொள்ளும் முடிவுடன் தேடுகிறாள் — தேடுகிறாள் — தேடிக் கொண்டிருக்கிறாள்..... ஆனால் அவனை, அவனைத் தேடி அலைகிறாள். இது அப்படியே 'என்கதை'யில் வருகிறது. பெயர் மாற்றம் செய்யக்கூட பிரதிவாதிக்கு சோம்பல்! சம்பவங்கள் அப்படியே— பெயர்களும் அப்படியே— வசனம்கூட ஏறத்தாழ இரண்டொருவார்த்தை மாற்றங்களுடன்—

பிரதிவாதி தரப்பில் முதல் சாட்சியாக தினகரன் அழைக்கப்பட்டார். அவரது வழக்கறிஞர் மாறன் விசாரணையைத் துவக்கினர்.]

மாறன்:—வாதியின் 'கனகவல்லியின் கதை'க்கும் உங்கள் 'என்கதை'க்கும் ஏதேனும் சம்மந்தம் உண்டா?

தி: 'என்கதை'யின் நாயகி, கிராமத்திலிருந்து வருகிறாள், கைவிட்ட கயவனைத் தேடி அவன் கிடைக்கவில்லை. அவள் பின்னர் சூளைபோடும் பானை வியாபாரியிடம் செல்கிறாள். அவன் அவளை தன் சகோதரியாக ஏற்று, பானை வியாபாரம் செய்ய நகரச்சந்தைக்கு, தினமும் அனுப்பி வைக்கின்றான். அங்கே, ஒரு கலைஞன் மயங்கி அவளை ஒரு பெரிய திரைப்பட அழகியாக்கத் திட்டமிடுகிறான். அவளை அழைத்து செல்கின்றான். ஆட, பாட,..... எல்லாம் கற்பிக்கின்றான். ஆனால், அவள் மீது அவன் விரல் கூடபட அவன் நினைக்கவில்லை. ஆனால் அவளோ, அவன் காதலுக்காக ஏங்கித் தவிக்கிறாள்..... இந்தப்பகுதி தான் கதையின் உயிர்ப் பகுதி. இதனை நானே சிந்தித்து எழுதினேன். இப்பகுதி 'கனகவல்லியின் கதை'யில் இல்லை. 'என்கதை'யின் உயிர் நிலையே, அந்தக் கலைஞனின் 'கலையுணர்வி' லேதான் நிற்கிறது— 'காம உணர்வு' இல்லை என்கிற பெரிய புதிய நிலையே, அக்கதையின் வெற்றிக்கு அச்சு!.....

[இந்நேரத்தில், மண்டபத்தில் வந்து அமர்ந்த அப்பெண், 'ஒ' வென்று கதறியழுதாள். கூடியிருந்தோர், அனைவரும் அவள் பக்கம் திரும்பினர். நீதிபதி நிர்மலானந்தர், அப் பெண்ணை அருகில் அழைத்தார்.]

நீதிபதி:— ஏனம்மா, இந்த வழக்குக்கும் உனக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? ஏன் அழுகிறாய்?

பெண்: ஐயா, இந்த 'என் கதை' என் சொந்தக் கதை. இந்த இருவரும், 'என் கதை'யைத்திருடிய கள்ளர்கள். இதில் முற்பகுதியில் கதா நாயகனை இருந்தானே, அவன் பிற்பகுதி 'வில்லன்'— பிற்பகுதி கதாநாயகனுக்கு 'வில்லன்'—முன்னால் கெடுத்தவன் முகிலன்—பிறகு ஆசை காட்டி, மோசம் செய்து இங்கு கொண்டு வந்து விட்ட கயவன் —இரண்டாவது கதாநாயகன் தினகரன். இவன் கையில் சிக்கி, தினம் திரைப்பட அழகி'யாக, எத்தனை அலங்கோலங்கள்—பின் விரட்டப்பட்டேன். இப்பொழுது, நடு வீதியிலே நிற்கின்றேன்! ஆனால் 'என் கதை'க்கு இந்தப் பாவிகள் போட்டியிடுகிறார்கள். என் வாழ்வைப் பாழ் அடித்து விட்டு, அதனையே கதையுமாக்கி, அதில் அவரவர்கள் தாங்கள் நற்குண சீலர்கள் என்று வேறு சித்தரித்துக் கொண்டுள்ளார்கள் இந்த இரண்டு மனிதப் புலிகளிடையே சிக்கியமான் ஐயா, நான். கனகவல்லி என்று குறிப்பிட்டார்களே! அந்தக் காட்டுர் கனகவல்லி நான் தான் பிறகு மேட்டூர் கனகவல்லி என்று பேசினார்களே, அந்த மேட்டூரில், என்னை, என் அழகை, இளமையை, குடித்துவிட்டு விரட்டிவிட்ட பாவிகள்.....

'கனகவல்லியின் கதை'யும் 'என்கதை'யும், என் வாழ்க்கைக் கதை.....இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகள் இருவரும், 'கதை' திருடிகள் மட்டுமல்ல, 'வாழ்வு திருடிகள்' ...நல்ல தீர்ப்பு தாருங்கள்.

[அவள் கதை கேட்ட நீதிபதி நிர்மலானந்தர் மயங்கி, மேசையில் சாய்ந்தார். மண்டபத்தில் ஒரே பரபரப்பு.]


பிப்ரவரி வெளியீடு
பாலன் பிக்சர்ஸ்
சபாஷ் தம்பி
டைரக்ஷன் ஐம்பு
கதை மகேந்திரன் B A
வசனம் முல்லை சத்தி
இசை எஸ்.எம்.எஸ்
பாடல்கள் வாலி · கர்ணன்
ஒளிப்பதிவு ஸ்டூடியோ வரதன் · வாஹினி
தயாரிப்பு · K.R.பாலன்



பாடல்கள் வாலி இசை K.V.மஹாதேவன் கலை P.அங்கமுத்து காமிரா T.M.சுந்தரபாபு B.A.L.C.E எடிட்டிங் R.தேவராஜன் வசனம் சந்தானமியன்

மனிதன் எங்கே?

மனிதன்

மனிதன் என்று யாரை
சொல்லலாம் என்ற ஆராய்ச்சி
இன்னும் முடிந்தபாடில்லை.
எல்லாவித வசதிகளோடு
வாழ்பவன் தான் மனிதனு
அல்லது ஒருவித வசதியும் இல்
லாமல் வாழ்பவன் தான் மனி



சிங்கனேச்சிற்பி
சி.பி.சிற்றரசு

தனு அல்லது அரசாங்கத்தால் எல்லா உரிமைகளும் பெற்று வாழ்பவன்தான் மனிதனு, அல்லது ஒரு வித உரிமையுமில்லாமல் வெறும் மனித யந்திரமாக வாழ்பவன் தான் மனிதனு, மனித உறுப்புகளோடு கூடிய ஒரு உருவம் தான் மனிதனு என்ற கேள்வி சமுதாயத் துறையிலேயும், அரசியல் துறையிலேயும் எழுந்தவண்ணம் உள்ளன. ஓர் அறிஞர் சொன்னதைப் போல், மனிதன் சிந்தனை யந்திரம் என்று வைத்துக் கொண்டால், மனிதன் சிந்திக்கத் தொடங்கி, தாழ்ந்து விட்ட தன் வாழ்வை எண்ணி கோபித்து குமுறி எழுந்தால், அவனைக் கிளர்ச்சிக்காரன்; தண்டிக்கப்பட வேண்டியவன், சமுக விரோதி, சட்டங்களை மதிக்காதவன், கலகக் காரன், கபோதி என்றெல்லாம், சந்தர்ப்ப வசத்தால் ஆட்சியில் அமர்ந்திருக்கிற வேரோர் மனிதன் குற்றம் சுமத்துகிறான். அப்படியானால் குற்றம் சுமத்தியவன், குற்றம் சுமத்தப்பட்டவன் ஆகிய இருவருமே மனிதர்கள் என்று ஒப்புக் கொண்டால், இவர்களிடையே ஏற்பட்ட வேறுபாடுகள் என்னவென்பதை நாம் கவனித்தாக வேண்டும்.

மக்களுக்கு நல்வழி காட்டிய மதத்தலைவர்கள், சீராக நடக்கச் செய்த சட்டங்கள், மக்கள் மேன்மையுற வாழ வேண்டுமென்று விரும்பிய பெற்றோர். அறிவுக் கண்களைத் திறந்த ஆசிரியர்கள், அவ்வளவு பேரும் சேர்ந்து ஒருவனை நல்லவனுக்க வேண்டுமென்று முயற்சித்தும், இன்னும் காவலர் முகாம்கள், சிறைச்சாலைகள், தூக்குமேடைகள் தேவைதானு? என்றால் தேவை இல்லை என்று சொல்லும் அளவுக்கு காலம் தயாராக இல்லை. காலம் வழி விடவில்லை.

பணத்தை என்ன செய்வது என்று நினைக்கும் மனிதனும் பணத்திற்கு என்ன செய்வது என்று சிந்திக்கும் மனிதனுக்கும் இடையேயிருப்பது எது? சமுக அமைப்பா, சட்டங்களின்பலவீனமா, ஆள்பவரின் அசட்டுத்தனமா. எவை என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணமென்ன? யார் இவைகளைக் கவனிக்க வேண்டுமோ, எந்த சக்திகள் இவற்றிற்கு தீர்வு காண வேண்டுமோ எந்த சமூகம் மனவிறக்கம் கொள்ள வேண்டுமோ அவைகள் அவ்வளவும் வலி குன்றிப் போய்விட்டன.

பாவம்-தீங்கு

தீங்கு செய்துவிட்டோம் என்பதைத் தான் பாவம் என்கிறனு—அப்படியானால் ஒருவனுக்குத் தான் தீங்கிழைத்து விட்டதை எண்ணி ஒருவன் வருந்துவானானால் அதுவே போதும் என்றல்லவா பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வருந்துவதை விட வேறு கழுவாய் இல்லை என்கிற போது கங்கை நீரும் கமண்டலாதிபதிகளின் மன்னிப்பும் எதற்காக என்று எண்ணவேண்டியிருக்கிறது.

"நேற்று வரை இறந்து விட்டவர்களும், இன்றுவரை பிறக்காதவர்களுமே நல்லவர்கள்." என்றார் ஓர் அறிஞர். அப்படியானால் இன்று உயிரோடிருப்பவர்கள் யார்? எல்லோருமே கெட்டவர்கள்தானு என்று கேட்கலாம். ஆனால் அப்படிச் சொன்ன அந்த அறிஞன் இன்றில்லை.

நாமே யோசித்தாலும் கூட குடும்பத்தில் ஈடுபட்ட மனிதனுயிருந்தாலும், பற்றில்லாத ஞானியாக இருந்தாலும், ஒரு வித வேட்கையில் அகப்பட்டவர்களே. ஏனெனில் குடும்பத்தில் ஈடுபட்டவன்தான் மனவி மக்கள் செல்வம் எனும் ஆசையால் தூண்டப்பட்டவர்கள். எல்லாம் துறந்த ஞானிகள் அப்படியல்ல என்பது உண்மைதானு? ஞானிகளுக்கு இந்த உலக ஆசையில்லாமலிருக்கலாம். ஆனால் அந்த உலகுக்கு அதுவும் சொர்க்க உலகுக்கு செல்ல வேண்டுமென்று நினைப்பதும் ஒரு ஆசைதானே. ஆசையென்பதை வேரோர் வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் விருப்பம் எனலாம்.

விருப்பத்தின் விளைவுதான் இந்த உலகம், விஞ்ஞானம், மருத்துவம், மின்சாரம் எல்லாம்! எவனுக்கும் எந்த விருப்பமும் இல்லையானால், நாடு, நகரங்கள், ஒளிமயமான தெருக்கள், கப்பல், விமானம், புகைவண்டி எல்லாம். பொன் மண்ணிலே கிடந்து இரும்பும் நிலத்திலே கிடந்து, மழை நீர் எந்த கட்டுப்பாடுமில்லாமல் ஓடி கடலில் கலந்து, பசியும் எடுக்காமல், தூக்கமும் வராமல், குளிரும் பனியும், வெப்பமும் மனிதனை ஒன்றுமே செய்யாமலிருந்தால், பசிக்கு உணவு, படுக்க படுக்கை, ஒதுங்க ஒரு இடம், உடம்பைப் போர்த்த ஓர் உடை ஏன்? ஆக மனிதன் முதலில் தன் தேவைக்கே செய்தான். பிறகு சமூகத்துக்குச் செய்தான். அதைக் கட்டுப்படுத்த ஒரு அரசாங்கம் தோன்றியது.

ஒரு காலத்தில் எதைச் செய்தாலும் தண்டனைப் பெறுத மனிதன் இன்று தண்டனைப் பெறுகின்றான். ஏன்? தனி மனிதன் ஒரு சமூகத்துக்குள் வந்து விட்டான் சட்டங்கள் அவனை கண் காணிக்கிறது.

இதன் பிறகு

குபேரன் வெளியே வந்தான். குற்றவாளி தலை மறைந்தான். யார் குபேரன், யார் குற்றவாளி, எல்லாம் எனக்கே சொந்தமென்றவன் குபேரன் ஆனான். ஏதடா உனக்குச் சொந்தம் என்றவன் குற்றவாளியாகிறான். இங்கே மனிதனைக் காணோம். குவலயம் தன்னைக் குபேரன் என்று அழைக்க வேண்டு மென்று தானம் செய்கிறான். ஒருவன் தனக்கிருப்பது அதிகம் என்று தானம் செய்கிறான். ஒருவன் தன் தவறுகளை மறைக்கவே தானம் செய்கிறான். ஒருவன் கொடுக்கிறான். ஒருவன் வாங்குகிறான். இங்கேயும் மனிதனைக் காணோம்.

சர்வாதிகாரத்தில் மனிதன் கிடைக்கவில்லை. ஜனநாயகத்திலும் மனிதன் கிடைக்கவில்லை. சோஷலிசத்தில் மனிதன் கிடைப்பானு? தேடிப் பார்ப்போம்.


தைப்பது அவ்வளவுதான் சுதந்திரம் இருக்கிறது. ஆனால் அந்தச் சின்னஞ்சிறு உறுப்பில்தான் மனிதனின் வாழ்க்கை அடங்கிக்கிடக்கிறது.
அதுபோல, ஜனநாயக சாதனங்களிலே மிகச்சிறிய சாதனம் ஓட்டு. ஆனால், அந்த சின்னஞ்சிறு ஓட்டுச் சீட்டில்தான் ஜனநாயகத்தின் எதிர்காலமே அடங்கிக் கிடக்கிறது.

நெருப்பாக உடல் சுடுகிறது. நெற்றிப் பொட்டு 'விண்-விண்' என்று தெறிக்கிறது. காலம் நெருங்கிவிட்டதை நோயாளியே உணர்கிறான். இருப்பினும் டாக்டர் தரும் கடைசி மாத்திரையை அவன் நம்பத் தான் செய்கிறான்.

அதுபோல மடியப்போகும் காங்கிரஸ், கோமூஸ்வரர்களின் இரும்புப் பெட்டியை, கடைசியாக நம்பிக் கிடக்கிறது.




பிறர் தயவில் எப்படியோ ஏணி மீது ஏறிவிட்ட முடவனைப் போன்
நது காங்கிரஸ்.
ஒரே ஒரு முறை காங்கிரஸ் கட்சியை இறக்கிவிடுங்கள்! முடவன் படும் பாட்டை-பிறகு பாருங்கள்!


ஓட்டுப் போடுமுன் ஒருகணம் சிந்தி
யுங்கள்! இரத்தத்தை சோர்வுறச் செய
ுக்கும் பிள்ளைகளுக்கும் போட்டுவிட்டு
பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டு
பட்டினியாகவே கிடக்கும் பத்தினித்
தாய்மார்களை நினையுங்கள்!
இரக்கமுள்ளவர்களே! ஓட்டுப்
போடுவீர்களா காங்கிரசுக்கு?


கணக்குத்
தீர்ப்போம்
கரையேறுவோம்
பங்குபெறுவோர்
புதுமைக்கவிஞர்
வாணிதாசன்
கவிஞர்
ஆனந்தம்
புலவர்
பொன்னி வளவன்
தமிழ்ப்பித்தன்
முத்துலிங்கம்
முருகுவண்ணன்



இறையின் கணக்குத் தீர்ப்போம்

புதுமைக்கவிஞர் வாணிதாசன்

வான் பொய்த்த காலத்தும் பொய்யா ஆறு
வளநன்செய் புன்செய்நெல் மலிந்த நாடு!
தேன்கொழிக்கும் நெடுமலைகள் மலையின் சாரல்
செறிந்தபலா மாவாழை குவிந்தி ருந்தும்
ஏனின்று மக்கட்குப் பசியைப் போக்க
இயலவில்லை? நம் குறையா? அரசின் போக்கா?
கூன்நிமிர்த்த எழுகதிரைக் கண்டோம் வாழி!
கொடுமைக்கிங் கின்றேடே கணக்குத் தீர்ப்போம்!

பெயல்தேக்கி நீர்பாய்ச்சிக் காட்டை மேட்டைப்
பெருந்தோட்கள் வலியெடுக்க ஒவ்வோர் நாளும்
வயலாக்கி நெல்விளைப்போன் மனைவி மக்கள்
வயிற்றுக்குப் புல்உணவும் கிடைக்க வில்லை!
அயல்நோக்கி அழுகின்றார்; விளைப்போர் ஏங்க
அறுவடையைச் செய்கின்றோர் வேற்றோர் ஆவார்.
கயல்விழியே! புத்தாண்டைக் கண்டோம் வாழி!
இன்றேடே நம்குறையின் கணக்குத் தீர்ப்போம்!

வற்றுத வளங்கொடுக்கும் கடலோ முப்பால்
வருமழையைத் தடுத்தனிக்கும் மலையோ முப்பால்
கொற்றத்தை நனிநடத்த வழிசொல் முப்பால்
கொண்டுள்ளோம்; என்றாலும் குறைகொண்
டுள்ளோம்!
சுற்றத்தை வாழ்விக்கும் கதிரைக் கண்டோம்;
தொடுவான இருளினிமேல் தொலைந்தே போகும்;
பெற்றுவளர் தாய்நாட்டின் நலத்தை எண்ணும்
பெரியோரை இன்றேடே கணக்குத் தீர்ப்போம்!

கடல்கடந்து கலஞ்செலுத்திக் கடாரம் வென்ற
கதையெல்லாம் கல்வெட்டுச் சொல்லக் கேட்டும்
உடல்கிறியர் நமை ஏய்க்கப் பார்க்கின் றார்கள்;
நாமெல்லாம் ஊமையென்ற நினைவு போலும்!
மடல்பெரிதே என்போர்க்கே மகிழும் பூவின்
மணம் பெரிதை நினைவூட்டும் மறவர் கூட்டம்
படர் இருளை கிழித்தெறியும் பரிதி வாழ்த்திப்
பழமைக்கிங் கின்றேடே கணக்குத் தீர்ப்போம்!


வாளேந்தி அரசாண்ட முன்னுள் வேந்தர்
மடியிருத்தித் தாய்மொழியை வளர்த்துக் காத்தார்;
தோளேந்தி வறுமையினைத் துடைத்த தாலே
தொன்னூலைப் பெரும்புலவர் படைத்தார்; இன்றே
கோளின்றிக் குறைமொழியைக் கேட்டே ஏற்றுக்
குடிகெட்டோம்; எழுகதிரைக் கண்டோம் வாழி!
மீளாத கொடுந்துயரம் மீள வேண்டும்!
விரைவாக இன்றேடே கணக்குத் தீர்ப்போம்!

தாய்நாடும் தாய்மொழியும் வாழ வேண்டும்!
தலைநிமிர்ந்து மற்றவர்போல் நடக்க வேண்டும்!
காயாத வானத்தும் கதிரைச் சேர்க்கும்
விஞ்ஞானக் கல்விவளம் கற்க வேண்டும்!
ஓயாது தாயகத்தின் உயர்வுக் காக
உயிருள்ளோர் யாவருமே உழைக்க வேண்டும்!
வேய்மலைபின் எழுகதிரைக் கண்டோம் வாழி!
விரைவாகக் குறைமுடிக்கக் கணக்குத் தீர்ப்போம்!



பாட்டெழுத நேரமில்லை; உணர்வு தோன்றும்
பக்குவமும் சேரவில்லை! பட்டுப் போன
காட்டுமுல்லைப் பூங்கொடிக்கு நீரை வார்த்துக்
காப்பாற்றி வருவதனுல் பூத்தல் உண்டோ?
ஆட்டுமந்தை உட்புகுந்த ஓநாய் போல—
ஆளவந்தார் வாழ்பவரின் உயிர்வதைத்துக்
கூட்டைமட்டும் விட்டுவைத்தார்! குருதி வற்றிக்
கொதிப்படங்கிப் போகுமுன்னே கணக்குப்
பார்ப்போம்!

"வணிகத்துக் காகவந்தோர், மலைப்பாம் பைப்போல்;
வளைத்துவிட்டார் இம்மண்ணை; ஆண்டும் வந்தார்!
பிணிகொண்டோம் அந்நியரால்; விரட்டி விட்டுப்
பெரியதொரு விடுதலையைத் தருவோ" மென்று...
துணிகரமாய் ஆட்சியிலும் அமர்ந்து கொண்டார்;
சுதந்திரத்தை வாங்கியதால் உரிமை என்றார்;
அணிகலனுய்ச் சமதர்ம வேடம் பூண்டார்;
அநியாய வழியிதென்ற கணக்கிற் சேர்ப்போம்!



இருபதாண்டாய் இந்நாட்டைச் சூழ்ந்த நீய
இருள்விலகும் மார்க்கமென்ன; சிந்தித் தோமா?
பெருமுதலைக் குவித்திட்டோர் மேலும் மேலும்
பேரியநிலை எய்துவதும் கண்ணுற் கண்டோம்!
வருவதெலாம் ஏழைக்கே; வறுமை வாட்டம்!
வறியவரின் நிலைஉயர வழியும் காணோம்!
ஒருபதிலும் உரைக்காமல் ஏற்ற காலம்
ஓடியது; வாக்குரிமை கணக்காய்க் காப்போம்!

ஓட்டுமொத்தக் கேடுகளைப் புரிந்து கொண்டோம்!
உலகத்துப் பலநாட்டு மக்களைப் போல்—
கெட்டுவிட்ட வாழ்வுதனைச் சீராய்ச் செய்து—
கிழிறக்கி, ஆட்சியினை மாற்றிக் காட்டி—
விட்டுவைத்த குற்றத்தின் கழுவா யாக
வெற்றியெலாம் கதிரவனுக் களித்தே தீர்வோம்!
கட்டவிழ்த்துக் காளைகளைத் துரத்தி விட்டுக்—
கவலைகளை ஒழிப்பதற்குக் கணக்குத் தீர்ப்போம்!

காங்கிரசைக் கணக்குத் தீர்ப்போம்

புலவர் பொன்னிவளவன்

நான்அறிந்த ஒருமுத்து முதுரை முத்து!
நகைமுத்துப் பல்முத்து இன்னோர் முத்து!
'ஏன்ஐயா நீர்முத்தைப் பார்த்ததில்லை?
என்பீரேல் நீர்முத்தும் பார்த்த துண்டு!
நான்பார்த்த நீர்முத்து கண்ணீர் முத்து!
நாட்டிலுள்ளோர் வடிக்கின்ற துயரக் கண்ணீர்!
ஏன்என்றால் காங்கிரசால்! வரட்டும் தேர்தல்
இடுப்பொடிப்போம் காங்கிரசை முறிய டிப்போம்!

ஓடாத சுடிகாரம், உடைந்த சட்டி
ஒற்றைமர்ப் பல்லின்நிழல் கிழிந்த சட்டை
நாட்டார்த பொதுமக்கள் நாட லாமா
நாடாள்வத் தகுதியற்ற கும்பல் தன்னை?
வாடார்த நிலையில்லை; வருவாய் இல்லை;
வளமற்று வெறும்வாயை மெல்ல லாமா?
கேடான நிலையடைந்தோம்; இன்னும் என்ன
கேள்விபதில்? காங்கிரசைக் கணக்குத் தீர்ப்போம்!

பட்டாணி தின்பதனால் என்ன கிட்டும்?
பல்லுக்குச் சுறுசுறுப்பு! பசியா தீரும்?
மட்டரக மனிதர்க்குப் பதவி தந்தால்
மன்துயரம் தீர்ந்திடுமா? மக்கள் தம்மைச்
சுட்டாரே படுபாவி! நினைப்பா இல்லை?
சுடுபட்டு மாணவரும் பிறரும் செத்தார்!
விட்டோமே கண்ணீரை! நரியை ஆள
விட்டோமே! விடலாமா? கணக்குத் தீர்ப்போம்!

பழம்பழுத்தால் பறிக்கும்கை கணக்குத் தீர்க்கும்;
பழுத்தஇலை தனைக்காற்று கணக்குத் தீர்க்கும்;
கிழமான மனிதர்களின் வாழ்க்கைச் சீட்டைக்
கிழித்தெறிந்து காலம்தான் கணக்குத் தீர்க்கும்!
அழுகுரலைத் தரும்குழந்தை; பெற்ற தந்தை
அதட்டலல்லவி அதைநிறுத்தும்; நம்மை வாட்டிப்
பழிவாங்கும் காங்கிரசைத் தேர்தல் தன்னில்
பழிவாங்கிச் சரியாகக் கணக்குத் தீர்ப்போம்!

மடக்கழுதை கத்துவதா பாட்டு? தண்ட
வான்கோழி ஆடுவதா ஆட்டம்? ஓடும்
கடல்நண்டு கிறுக்குவதா எழுத்து? கட்டிக்
கற்கண்டா படிகாரம்? தின்னும் பச்சை
மூடக்கத்தான் துவையலிலா இனிப்பு? சொத்தை
மூடக்கத்தான் சுருட்டத்தான் பதவி என்று
அடம்செய்யும் கதர்மனிதர் ஆட்சி தன்னில்
அடைவோமா நாம்நன்மை? கணக்குத் தீர்ப்போம்!

செத்தானே செயல்மறவன் சின்ன சாமி!
சிவலிங்கம் போன்றோரின் உயிரைப் பற்றிச்
சத்தமிட்டுப் பயனில்லை! இந்தி ஆட்சி
சாய்ந்தால்தான் மாய்ந்தால்தான் வெற்றி! ஓட்டு
மொத்தத்தில் கடன்வாங்கிக் கணக்குத் தீர்க்க
முடியாமல் விழிப்போரே! அறிஞர் அண்ணா
இத்தரணி ஆண்டாக வேண்டும்? இன்னும்
ஏன்தூக்கம்? காங்கிரசைக் கணக்குத் தீர்ப்போம்!



வாழ்வு காண கணக்குத் தீர்ப்போம்!

தமிழ்ப்பரிதி

"பாலாறும் தேனாறும் ஓடக் கூடும்;
பசிமறையும்" எனமிகவும் பேசிப் பேசி,
கோளாறு பலவாறு குவியும் வண்ணம்
கோலோச்சும்; கொடுமைசெய்யும்; 'சர்க்காக்' கட்சி!



ஆளான நாள்முதலாய் அந்தக் கட்சி
அரசாளத் துடித்ததன்றித் தொண்டும் உண்டோ!
மேலான கட்சியென்றே அதனைச் சொன்னல்
விலாநோகச் சிரிப்புவரும்; வெறுப்பும் சேரும்!

கனவினிலே நமையாழ்த்தி வருவதல்லால்
கருதரிய பணிஎன்ன செய்தார்; நல்ல
உணர்வினிலே சிறந்ததிரு நாட்டை, ஏழ்மை
உருவினிலே மாற்றிவிட்டார்; உயிரைக் காக்கும்
உணவினுக்குப் பங்கீடு செய்தார்; வீட்டில்
ஒளிசேர்க்கும் எண்ணெய்க்கும் திட்டம் செய்தார்;
கணவரையே மனைவியர்தாம் காண கூட
காங்கிரசார் தடைவிதிப்பார்! ரேஷன் வைப்பார்.

எத்துறைதான் புகுந்தாலும் சர்க்காக் கட்சி
என்னென்ன செய்தாலும் அதற்கே உள்ள
முத்திரைதான் மாறுது; நாட்டின் செல்வம்
முழுவதையும் சூறையிடும்; விரயஞ் செய்யும்!
நித்திரைதான் செய்தாலும் நீயோர் நெஞ்சின்
நினைவினிலே பிறர்கேடு மறைந்தே நிற்கும்!
புத்துரைதான் நாம்சொன்னேம்; புத்தி சொன்னேம்
பூனையிடம் குறளுரைத்தால் பயனு கிட்டும்?

சத்தியத்தை மொத்தவுமே விழுங்கிக் கொண்டு
சமதர்மப் பாதைக்கே உலையும் வைத்து
பத்தியத்தை மக்களுக்கே உரிமை யாக்கி
பட்டினியைப் பரப்பிவரும்; இளமை கொஞ்சும்
பத்தினியர் பலபேர்க்கு வெள்ளை ஆடை
பரிசாக்கி மகிழ்ந்ததன்றே காங்கிரஸ் கட்சி!
சித்திரைதான் குளிர்தருமோ! நீயைக் கக்கும்!
செந்தமிழ்தான் சந்தனமாய் மாறிப் போமோ!

தடுமாறி, இடம்மாறி தடமும் மாறி
தன்னுலே தான்தேய்ந்த நிலையு மாகி
திடம்மாறி விடமான கட்சி யோடு
தினம்நாடிச் சுகித்திருக்கும் சர்க்காக் கட்சி
முடமாகி ஐடமாகும் நாளைத் தேடி
முகிலாகி புயலாகி உழைப்போம்; நல்ல
வடிவாகி விடிவாகும் வாழ்வைக் காண
முடிவெடுப்போம்; காங்கிரசின் கணக்குத்
தீர்ப்போம்!

ஆட்சியின் கணக்குத் தீர்ப்போம்

முத்துலிங்கம்

பாட்டுலகில் காதலர்க்குள் பிரிவு வந்தால்
பருவமழைக் காலமந்த கணக்கைத் தீர்க்கும்!
காட்டுநதி ஓடுகின்ற தொலைதூரத்தின்
கணக்கதனைப் பொங்குகடல் தீர்த்து வைக்கும்!
கூட்டுமுல்லை நகைகாட்டி மனைவி வந்தால்
கூடாத நெடுங்கணக்குத் தீர்ந்து போகும்!
பாட்டாளி துயர்க்கணக்குத் தீர்வ தென்றால்
பழிகாரர் ஆட்சிக்குக் கணக்குத் தீர்ப்போம்!

வெண்ணிலவு இராக்கணக்கைத் தீர்த்திட்டாலும்
விடிபொழுதின் கணக்கதனைக் கதிர்தான் தீர்க்கும்!
கண்மங்கும் கூகையின்மேல் பகைக் கணக்கைக்
கருங்காக்கை பகற்பொழுதில் தீர்த்துக் கொள்ளும்!
உண்பதற்குச் சோறின்றி வறுமை யாலே
உயிர்விட்டார் பட்டியலின் கணக்கைத் தீர்த்துக்
கண்ணீரை வடிப்போரின் துயரை மாற்றக்
காங்கிரசுக் கின்றேடு கணக்குத் தீர்ப்போம்!

நடைபாதை ஓரத்தில் ஆயிரம் பேர்
நண்டுவளைக் குடிசையிலே வாழும்போது
மடைவாளை மீன் போலப் பளபளப்பாய்
மாளிகையில் ஒருசில பேர் வாழுகின்றார்!
இடையிருக்கும் இத்தகைய ஏற்றத் தாழ்விற்
கிது வரைக்கும் கணக்கதனைத் தீர்த்திடாத
கடைகெட்ட ஆட்சிக்குக் கணக்குத் தீர்ப்பபோம்!
காங்கிரசார் கொடுமையினை வெட்டிச் சாய்ப்போம்!

துப்பாக்கிக் குண்டாலே தமிழைக் காக்கத்
துடித்தெழுந்த வீரர்களைக் கொன்று விட்டுச்
சப்பாத்தி இந்திக்குத் தாளம் போடும்
தமிழ்ப்பகைவர் இந்நாட்டை ஆள்வாமோ?
அப்—பாவித் துரைத்தனத்தார் மட்டும் வாழ
அப்பாவியாய் மக்கள் மாள்வாமோ?
தப்பான இக்கணக்கைச் சரிப்படுத்தத்
தருக்கர்களின் ஆட்சிக்குக் கணக்குத் தீர்ப்போம்!





கதை முடிப்போம் கணக்குத் தீர்ப்போம்

நெடுங்கால மடமைக்கு அறிவாளர் நெறியாளர்
நீடுழைப்பால் முன்னம் கணக்குத் தீர்த்தார்!
கொடுங்கோலர் ஆட்சிக்கு எரிகுன்றைப் போல்மக்கள்
கொதித்திட்ட புரட்சியால் கணக்குத் தீர்த்தார்!
'கொடுங்கோல்' என் முங்கிலக் கோஞ்சி தனை,
'முன்னை
காங்கிரசுக் குணசீலர்' கணக்குத் தீர்த்தார்!
கொடுங்கோண்மை தனைமிஞ்சும் கொடுங்கோண்மை
செயும்இற்றை
கொடியகாங் கிரசாட்சி கணக்குத் தீர்ப்போம்!

பத்தொன்ப தாண்டுகள் ஆண்டார்இப் பாரினை
பயன் என்ன கண்டோம் என் றெண்ணிப்
பார்ப்போம்
எத்தொழிலும் இல்லாமல் இறந்தோர்கள் சோற்றுக்கு
இல்லாமல் இறந்தார்கள் கணக்கு ஏது?
முத்தமிழைக் காத்திட தனல் முழ்கி இறந்திட்டோர்;
சிறைசென்றோர் தமை எண்ண முடிவ துண்டோ?
இத்தனையும் செய்து, இறுமாந்துள்ள காங்கிரசு
இழியாட்சி முடிவுக்கு கணக்குத் தீர்ப்போம்!

திட்டங்கள் இட்டார்கள்; ஐந்தாண்டு திட்டங்கள்
நான்காம் திட்டம் இன்று தொடங்கக் கண்டோம்!
கொட்டியழு துள்ளவரி-கோடி பல கோடி! அதை
கொடுத்தவர்கள் ஏழை! பணக் கும்பல் அல்ல!
பட்டமரம் போல்ஏழை மக்களெல்லாம் பாழ்பட்டார்
பணக்காரர் பலகோடி பணத்தைச் சேர்த்தார்!
தட்டியிதைக் கேட்டென்ன? தலைக்கனத்தில் தமை
மறந்த
கதர்ச்சட்டைக் கும்பல், செவி சாய்த்ததில்லை!

பணநாயகம் வீழ; பண்பாளர் அரசாள;
பைந்தமிழ் மொழிவாழ தமிழர் வாழ;
சனநாய கம்வாழ்; சமதர்மம்-சன்மார்க்கம்
தனிப்பெரும் நல்வாழ்வில் மக்கள் வாழ;
இனித்தாய கம் வாழ எதிரிகள் பகைவீழ
இல்லாமை இல்லாத ஏற்றம் காண
கனிவாக, கனிந்தது காலமும் 'அறுபத்து
எழி'தில் காங்கிரசின் கணக்குத் தீர்ப்போம்!

முருகுவண்ணன்.

நன்றி அறிவிப்பு

பொங்கல் பண்டிகையை முன்னிட்டும், மற்ற காலங்களிலும் எமக்கு ஆதரவு அளித்தவர்களுக்கும் மற்றவர்கட்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்களையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம் 53, கிடங்குத் தெரு சென்னை-1.

வாடிக்கைக்காரர்களுக்கு எமது பொங்கல் வாழ்த்துக்கள்

★

தயானந்தா ஓர்க்ஸ்

(டைப் பவுண்டரி)

★

32-1 முருகப்ப முதலி தெரு, புரசைவாக்கம் சென்னை-7.



நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு !

(தங்கம், வெள்ளி, தாம்பரம், மற்றும் பல உலோகங்கள் அநேக அபூர்வ கள், மருந்துப்பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவான மூலிகைது)

சித்தர் நவலோக கல்பம்

டாக்டர் சாது

வீ. நாராயணசாமி பிள்ளையின்,

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

(REGD)

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

(சொல்பேசி எண் : 84786.)

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர் வடபாதி,

(பாலாற்றங்கரை சமீபம்)

செங்கற்பட்டு ஜில்லா

ஆஸ்துமா மதுமேகம். (டையாப்டீஸ் T. B. குஷ்டம், வெண்குஷ்டம்—யானைக்கால் மற்றும் நள்பட்ட கொடிய வியாதிகளுக்கும், டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே, ரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக் கிழமைகளில் சென்னையிலும் பிரதி திங்கள், புதன், வெள்ளி சனிக் கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும் நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.

போன் : 260779

பிரிண்டிங் பிளாக் செய்யும் தொழிலில் நேர்த்தியும் கீர்த்தியும் மிக்க நிறுவனம்

—ஃ—

எஸ். எஸ். எஸ். பிரதர்ஸ்

நெ. 180, அண்ணாபிள்ளை தெரு
சென்னை—1.

—ஃ—

கலர் பிளாக்குகள், ஆப்டோன் லென் பிளாக்குகள் உட்பட எல்லாவிதமான பிளாக்குகளும் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.

உரிமையாளர் : கு. சுந்தரம்

வீட்டிற்கும் வியாபாரத்திற்கும்

விருந் தோம்ப.....
வாய்க்குச் சுவையான
சிற்றுண்டிகள் தயாரிக்க.....

லோட்டஸ் சேமியா

வாங்குங்கள்

லோட்டஸ் சேமியா கம்பெனி

81. G. A. ரோடு, சென்னை-21.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

உயர்தர காஞ்சிபுரம்

பளரஸ் பட்டு சேலைகள்

மற்றும் நவின மில் ஜவுளிகள் வாங்க நம்பிக்கையான இடம்

P. B. லக்ஷ்மண ஷா & பிரதர்ஸ்

பட்டு ஜவுளி தயாரிப்பாளர்கள், வியாபாரிகள்,

பனகல் பார்க், தி. நகர், சென்னை-17 போன்: 43435.
சிந்தாதரிப்பேட்டை, சென்னை-2. போன்: 86966.

தரமும் கவர்ச்சியும் நிறைந்த
பிளாஸ்டிக் பொருள்களுக்கு

**குளோப் பிளாஸ்டிக்
இண்டஸ்ட்ரீஸ்**

247, பைக்ராப்ட் ரோடு, சென்னை-14.

சாவிப்பட்டை. பெயர்ப்பலகை, கார்நம்பர் பிளேட், கட்டிட மாதிரிகள் மற்றும் ரேடியோ — டிரான்சிஸ்டர் பெட்டிகள்

தயாரிப்பாளர்கள்

* * *

பெயர் செதுக்கல், பிளாஸ்டிக்கில் வடிவமைத்தல், பரிசுப்பொருள்கள் தயாரித்தல் முதலியனவும் மேற்கொள்ளப்படும்.

செம்மீன்


தமிழாக்கம் — சுந்தரராமசாமி

செம்மீன் மீனவர் சமூதாயத்துக் கதை. கடற்கரைக் கன்னியின் தூய காதல் கதை தகழிசிவசங்கரம்பிள்ளை எழுதிய இந்த புகழ் பெற்ற மலையாள நாவல் 20ம் நூற்றாண்டின் இணையற்ற இலக்கியப் படைப்புகளில் ஒன்று என்று போற்றப்படுகிறது. ஆங்கிலம், ரஷ்யன், செக், போன்ற உலக மொழிகள் பலவற்றிலும் இந்தி, வங்காளி, தெலுங்கு, குஜராத்தி முதலிய இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சாகித்திய அகாடமியின் ரூ. 5000 பரிசு பெற்றது.

விலை ரூ. 4-00

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை-1.



இந்தப் பொங்கல் திருநாளன்று
ஒவ்வொருவர் மகிழ்ச்சியும் பொங்கி வழியட்டும்.
அப்பொழுது நீடித்து உழைக்கும் அழகு ஆடைகளை
எப்பொழுதும் திறமையுடன் நெய்து கொடுக்கும்
நெசவாளர்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
உங்கள் பணத்திற்கான முழு மதிப்பையும்
கோ-ஆப்டெக்ஸ் துணிகள் இப்பொழுதும்,
எப்பொழுதும் அளிக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி துணிகள்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
34/1-A, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8.

ELEGANT

வாடிக்கைக் காரர்களுக்கு எமது
பொங்கல் வாழ்த்துகள்

★

பாரமவுண்ட் பிரிண்டர்ஸ்

31, மீரான் சாஹிப் தெரு,
மவுண்ட்ரோடு, சென்னை-2.

In the Hall of Fame

BUHARIS

have carved a name as the greatest and most popular caterers of all time.

Specialities : Biriyani, Ice Cream. Peach Melba.

With the best Compliments of :

BUHARI HOTELS

ஓர் நற்செய்தி

அன்புடையீர்!
ரெடிமேடு ஆடைகள் வாங்கும்போது
லேபிலைப் பார்த்து வாங்குங்கள்

அவை நாகரீக தயாரிப்புடையவை! நீடித்து உழைக்கக் கூடியவை! உங்கள் குழந்தைகளுக்கு கவர்ச்சிமிகு தோற்ற மளிக்க கூடியவை!

100-க்கும் மேலான தினுசுகளில் நகரிலும், தென் இந்தியா முழுவதிலும் எல்லா முக்கியக் கடைகளிலும் கிடைக்கும்.

உயரதர ஆடை தயாரிப்பாளர்கள்

"Grand Dresses"

20. Godown Street, Madras-1

இன்று முதல்

சென்னை **வெலிங்டன் · பிராட்வே**

ராக்ஸி · லிபர்டி

மற்றும் தென்னகமெங்கும்



தேவர் பிலிம்ஸ்

தாய்க்குத் தலைமகன்

கதை, தயாரிப்பு

சாண்டோ **M.M.A.சின்னப்பாதேவர்**

டைரக்ஷன்

M.A.திருமுகம்



எமது பொங்கல் வாழ்த்து!



இரும். சுப்பிரமணியன்.

தி நாஞ்சில் பிரிண்டர்ஸ்

16, அஜிஸ்முல்க் 4-வது தெரு,
ஆயிரம் விளக்கு சென்னை-6.

போன் 87927

உரிமையாளர்: நாஞ்சில் ப. கில்பர்ட்

பொங்கல் பொன்னளில் எங்கள் நல்வாழ்த்து!

மாணவ, மாணவிகளுக்கான புத்தகம், நோட்டுப்புத்தகம்.
,பேனு, பென்சில் முதலியன.

சிறுவர் சிறுமியர் விரும்பும் சகலவித
அழகிய விளையாட்டுப் பொருட்கள்.

மகளிர் விரும்பும் அலங்காரப் பொருட்கள்
முதலியவற்றிற்கு சிறந்த இடம்.

சில்ரன்ஸ் கார்னர்

1-129, மவுண்ட் ரோடு,
(ஆயிரம் விளக்கு)
சென்னை-6

இன்று முதல்

சென்னை :
சித்ரா · ஸ்ரீ கிருஷ்ணா
சயானி · ராம் மற்றும்
தென்னகமெங்கும்



எல்எஸ் புரொடக்ஷன்ஸ்

கந்தன் கருணை

ஈஸ்ட்மென் கலர்






ALS PRODUCTIONS

திரைக்கதை வசனம் டைரக்ஷன் :
A.P. நாகராஜன்

தயாரிப்பு :
எல். ஸ்ரீநிவாசன்

SEMBI



மக்களாட்சி முறையின் நோக்கம் ஒன்றே. அது ஒரு நாட்டு மக்கள் அனைவரும் குடியுரிமை உள்ளவர்களாய்த் தங்களுடைய நல் வாழ்வைத் தாங்களே அமைத்துக் கொள்வதாகும். சமத்துவம் சகோதரத்துவம், சுதந்திரம் என்று, முழங்கப்படும் அடிப்படை உரிமைகள் குடியுரிமையை ஒட்டியே அவர்கள் பெறுவதாகும். சமுதாயத்தின் முன்னுள்ள பழக்கவழக்கத்தால் இன உணர்ச்சி சாதி வேற்றுமை முதலானவற்றால் அவை இயல்பாக அமையாவிடில், சட்ட திட்டங்களால் அவை நிறைவேற்றப்படுவதும் நிலைபெறுவதும் முறையாகும்.

இந்த அடிப்படை உரிமைகள் பேசப்படுவதே, அவற்றால் தான், வாழ்க்கைப் போட்டியில் ஒவ்வொருவரும் ஒத்த உரிமையும் வாய்ப்பும் உடையவர்களாய் முன்னேற முடியும் என்பதனால்தான். ஒப்புரிமை, உடன்பிறப்புரிமை, விடுதலை வாழ்வு ஆகியவை அரசியல் சட்டத்திலேயே இடம் பெற்றாலும் அவற்றின் பயனை எல்லோரும் நுகருவதற்கும், அந்த உரிமைகள் மற்றவர்களுக்கு மறுக்கப்படாமலிருப்பதற்கும் கண்காணிப்பு வேண்டும். அதற்கு வேண்டிய அமைப்புக்களும் வழி முறைகளும் ஒரு நாட்டு மக்களின் தொகுப்புக்கு ஏற்பவே அமைய வேண்டும்.

அதனால் தான் மக்களாட்சி அல்லது குடியரசின் குறிக்கோள் ஒன்றேயாயினும், நாட்டு மக்களின் தொகுப்புக்கு ஏற்ப அதன் நடைமுறைகள், அமைப்புக்கள் விதிகள் வேறுபடுகின்றன. சிறிய தொரு நாட்டில் அந்த மக்கள் ஒரே மொழி பேசுபவராகவும் பெரும் பாலும் ஒரே சமயச் சார்பினராகவும், முரண்பாடுகள் மிகாத வாழ்க்கையினராகவும் உள்ள சூழலில் மக்களாட்சி அதன் கருவி அமைப்பு முறைகளால் அதிகமாகப் பாதிக்கப்படாமல் எளிதாகவே நிறைவேற முடிகிறது. அத்தகைய நாட்டில் அரசியல் கட்சிகள் மேற்கொள்ளும் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றால் தோன்றும் வேறுபாடு, பொது மக்களின் கருத்தைப் புலப்படுத்த வாய்ப்பாகும் தேர்தலின் மூலம் அவ்வக்காலத்தில் ஒரு முடிவைக் காண்கிறது. அந்த முடிவு, பெரும்பான்மையோர் தம் கருத்து என்பதை, அதற்கு உடன்பாடில்லாத சிறுபான்மையோரும் ஏற்றுக் கொள்கின்றனர். அம் முடிவை ஏற்க இணங்காதவருக்கும், தம்முடைய கொள்கையைப் பெரும் பான்மையோர் ஏற்கும்



வரை அதைத் தணிக்கத் தமக்கு உரிமை இல்லை, அம் முயற்சியில் நியாயமும் இல்லை என்னும் உடன்பாட்டால் அமைதி பிறக்கிறது.

ஒரே மொழி, ஒரே வரலாற்றுப் பின்னணி, ஒரு சமயப் பற்று ஆகியவற்றையே கொண்ட மக்களை ஒருநாடு பெற்றுள்ளபோது, அடிப்படைக் கருத்து வேற்றுமைக்கோ அடிப்படை ஒப்புரிமை மாறுபாட்டுக்கோ அங்கு இடமில்லை. அரசியலினின்றும் பிறக்கும் கருத்து வேற்றுமைகள், தேர்தல் முறையால், சட்ட மன்றத்திலோ—பொது மக்களிடத்திலோ வாக்கெடுப்பதால், எந்தக் கருத்துக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்று கண்டு அறிவதால் எளிதில் தீர்ந்துவிடுவதாகும். அந்த



மக்கள் தம்முடைய அடிப் படை உரிமையை வழங்கிப் பாதுகாக்கும் அரசுக்குத் தம்மைக் கட்டுப்படுத்தும் உரிமையும் உண்டு என்பதை உணர்ந்து அதனைக் கடமை யாகப் போற்றுவர். உரிமை யோடு தான் கடமையைச் செய்கிறோம் என்னும் எண்ணம் அவர்களிடையே எழுகின்ற மாறுபாட்டை எளிதில் நீக்கும்.

ஆனால், தனித்தனி மொழி களான பலப்பல மொழிகளைப் பேசும் மக்கள், மாறுபட்ட வெவ்வேறு கொள்கை கொண்ட பல சமயத்தினர் வாழும் வட்டாரத்தின் இயற் கைத் தன்மைகளால் வெவ் வேறு வாழ்க்கை நிலையை உடையவர்கள். வளர்ந்து நிலைத்த பல்வேறு நாகரிகப் பண்பாடு உடையவர்கள் ஆகியோர் வாழும் ஒரு பரந்த நாட்டில் மக்களாட்சி முறை நிலவினாலுங்கூட அதன் குறிக் கோள் எளிதில் நிறைவேறாது.

அத்தகைய பரந்து விரிந்த ஒரு நாட்டு மக்களிடையே குடி யுரிமை வழங்கப்பட்ட காரணத் தால் மட்டும், சமத்துவமும் சகோதரத்துவமும் நிலைபெற்ற தாகி விடாது. அவர்களிடையே தேர்தலினாலோ, தனி வாக் கெடுப்பது மூலமாகவோ சட்ட மன்றம் முதலான அமைப்புக் களில் ஒரு கொள்கை நிறை வேற்றப் படுவது மூலமாகவோ கொள்ளும் முடிவு அவர்கள் அனைவர்க்கும் நியாயம், நீதி வழங்கியதாகிவிட்டது. மாறாகப் பெரும்பான்மையோராக இயல் பாகவே அமைந்துள்ள ஒரு சாரார் (ஒரு மொழி, ஒரு சமயச் சார்புடையார்) கருத்தும் நோக்கமும் மக்களாட்சி முறை களின் படியே நிறைவேறிய தானாலுங்கூட அது அந்தப் பெரும்பான்மையைச் சாராத மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே மாறிவிடும். சட்டப்படி செய்யப்பட்ட முடிவுகள் பல,— பெரும்பான் மையோர் விருப்பங்கள் பல சிறுபான்மையோருக்கும் சிற் சில வேளைகளில் உண்மையில் ஒரு பெரும்பான்மையினராக உள்ள பலப் பல சிறு பிரிவின ரான மக்களுக்குமே கூடத் தீமையால் அநீதியைத் தோற் றுவிக்கவும் கூடும்.

அறியாததல்லவே ?

ஒரே வகுப்பார் ஒரு திரு மணத்திலோ அன்றி ஒரு விழாவிலோ ஒன்று கூடி விருந்து உண்ணும்போது அதனால் இடர்ப்பாட்டுக்கு ஆளா வோர் எவரும் இருப்பதில்லை. இருப்பினும் அவர்கள் அந்த விருந்து முறையால், கசப்பு அடைவதில்லை. பல்வேறு உணவுப் பழக்க வழக்க முடைய பலவகுப்பார் ஒன்றாக ஒரு விருந்தில் கலந்துகொள் ளும் போது அந்தந்தப் பிரி வார் விருப்பப்படி வேண்டிய தைப் பெற்று உண்ணும் வாய்ப்புள்ள முறையைக் கைக் கொள்வதே பொருத்தம். மாறாகப் பெரும்பாலோர் யாரோ, அவர்கட்கு ஏற்ற உணவு வகையையே மற்ற வரும் ஏற்று உண்ண வேண் டும் என்ற நிலை இருக்குமானால்

கீமராஜ்



படுத்துக் கொண்டே ஜெயிப்போம் !

ஒரு சந்தேகம் !

ஒவ்வொரு நாளும் காலை யிலிருந்து இரவு 3 மணி வரை தேர்தலுக்காக அலையறீங் களே ! அது ஏன் ?


விகிதவு என்னுகும்? பெரும் பாலோர் புலால் உண்பவர்.

ஆனால், அதை உண்ணும் மனம் இல்லாதவர் ஏதும் உண்ணுதவராகவே, பசியோடு நிற்பர். அரிசி, கோதுமை, கம்பு இவற்றில் ஒன்றையே உணவாக அமைப்பினும் அந்த உணவுப் பழக்கமில்லாதார் அரைப்பட்டினியே ஆவர். தேநீர் பருகுவார் பலர் காப்பி பருகமாட்டாரன்றே! ஒட்டகமும் கழுதையும் ஆடு மாடுகளைப் போன்றே பயிர் வகை உணவையே கொள்வன வாயினும் அவற்றின் பாலை—உண்பதற்குள்ள தயக்கமும் மறுப்பும் நாம் அறியாததல்லவே.

இவ்வாறு உணவு வகையிலேயே பெரும்பான்மையோருக்கு ஏற்றது என்னும் முடிவு அனைவருக்கும் நியாயம் வழங்கியது ஆகவில்லை எனின், உணவு, உடை, உறையுள் முதலான காலத்தோடு ஒட்டி மாறி வரும் பழக்க வழக்கங்களினும் நிலையானதாகப் பழக்கப்பட்டு மக்களின் அறிவோடும் உணர்ச்சியோடும் கலந்து ஊறி நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கும் மொழி பற்றிய மாறுபாடு பிறக்கும்போது பெரும்பான்மைக் கருத்து என்பது மட்டும் மற்றவர்கட்கு எவ்வாறு நியாயம் வழங்கக் கூடியதாகும். ஒரு சாரார் தம் மொழியையே மற்றொரு சாராரும் ஏற்க வேண்டும் என்று செய்யக்கூடிய முடிவு அதனை ஏற்க விரும்பாத மாறுபட்ட கருத்து உடையவர்கட்கு எண்ணிக்கையால், அவர்கள் எந்தச் சிற்றளவினராயினும் நியாயம் வழங்குவதாகாது.

சில நாடுகளில் மக்களாட்சி முறை நடைபெறுவதாகக் கூறப்படினும், தேர்தல் நடத்துவதாகச் சொன்னலும் ஒரே சமய ஆதிக்க ஆட்சி நடைபெற்று வருவது கண்கூடு. இஸ்லாமிய சமயத்தின் பேரால் மக்களாட்சி நசுக்கப்பட்டு, தனித் தலைவன் ஆதிக்க ஆட்சிக்கு பாகிஸ்தான் இரையாகியுள்ளது. இன்று பல நூற்றாண்டுகளாகவே இந்தியாவின் இரு வேறு சமய வழியினர் தம்முள் மாறுபட்டு ஆதிக்கப் போட்டி கொண்டிருந்தது காரணமாகவும், விடுதலை பெறும் காலத்தில் சமய அடிப்படையையே கொண்டு பாகிஸ்தான் ஒரு தனி நாடாகப் பிரிந்து சென்றது காரணமாகவும் இந்தியாவினுள் வாழும் மக்களிடையே பின்னரும் சமய வேற்றுமை பெரியதாக வளர்ந்து கேடு செய்ய ஏதுவாக எந்தச் சமய ஆதிக்கத்துக்கும் இடமளிக்கக் கூடாது என்பது காரணமாகவும் இந்திய அரசு சமயச் சார்பில்லாதது என்னும் தருக்க (செக்யூலர் ஸ்டேட் Secular State) அரசியல் சட்டத்தின் வாயிலாக உறுதி பெற்றது.

அரசாங்கப் பொறுப்பில் உள்ளவர்தம் தனித்தனி சமயப் பற்றுஎவ்வாறாயினும் அரசாங்க இயந்திரம், அரசாங்கத் திட்டங்கள், நடைமுறைகள் முதலியன ஒரு சமயத்தையே போற்றுவதாக, ஆக்குவிப்பதாக வேறு சில சமயங்களைத் தாழ்த்துவதாக — ஒழிப்பதாக அமைந்து விடக்கூடாது என்பதே இதன் நோக்கமாகும். இதனாலேயே பல சமயத்தினருக்கும் பாதுகாப்பு மட்டுமேயன்றி அவர்களது சமய வாழ்வுக்கான அடிப்படை உரிமைகளும் ஒருவாறு வழங்கப்பட்டன எனலாம்.



காங்கிரசை எதிர்க்க முடியாமல் கூட்டு சேருகிற எதிர்க் கட்சியினர் நொண்டிகள்!

ஒரு கேள்வி!

கார்ப்பரேஷன் தேர்தலிலே பல கட்சியோட நீங்க கூட்டுச் சேர்ந்தீங்களே; நீங்க நொண்டியா?

மாறுகப் பெரும்பான்மை யோர் தம் இயல்பான கருத்தில் வழி, இந்திய அரசும், ஒரு சமயச் சார்புடையதாக —ஆறிவித்துக் கொண்டிருக்குமானால் விளைவு என்னவாகி இருக்கும்? எத்தனை சமயத்தவர் இடர் பட்டு ஏங்க நின்றிருப்பர்? பெரும்பான்மை மக்களைச் சார்ந்த பலரே அந்த நிலையைக் கண்டு எந்த அளவு வேதனை யுற்றிருப்பர்? அரசாங்கத்தின் சின்னங்களாக இன்றுள்ள அசோகரது தூணுக்கும் சக்கரத்திற்கும் பதில் சிவனது சூலமும் திருமாலது சக்கரமும் அன்றே இடம் பெற்றிருக்கும்? நாடே போர்க்களமாகி தெருவெல்லாம் குருதி கொட்டி உள்நாட்டிலேயே 10 க்கள் வாழ்வு வேதனை வெள்ளமாக அன்றே மாறி இருக்கும்?

சமயச் சார்பின்மை

பல்வேறு சமயச் சார்பினரான பல கோடி மக்கள் வாழும் ஒரு நாட்டில், சமயச் சார்பின்மை ஒன்றே அத்துறையில், நீதி வழங்கக் காரணமாயிற்று என்பது தெளிவு, சமய உணர்ச்சியில் பெரும்பான்மை உணர்ச்சிக்குச் சிறுபான்மை உணர்ச்சி கட்டுப்பட்டு நிற்ப தொன்றல்லவே! பல சமயத்தினரும் நீதி கிடைக்க, நியாயம் மறுக்கப் படாமலிருக்க ஒத்த உரிமை நிலவ, இந்த ஆட்சி சமுதாயப் பொது நீதிக்கும் அடிப்படை மனித உரிமைக்கும் மாறுபாடாக இல்லாத எந்தச் சமயக் கருத்திலும் தலையிடாது ஒதுங்கிக் கொண்டதன்மூலமே மக்களாட்சியின் குறிக்கோளைக் காப்பாற்றியது எனலாம்.

ஒருவரது சமயத்தைப்போன்றதே அவரது மொழியும். ஆனால் சமயம் நம்பிக்கை அடிப்படையிலே நிலவுவதால் —நம்பிக்கை மாறும் போது, தகர்ந்து விடும்போது, தனி மனிதனின் சமய உணர்ச்சியும் மாறலாம், மறையலாம். மொழி உணர்ச்சியோ பிறப்போடு ஒட்டிப் பிறந்து, இறப்பினாலன்றி எளிதிலே மறையாதது. சிற்சிலரிடத்து மொழி உணர்ச்சி மறைந்தும் மங்கியும் நிற்பினும் அவரது உள்ளுணர்ச்சி தூண்டப்படும் போது அந்த மொழி உணர்ச்சியும் வெளிப்படும். தாய்க்கு மறைத்த சூலும், வாய்க்கு ஒளித்த உணவும் உண்டோ? ஒரு மனிதனின் உயிரோடு ஒட்டி உணர்வோடு கலந்து அறிவோடு பெருகி நிற்கும் தாய் மொழி (எம்மொழியானாலும்) அதனின்றும் அவனை அவனது உணர்ச்சியைப் பிரித்துக் காண முடியாது. ஒருவர் பிறப்பால் ஒரு தாய்மொழியை உடையவராக கருதப் படினும் வளர்ப்பால் அவர்களது உணர்ச்சிகள் வேற்றுமொழி வாயிலாகவே உருவாகின்றனவே எனின்— அவர்தம் வளர்ப்புத்தாயே பெற்றதாயிடத்தைப் பெறுவதுபோன்று அந்த வேற்றுமொழிகள் இடங் கொண்டு விட்டன என்பவை பொருளாம். எனவே-எந்த ஒரு மனிதனையும் அவனது தாய் மொழியினின்றும் பிரித்துக் காண்தலும் அவனது மொழியுணர்ச்சியை பெரும்பாலோரது மொழியுணர்ச்சிக்கு உட்படுத்தி விட எண்ணுவதும் முறையாகாது.

இந்தியா, சமயச் சார்பில்



என்னால் தான் சோஷலிசம் கொண்டு வரமுடியும்

ரொம்பச் சரி ஆனால்.....?

சோஷலிசம் பேசின ஒரு மேனனுக்கே சீட் தர உங்களாலே முடியலையே; நீங்களா.....?

லாத அரசு என உறுதி செய்தது போன்று ஒரு மொழி ஆதிக்கம் ஏற்படாதிருக்க மொழிச் சார்பில்லாத நாடு ஆகவும் விளங்குவதே மக்கள் ஆட்சிக் குறிக்கோளுக்கு ஏற்றதாகும். ஒரு மொழியும் இல்லாமல் அரசு நடைபெறுமா? சட்ட மன்றம் இயங்குமா? நீதி வழங்க முடியுமா? என்று கேட்கக்கூடும். ஆனால் ஒரே மொழி கொண்டு தான் அரசு நடக்க வேண்டும் என்பதில்லை. ஆட்சி மொழிகளாகப் பல மொழிகளை ஏற்றுள்ள பல அரசுகள் உலகில் நிலவுகின்றன. விளக்கம் தேவையில்லை.

இந்தியாவிலே இன்று பதினான்கு மொழிகள் தேசீய மொழிகளாக ஒவ்வொரு வட்டார மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாதனவாக ஏற்கப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு மூன்று மொழிகள் தவிர்த்துப் பிறவெல்லாம்—அந்தந்த மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும்வளர்ந்துள்ளன. மத்திய ஆட்சியிலேயும் புகுத்தப்பட்டு வரும் இந்தியும் நீக்கப்பட்டு வரும் ஆங்கிலமும் இரண்டு மொழிகளும் இடம் பெற்றுள்ளன. (இன்றைய நிலையில்) மத்திய ஆட்சியில் புகுத்தப்பெறும் இந்தி — இந்தி மாநிலங்களிலும் இடம் பெற்றிருப்பது சிறிதளவு தவிர்த்து வேறு எந்த மாநிலத்திலும் அந்தச் சிறிய அளவிலும் ஆட்சி மொழியாக இடம் பெற முடியாது. ஆங்கிலமோ—ஒவ்வொரு மாநிலத்து அரசிலும், சட்ட மன்றத்திலும் நீதி மன்றத்திலும் இடம் பெற்றுள்ளது. எனவே இந்தியாவில் இன்று பலவகையிலும் பல நிலையிலும் பல்வேறு மொழிகள் இடம் பெற்றுள்ளன என்பது தெளிவு.

இந்நிலையில் மத்திய ஆட்சி மொழி ஆக்கப்படினும் முன்னதாக நுழைக்கப்படினும் அந்த அளவு பிற மொழிகள் பின் தங்கும். இத்தகைய அநீதி தவிர்க்கப்பட வேண்டின், மொழி ஒன்றுதான் இருக்க வேண்டும் என்று கருதுவது எவ்வாறு நியாயமாகும்? பல மொழி பேசும் பல மாநில அரசுகளின் கூட்டாக உருவாகியுள்ள மத்திய அரசு—அவ்வவ் மாநில ஆட்சி மொழிகளை—மத்திய ஆட்சி மொழிகளாகவும் ஏற்பது ஒன்றே அந்த ஆட்சியின் கூறுகளுக்கு மதிப்பளிப்பதும் அதன் உண்மையான இயல்பை உலகுக்கு உணர்த்துவதுமாகும்.

மொழியே இன்றி ஆட்சி இயங்க முடியாது என்பதற்காக—ஒரே மொழியையே ஆட்சி மொழியாக்க முனையும் செயல் பிற மொழி மக்கள் உரிமையைப் பறிப்பதேயாகும். ஒவ்வொரு மாநில ஆட்சி மொழியாக ஏற்கப்படும்வரை-எந்த ஒரு வட்டாரத்தினர் தம் மொழியும் மத்திய ஆட்சி மொழியாக ஆக்கப் படுவதும்-மக்கள் ஆட்சியின்—ஒப்புரிமை அடிப்படைக்கு மாறுபட்டதேயாகும்.

எல்லா மாநில ஆட்சிமொழிகளும் மத்திய ஆட்சிமொழி ஆக்கப் படுவதை ஒப்புக் கொண்டாலன்றி மத்திய ஆட்சியில் எல்லா மொழிகளும் சமமாகப் போற்றப்படமாட்டாது. ஆட்சி மொழி தவிர்த்த பிற மொழி மக்கள் வாழ்க்கைப் போட்டியில் ஒத்தவாய்ப்பை எய்துவதும் இயலாது.



எதிர்க் கட்சிக் கூட்டணி உடைஞ்சு போய் விடும்!

ஜோசியம் சொல்லறீங்க!

ஆனால் .....

காங்கிரசே உடைஞ்சு ஒவ்வொரு மாநிலத்திலே ஜன காங்கிரஸ் ஏற்படுதே! அது பற்றி என்ன சொல்லறீங்கள்!

அவ்வாறு எல்லா மொழிகளும் ஆட்சி மொழியாக வர இசைந்து அதற்குத் தக்க அமைப்பை இயந்திரத்தை வகுக்கச் சில ஆண்டுகள் செல்லும் என்பதால் முதலில் இந்தி இடம் பெறட்டும் என்று கூறுவதும் தவறே. எந்த அளவு இந்தி முதலாவதாக ஆட்சி எல்லா மாநில மொழிகளும் இடம் பெறும் காலம் வரும் வரை இந்தியாவில் உள்ள எந்த வட்டாரத்தினருக்கும் மட்டும் தனி வாய்ப்பு ஆக முடியாத ஆங்கிலம் எந்த மாநிலத்தவரும் இன்றும் ஒதுங்கி விடாது தமக்குத் துணையாகக் கொண்டுள்ள ஆங்கிலம் மத்திய அரசினர் இயங்குவதற்கு இன்று தவிர்க்க முடியாததாக உள்ள ஆங்கிலம்-இதற்கு முன்னுள்ள நிலையில் அந்த நாள் வரை நீடிக்க வேண்டும்.

இந்திய அரசு, மக்கள் ஆட்சி முறையின் குறிக்கோளில் நம்பிக்கை உடைய தானால் இந்திய தேசீய மொழிகளிடையே ஒன்றின் சார்புடையதாய் அதனையே ஆட்சி மொழியாக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும். பிற மொழி மக்கள் ஒத்த வாய்ப்பையும், அடிப்படை உரிமையையும் இழக்காத வரையில் மாநில ஆட்சி மொழிகள் அனைத்தையும் ஆட்சி மொழியாக்க வேண்டும். அந்த நாள் வரை நடுநிலைக்குக் கருவியாகவும் அரசு இயங்குதற்கு இன்றியமையாததாகவும் உள்ள ஆங்கிலத்தை மட்டுமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். ஆட்சி மொழி பற்றிய முடிவெடுப்பதற்கு—ஒரு மொழி பேசும் மக்கள் எண்ணிக்கை தேர்தல் முறை, சட்ட மன்றங்களின் வாக்குப் பதிவு எண்ணிக்கை முதலியவற்றுல் — கிடைக்கக் கூடிய 'பெரும்பான்மை' முடிவு முறையானது என்று கொள்ளக் கூடாது. ஒரு வட்டாரத்தில் வாழும் மக்களுக்குத் தம் முடைய தேவைகளை எந்த ஒரு மொழியால் நிறைவேற்றிக் கொள்ள முடிந்தாலும் அந்த மொழி—அவர் தம் பிறப் புரிமையோடு ஒட்டிய மொழி! அவர்கள் வாழும் நாட்டில் குடியுரிமையின் மூலம் அரசியலில் பெறக்கூடிய பங்குகள் அனைத்திற்கும் தம் மொழியையே பயன்படுத்தும் நிலை இருக்க வேண்டும். அந்த மொழி பேசும் மக்கள் தமது எண்ணிக்கைக் குறைவு ஒன்று காரணமாகப் பிறிதொரு வட்டார மக்கள் மொழியைக் கற்றுத்தான் அரசியல் பங்கில் சம வாய்ப்புப் பெறவும் முன்னேறவும் முடியும் என்னும் நிலைக்கு ஆட்படலாகாது.

தாய்மொழி தவிர்த்த பிற மொழிகளைக் கற்பது என்பது அவரவர் திறமை, விருப்பம், வாழ்க்கைக் குறிக்கோள், நாட்டின் பொது விஞ்ஞான அறிவுத் தேவை ஆகியவற்றிற் கேற்ப அமையலாமேயன்றி அரசியல் உரிமையோடு கலந்து ஆட்சியில் பங்கு கொள்வதற்கான கட்டாயத் தேவையாக மாறக்கூடாது. அரசியல் ஆட்சி முறையில் ஒரு மொழி இடம் பெற்று—அம்மொழி அனைவருக்கும் கட்டாயத் தேவையாகும் போது, அம்மொழி பேசும் வட்டார மக்கள் பெரும் உரிமைச் சிறப்பு மற்றவர் தம் உரிமையினும் மிகுதிபாம்! இதனால் மற்ற மக்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாகிறார்கள். அரசியல் சட்டத்தில் அனைவரது அடிப்படை உரிமைகளும் ஒத்து நிலையில் பேசப்படினும், வெளிப்படையாக எவரையும் இரண்டாந்தரக்குடியாக்கருத, ஒதுக்க 'நீதி' இடந்தராது. எனினும் மறை முகமாக குடியரசு முறை பெரும் பான்மை முடிவு என்னும் பெயரால் பிற மொழி வட்டார மக்களாக்கப்பட்டு விடுகிறார்கள்.

ஒவ்வொரு மொழியினரும் பிறிதொரு மொழியினரோடு ஒத்த குடியுரிமை யோடு, ஒத்த வாய்ப்போடு வாழ வேண்டுமெனில் மக்கள் பிறப்புடன் ஒட்டி ஒரு வட்டார மக்கள் சமூக வாழ்வை நிறைவு செய்யும் மொழிகளிடையே அரசியல் ஆதிக்கம் பெறுவதில் (ஆட்சி மொழி ஆவதில்) வேற்றுமை காட்டப்படக் கூடாது.

இவ்வாறு மொழி அடிப்படையில் மக்களிடையே பிறக்கும் உரிமையில் வேறுபடுத்தாமலிருக்கவே ஒரு வட்டாரத்தார் மொழியை மட்டும் ஆட்சிமொழியாக உயர்த்தும் முயற்சியைக் கைவிடவேண்டும். மேலும் ஒரு மொழி மக்களின் எண்ணிக்கை மிகுதி, அரசியல் கருத்து வேற்றுமையில் முடிவு காணப்பயன்படும் பெரும் பான்மையினர் முடிவு என்னும் இவற்றையே சான்றாகக் காட்டி ஆட்சி மொழிச் சிக்கலைத் தீர்க்க முனைவது முறையுமல்ல வெற்றியுந் தராது.

இந்தியாவில் வாழும் மக்கள் எம்மொழி பேசுவோராயினும் ஒரே நாட்டுக் குரியவர்கள். தனி அரசுரிமை பெற்றவரால்லர் என்னும் நியாயத்தாலேயே அவர் தம் மொழி அடிப்படை உரிமை புறக்கணிக்கப்படக் கூடியதாகாது. நாட்டுப் பற்றும் அரசியல் முறையால் உருவாகும் ஒருமைப் பாடும் (முறை எதுவாயினும்) வலிவுடையனவே. ஆனால் அதனினும் அழுத்தமும் இறுக்கமும் கொண்ட வலிவு தாய்மொழிக் குண்டு. எனவே மொழி அடிப்படை உரிமையினால் மக்களிடை ஏற்றத் தாழ்வு ஏற்பட வும், குடியுரிமை குறையுடைய தாகவும் இடனற்ற ஒரு முடிவே அழுத்தமுள்ள மொழிப் பற்று நாட்டுப் பற்று மேலும் முறுக்கேறி வலிவு பெறத் துணை செய்வதாகும்.

சமயத் துறையில் போன்றே மொழித் துறையிலும் இந்திய அரசாங்கம் ஒரு பக்கச் சார்பான ஈடுபாடு கொள்ளாமல் இருக்கவும் மக்களாட்சி முறையின் அடிப்படை குடியுரிமை அனைவருக்கும் நிலைக்கவும் ஒவ்வொருவரும் அரசில் முழுப் பங்கு பெறும் வாய்ப்பு உடையவராகவும் ஒவ்வொரு வட்டார(தேசீய) மொழியும் ஆட்சிமொழியாக வேண்டும்.

ஒரே அரசுக்கு உட்பட்டு வாழும் மக்களே யாயினும் அவரவர் தம் தாய் மொழி வழி பிறக்கும் இயல்பான உரிமையை, அடிப்படைக் குடியுரிமையாக மதித்து ஏற்றுல் தான் மக்களாட்சியின் குறிக்கோள் வெற்றி பெற்றதாகும். 'மக்களாட்சி குடியரசு' நடத்தும் அரசினர் சிந்திப் பார்களா?



காக அடம்பிடித்தால் அடிக்காமே கொஞ்சுவேனு?

கோமகன்: அடேயப்பா! ஒரு பிரசங்கமே செய்திட்டயே! சின்னஞ் சிறுசுகளுக்கு நாட்டு நிலவரம் என்ன தெரியும் கவுரி. நம்ம எரிச்சலே யெல்லாம் குழந்தைகளிடத்திலா காட்டணும்!

கவுரி: குழந்தைகிட்ட காட்டாமே குரங்கு கிட்டவா காட்டணும்! பெரிய நியாயம் பேச வந்தீட்டிங்களாக்கும்! விலைவாசி விஷம் போல ஏறிட்டு வந்தது! அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்துக்கும் வக்கில்லே! அந்த அரசாங்கத்தை மாற்றி அமைக்க உங்களாலும் முடியல்லே! நாங்கள் குழந்தைகளை அடிச்சா மட்டும் உபதேசம் அபதேசம் பண்ண வந்தீங்களாக்கும்!

கோமகன்: கவுரி! உபதேசம் பண்ணுமே உயிரையா விடச் சொல்றே! எல்லாம் இந்தப் பெண்களால் தான் என்ற எண்ணம் பெருத்து போச்சு! அது கிடக்கட்டும், விலைவாசி குறையணும்னு மந்திரம் தந்திரத்தாலா முடியும்?

கவுரி: இதோ பாருங்கோ! விஷயத்தை புரிகிற மாதிரி சொல்லுங்க. ஒன்னும் புதிர் போட வேண்டாம்.

கோமகன்: கவுரி, வீதியிலே என்ன வண்டிச்சத்தம்? யார் வர்ராங்க பாரு?

கோமகன்: ஏன் கவுரி, பையனை ஏதற்காக அடிக்கிறே?

கவுரி: அடிக்காம என்ன செய்யலாம்! அங்காடிக்குப் போனுல் கீரை கெட்டகேடு ஒரு பிடி இரண்டணு என்கிறுங்க! இந்த லட்சணத்தில இவனுக்குப் பலகாரம் வேணுமாம் பலகாரம்! அதற்



கவுரி: வாங்க மாமி வாங்க! இதோ பார்த்தீங்களா நம்ம காமாட்சி மாமி வந்திருக்கிறுங்க! வீட்டிலே மாமா, தம்பி எல்லாம் நலந்தானே!

காமாட்சி: என்ன சவுக்கிய மாருக்கு! இந்த நாசமாப் போன ரேஷன் அரிசி விக்கிற லட்சணத்திலே!

கோமகன்: என்ன விசேஷமா வந்தீங்க?

கவுரி: சேதிதான் முக்கியமோ? வாங்க மாமி காபி சாப்பிட லாம்!

காமாட்சி: காபி சாப்பிட்டுக் கிட்டே வந்த சேதியைச் சொன்னு போச்சு! நம்ப தம்பிக்குத் திருமணம் நிச்சய மாயிருக்கு, அதைச் சொல்லிப் போகத்தான் வந்தேன்.

கோமகன்: மெத்த மகிழ்ச்சி. கட்டாயம் நானும் கவுரியும் தம்பியும் வந்துடுரோம். ஆமாம் மற்றவங்களுக்கும் நீங்க செய்தி சொல்லணும்லே!

காமாட்சி: ஆமாங்க தம்பி;

கோமகன்: அப்படின்னு சித்தி! 11 மணிக்கு எக்ஸ்பிரஸ் பஸ் ஒன்று புதிதா போறது, அதேபோல ஒரு எக்ஸ்பிரஸ் (காலே) ரெயிலும் போகுது! பகல் 2 மணிக்கு பாசஞ்சர் ரயிலும் போகுது; நீங்க எதிலே பிரயாணம் செய்யப் போறீங்க!

கவுரி: என்ன இப்படி அவ சரப்படுத்துறீங்க!

காமாட்சி: இல்லேம்மா நானும் உடன் போகணும், இந்தக் காலத்திலே யார் வீட்டிலும் இரண்டு நாளைக்கு இருந் துட்டுப் போறதுன்னு அதை விட அநீதி வேறு இல்லேம் மா, நான் வர்ரேன் கவுரி!

கவுரி: என்னங்க இது! இப் படி வந்ததும் வராததுமா வழி அனுப்பி வைச்சிட் டீங்க!

கோமகன்: ஆமாம் கவுரி நமக்கு வறட்டுக் கவுரவம் எதற்கு? நம்ம வீட்டிலே இரவுக்கு அரிசி இருக்கா?

கவுரி: அது தான் தெரிந்த கதையாச்சே! வீட்டுக்கு வரும் முக்கியமானவளைக் கூட ஒரு வேளையிருந்து சாப் பிட்டுப் போங்கள் என்று வாயார சொல்றதுக்குக் கூட இல்லையே! இது என்ன காலமோ! எப்பத்தான் மாறுமோ?

கோமகன்: அப்படி வா வழிக்கு! காங்கிரஸ் கட்சி நாடாளத் துவங்கியதி லிருந்து நம்மைப் போல ஏழை நடுத்தர மக்களின் வாழ்விலும் இருள் சூழ ஆரம்பித்து விட்டது. வந் தார்க்கு இலை விரித்து விருந்து படைத்த நம்ம நாடு சோத்துக்குத் திண்டாட வேண்டியதுர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுப் போச்சு!

கவுரி: அது மட்டுமாங்க? முன் பெல்லாம் நம்ம குழந்தைங்க சாப்பிடாவிட்டா அதட்டு வோம் அடிப்போம் சாப் பிடச் சொல்லி! இந்த ஆட்சி யிலே குழந்தைங்க சற்று ருசியா பண்டம் வேணும்னு கேட்டா, போட்டு அடிக் கிறோம்!

கோமகன்: ஆகவே கவுரி நம்மைப் போன்றவர்களின் அன்றாட வாழ்க்கையிலுள்ள தொல்லைகளெல்லாம் தீர வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழியிருக்கு!

கவுரி: அதுஎன்னவழி சொல் லுங்கோ!

கோமகன்: அடுத்த மாதம் பொதுத் தேர்தல் நடை பெறப்போவதுல்லே!

கவுரி: ஆமாம், இப்போ எங்கே பார்த்தாலும் அதே பேச்சாத்தான் இருக்கு.

கோமகன்: இருக்கில்லே! நம்ம நிலையிலேயிருக்கும் ஏழை நடுத்தர மக்களெல்லாம் நல் வாழ்வு பெறவேண்டும்; நம்ம குழந்தைகள் வயிறார உண்ணவேண்டும், விலை வாசி குறையவேணும், துணி மணி விலைகளும் மலிவா யிருக்க வேணும்னு மனதார எண்ணியிருந்தா, உதய சூரியன் சின்னத்திலே நாம் அனைவரும் நம்ம வாக்கு களைப் போடணும்!

கவுரி: இதைத்தான் சொன் னீங்களா, மந்திரத்தாலோ, தந்திரத்தாலோ விலைவாசி உயர்வை குறைக்க முடியாதுன்னு; நம்ம பக்கத்து வீட்டு பங்கஜம் கூட உதயசூரியன் கோலத் தை வீதியிலே அலங்கரிச் சிட்டு இருந்தா? என்னடி இது சூரியன்னு கேட்டேன் அவ சொன்னு பாருங்க!

அரிசிவிலை குறையணும்னு, உதய சூரியன்!

குழந்தைகள் வயிறார சாப்பிடவேண்டும்னு உதயசூரியன்!

விலைவாசி ஏற்றம் குறைந்து ஏழைகள் வாழ்வில் ஒளி வீச வேணும்னு உதய சூரியன்!

தமிழ் வாழவேண்டுமானால் உதயசூரியன்!

அப்படின்னு அடுக்கடுக்காச் சொல்ல ஆரம்பிச்சிட்டா!

கோமகன்: பங்கசம் கெட்டிக் காரப் பெண், அரசியலைப் பற்றி நல்லா தெரிஞ்சு வச்சிருக்கு!

கவுரி: ஏன் எனக்கு மட்டுந் தெரியாதாக்கும். இதோ பாருங்க நான் சொல்றேன். உணவு தானிய விலை குறை யணும்னு, உதயசூரியன்! ஒரு ரூபாய்க்கு 100 அரி சின்னு எண்ணிப் போட வேண்டிய அக்கிரமம் நடக் கணும்னு காங்கிரசுக்குப் போட்டு அவதிப்படுங்க...'!

கோமகன்: கவுரி, நீ ரொம்ப கெட்டிக்காரி, உனக்கு ஒன் றும் புரியாதுன்னு நான் நினைச்சிட்டிருந்தேன்.

கவுரி: நினைச்சதோட நிறுத்திக் கிட்டீங்களே! ரொம்ப நல் லது! இதோ பாருங்க, இப்போ நடைபெறப் போகும் தேர்தலிலே தமிழ் நாட்டிலுள்ள தாய்மார் களின் வோட்டுகளனைத்தும் உதயசூரியனுக்கே தான். உதயசூரியனுடைய தோழ மைக் கட்சிகளுக்குந்தான். ஆனால் உங்களைப் போன்ற ஆண்களுக்குத்தான் இந்த உறுதி வேண்டும். அதற் கான அக்கறையைச் செலுத்துங்கோ.

கோமகன்: நான் என்ன சொல்றதுன்னு புரியலே!

கவுரி: இதோ நான் சொல் றதை வீடு வீடாப் போய்ச் சொல்லுங்கோ, - எங்கள் ஒட்டு உதய சூரியனுக்கே! நானும் இன்றுமுதல் தாய் மார்களைச் சந்தித்து வோட்டுகளைச் சேகரிக்கப் போகிறேன்.

புராண வேடங்களில் மந்திரிகள்










①


②


கண்டுபிடியுங்கள்


③


④


⑤









கழகத் தலைவர்கள் துண்டு அணியும் முறை ஒவ்வொன்றும் தனித் தனமை வாய்ந்தவை. அதைக் கூர்ந்து கவனித்தவாருக்கு ஒரு போட்டி: இங்கேயுள்ளவற்றைக் கவனித்து எந்தத் தலைவர் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

(விடை: வேறு ஒரு பக்கம் காண்க)


காந்தியார்
காங்கிரஸை
வைரக்கல்!
காங்கிரசின் சோஷலிசம்
பளபளப்பிலே-
-பார்வையிலேதான்
ஆனல் உண்மையில் அது ஒரு
காதிதப் பூ!
இன்றைய
காங்கிரஸ்
கண்ணாடிக்கல்!
காதிதப்பூ



காட்சி 1


[மாணவர் மன்றம் கூடியிருக்கிறது. மாணவ மாணவியர் நிறைந்து இருக்கின்றனர். மாணவி மரகதம் பேசுகிறாள்.]

மரகதம்: வெள்ளம்போல் தமிழர் கூட்டம்; வீரங் கொள் கூட்டம்-உள்ளத்தால் ஒருவரே! மற்றுடலினால் பலராய்க்காண்பார். அவரைக் கள்ளத்தால் நெருங்கொணாதே எனக்கண்டு, வையம் கலங்கும் நாள் எந்த நாளோ? எனக்கேட்ட புரட்சிக் கவிஞரின் கேள்விக்குப் பதில் கிடைக்கும்நாள்...தமிழை இகழ்ந்தவனே என் தாய் தடுத்தாலும் விடேன் என்ற போர்ப்பரணி பாடும் இந்நாள்...வெங்கொடுமைச் சாக்காட்டில் வீளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் என்று முரசு கொட்டும் இந்நாள்...தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் – என்று இளந் தமிழர் – எழுச்சித் தமிழர் – ஏறு நடை போட்டுக் கிளம்பி விட்ட மகத்தான நாள்! மாணவர் மானப்படை எழுந்த நாள்-மாதர் குலம் கொதித்த நாள் – மறவர் இனம்,வீறிட்டு முழங்கிய நாள்-இந்த நாளில் தமிழ்காக்க உயிர்விட்ட தியாகிகளை எண்ணிக்கொள்வோம். அவர்களின் கல்லறை இருக்கும் திசை நோக்கி வீர வணக்கம் செலுத்துவோம்.

(மாணவ, மாணவிகள் அனைவரும் மௌனமாக எழுந்து நின்று, பின் அமர்கிறார்கள்.)

மரகதம்: தியாகச் செம்மல்களின் தினமான இன்று... மாணவ மணி சாரங்கபாணியின் பெயரால் அமைந்த இந்த மன்றத்தில்... மாணவமணி ராசேந்திரன் நினைவுக் கலைக் கழகத்தார் நடத்தும்—ஓரங்க நாடகம் ஒன்று ஏற்பாடாகியிருக்கிறது. நாடகத்தின் பெயர் வஞ்சியும் காஞ்சியும்! எழுதியவர் முரசொலி மாறன் எம். ஏ.! பல்லாண்டுகாலத் திற்கு முன்னர்







மறைந்துவிட்ட சேரன் செங்குட்டுவன் திடீரெனக்கல்லறையிலிருந்து எழுந்து வந்துஇன்றையதமிழகத்தைக்கண்டால்.. என்ன நினைப்பான்... என்ன நடக்கும் என்பதே நாடகத்தின் கருத்து... இப் போது ஆரம்பமாகிறது; வஞ்சியும் காஞ்சியும்!...

(திரை)

காட்சிகள்: 2, 3, 4, 5.

[முரசொலி மாறன் எம். ஏ., எழுதி 1959-ம் ஆண்டு முரசொலி அண்ணு மலரில் வந்த 'வஞ்சியும்-காஞ்சியும்' -நாடகம் மாணவர்களால் நடத்திக் காட்டப்படுகிறது.]

காட்சி: 6.

இடம்: ரோடு.

[மரகதமும்-அவள் தோழி மாலா வும் நாடகம் முடிந்தபின் பேசிக் கொண்டு வருகிறார்கள்.]

மரகதம்: மாலா! வேண்மாள் வேஷம் உனக்கு பொருத்தமாயிருந்ததடி... ஆகா! அந்த, அண்ணு மாதிரி நடிச்சாரே;ரொம் பப் பிரமாதம்.....

மாலா: மரகதம்! இப்படி ஒரு நாடகத்தை ஏற்பாடு பண்ணி... தமிழ்த் தியாகிகள் தினத்தை சிறப்படையச்செய்த உன்னை.. எல்லா மாணவர்களும் பாராட்டுகிறார் கள்... நீ, செயலாளராக வந்த பிறகு... மாணவர் மன்றத்துக்கே தனி மதிப்படி மரகதம்... ஏன்; மங்கையர் குலத்துக்கே தனி மதிப்புத்தான்...

மரகதம்: ஏ... ஏ... மாலா!... ரொம்ப புகழ்ந்திடாதே!... மங்கையர் உலகத் திற்கு நாம் என்ன பெரிய சேவை செய்து விட்டோம்?... எத்தனையோ தியாக பத் தினிகள் இந்தத் தென்னகத்தின் ஒளி விளக்குகளாக இருந்திருக்கிறார்கள். இப் போதும் இருக்கிறார்கள்!...

மாலா: இப்போதும் இருக்கிறார்களா? யார் மரகதம்?

மரகதம்: கண்ணனையும் உன்பிறப்பை யும் போரிலே இழந்து விட்ட பிறகும்





சின்னஞ் சிறு பாலகனுக்குச் சீவி முடித்துச் செருமுனைக்கு அனுப்பி வைத்த தாய்களைப் பற்றியவீர வரிகளைப் புறநானூற்றிலே படித்திருக்கிறோம் ... ஆனால் நான் இப்போது இருப்பதாகச் சொல்லுகிற அந்தத் தியாக மகளிர்க்குப் புறநானூறு பாட்டு இல்லை ... ஆனால் ... அந்த வீரத் தாய்கள் இருக்கிறார்கள் மாலா; இருக்கிறார்கள்.

மாலா: மரகதம்?

மரகதம்: தமிழ்காக்க நடைபெற்ற கிளர்ச்சியில் தமிழகமே தணற்காடு — ரணக் காடாக மாறியபோது, தன் ஆருயிர்க் கணவனை அறப்போர்க் களத்தில் உயிரோடு அள்ளிக்கொடுத்து விட்டுத் தாலியறுத்து தவித்து நிற்கும் தமிழ்த்தாய் ஒருத்தி இருக்கிறார்கள்; எனக்குத் தமிழ் உணர்ச்சி ஊட்டிக்கொண்டு! ... காண வருகிறாயா; அந்தக் காவேரி என்னும் கனற்பிழம்பை! கற்பின் உருவை! காண வருகிறாயா மாலா!

மாலா: மரகதம்! அப்படிப்பட்ட தமிழ் அன்னையின் காலடி மண்ணை எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டால்.. கோழைகளின் உள்ளமும் வீரங்கொள்ளுமே! எனக்குக்காட்டு மரகதம்; அந்தக் கற்புக் கரசியை!

மரகதம்: வா, போகலாம்...

(இருவரும் போகிறார்கள்)

(திரை)

காட்சி 7.

[மரகதமும் மாலாவும் காவேரி விட்டிற்கு வருகின்றனர்—இந்தி எதிர்ப்புப் போரில் துரைத்தனத்தின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான கொள்கைச் சிங்கத்தின் மனைவி தான் காவேரி]

மரகதம்: (மாலாவிடம்) இதோ; படமாகி விட்டவர்தான் தமிழ் காக்கும் அறப்போரில் பிணமாகிப் போனவர்... உயிர் பிரியும் தருவாயிலும் "உலகத்தோடு பிறந்த தமிழ் வாழ்க!" என்று கூவிடத் தவறவில்லை இந்தக் கொள்கைச் சிங்கம். (கும்பிடுகிறாள். மாலாவும் கும்பிடுகிறாள்)

மாலா: (மெதுவாக) மரகதம்!... காவேரியம்மா எங்கே?.....

மரகதம்: இரு.....வருவார்கள்..... (உள் நோக்கி) அம்மா! அம்மா!!

(இருவரும் காவேரி வருகையை எதிர் பார்த்து நிற்கிறார்கள்...)
(வீரத்தாய் பற்றிய சோக கீதம் பின்னணியில் கேட்கிறது. காவேரி யம்மா வருகிறார்கள்)

மரகதம்: வணக்கம்மா...

காவேரி: வணக்கம்; வாம்மா...

மரகதம்: இவ...மாலா.....என் கல்லூரித் தோழி.....

(மாலா வணங்குதல், காலில் விழுந்து.....)

காவேரி: எழுந்திரம்மா...என் காலில் விழுவதா?...நான் எவ்வளவோ பாபம் செய்தவள்.....

மாலா: பாபமா?...

காவேரி: ஆமாம்...இதோ பார்; நான் புண்ணியம் பண்ணியிருந்தா அவருக்கு முன்னேயல்லவா போயிருப்பேன்.....


மரகதம்: என்னம்மா; கவலைப்பட ஆரம் பிச்சுட்டீங்களா?.....

காவேரி: இல்லை மரகதம்...நான் எப்படிக் கவலைப்பட முடியும்? கண்ணீரும் வற்றி விட்டது...உள்ளமும் மரத்துப் போய் விட்டது.....தமிழ் காத்த வீரமறவர் வரிசையிலே புகழ்க்கிரீடம் அணிந்து கொண்டு அவர் புன்னகை புரிகிறார். அவரை நினைத்து நினைத்து நான் பெருமைப்படுகிறேன்...

மரகதம்: அம்மா! உங்கள் கணவர் அணிந்திருக்கும் புகழ்க் கிரீடத்துக்கான பொன்னை; உங்கள் தாலியிலிருந்தல்லவா தந்திருக்கிறீர்கள்... நீங்கள் சூடியிருந்த முல்லை மொட்டுக்களையல்லவா, அந்தக் கிரீடத்தின் முத்துக்களாகப் பதித்திருக்கிறீர்கள். அந்த மகுடத்தில் மின்னும் ரத்தினம்; தாயே உங்கள் குங்குமப் பொட்டல்லவா?...

காவேரி: மரகதம்! உன்னைப் போன்ற நல்ல உள்ளங்கள் வடிக்கின்ற அனுதாபக் கண்ணீர்; அடக்கு முறை வெறியர்களை அழிக்கின்ற கனற்பிழம்பாக மாறட்டும். நாவிழந்த மஞ்சளும் குங்குமமும்... மமதை கொண்டலையும் தமிழ்ப் பகைவர்களின் நெஞ்சழுத்தத்தைச் சுட்டுப் பொசுக்கட்டும்.....

மரகதம்: அம்மா!...அது நடந்தே தீரும்! அரசு அன்றுகொல்லும், தெய்வம் நின்று கொல்லும்...தெய்வம் யாரம்மா?..தேம்பி



அழுது கொண்டிருக்கும் ஏழைமக்களின் எளிமைலை உள்ளந்தானம்மா; அழிவுக் கடவுள்!...அவர்கள் சிரிப்புத்தானம்மா ஆக்கக் கடவுள்!...அவர்களின் கடமை யுணர்வு தானம்மா காக்கும் கடவுள்!... இதை உணராத உன்மத்தர்களுக்கு உடனடியாகப் பாடங் கற்பிக்க உங்களிடம் ஒரு வேண்டுகோளை வைக்கவே இப்போது வந்தேன்.

காவேரி: என்ன மரகதம்?

மரகதம்: தங்களை இந்தக் கோலத்திற்கு ஆளாக்கியவர்களுக்கு அறிவு புகட்ட... அடுத்து வருகிற தேர்தலில்...ஜனநாயக நெறியில்...வெற்றி காணவேண்டும்.....

காவேரி: அதற்கு?...

மரகதம்: இந்தத் தொகுதியில் தாங்கள் போட்டியிட வேண்டும்;

காவேரி: என்ன...தேர்தலா?...

மரகதம்: ஆமாம் ... தமிழ் காக்கும் மானப்படை மறவர் முகாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தாங்கள் போட்டியிட வேண்டும்.....

காவேரி: மரகதம் ?


மரகதம்: எங்கள் மாணவர் அணி உங்கள் பின்னால் ! ... ...இரக்கமுள்ள இதயங்கள் அத்தனையும் உங்களை ஆதரிக்கும்! இந்தி எதிர்ப்பின் சின்னம் அம்மா தங்களின் வெற்றி! தயங்காமல் ஒத்துக் கொள்ளுங்கள் ... (கெஞ்சுகிறாள்)

காவேரி: வேடிக்கையான பெண்... இந்தத் தொகுதியில் ஆளுங் கட்சியின் சார்பாக உங்க அப்பா நிற்கப் போகிறார். அவருக்கு நான் போட்டியா?...

மரகதம்: எங்கள் அப்பாவை இப்போதே எழுதி வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டேனே; எத்தனை லட்சம் செலவழித்தாலும் இந்தத் தடவை கட்டிய முன்பணம் வராது என்று!

அம்மா! உங்களை நான் ஒத்துக்கொள்ளச் சொல்வது;பதவியில் அமர வேண்டும் என்பதற்காக அல்ல

தமிழை அழிக்க வரும் ஆபத்தைத் தமிழகம் முழு மூச்சோடு எதிர்க்கிறது என்பதை உலகத்திற்கு





சத்தியாக் கிரகத்துக்குப் போனவர்... கள்ளுக் கடை மறியல் செய்த போது கர்ப்பவதியாக இருந்த நானும் அவரும் ஒரு வருடம் சிறையில் அடைபட்டோம் ..... கண்ணன் பிறந்ததே சிறையில்தான்!

மாலா: ஆயர்பாடிக் கண்ணன் கூட சிறையில் தான் பிறந்தான்...

மரகதம்: அவன் குழலும் கையுமாகத் திரிந்தான்... இந்தக் கண்ணன் கொடியுங் கையுமாக அல்லவா திரிவார்...

காவேரி: இப்போ துகையில் கொடியில்லே. காரணம்; கட்சிக் கொடிக்கும் தேசியக் கொடிக்கும் வித்யாசமில்லாமல் செய்து விட்டார்களே என்று; அவனுக்குவருத்தம்... அதனால் கொடி பிடிப்பதில்லே.

மரகதம்: சரிம்மா; நிபந்தனையென்றீர்களே! என்ன அது?...

காவேரி: அவன்காங்கிரசை திருத்தப் போகிறேன் என்று கூறிக்கொண்டு ஒரே வெறியாக அலைகிறான்...

மரகதம்: காங்கிரசைத் திருத்துவதா? கடலில் விழுந்து காணமற்போன பொருளை கையில் விளக்கெடுத்துக் கொண்டு தேடுவதுபோன்ற முயற்சி அல்லவா அது...

காவேரி: அந்த முயற்சியில் இருந்து அவனை மாற்ற வேண்டும்-இடிந்துபோன கட்டிடத்திலிருந்து அவனை வெளியேற்ற வேண்டும்.....நிலகர்—காந்தி போன்ற தியாகிகள்வளர்த்த காங்கிரசைத் தியோர் கையிலிருந்து மீட்பேன்...படம் போட்ட தங்கமாக்குவேன் என்றெல்லாம் புலம்புகிறான்... பிணமாகி விட்ட அவன் தந்தையால்கூட அவன்பிடிவாதத்தைமாற்ற முடியவில்லே...காங்கிரசைஅவனால் மட்டுமல்ல; இனி யாராலும் திருத்த முடியாது என்பதை அவனுக்கு உணர்த்தவேண்டும் அவன் தன்னை உணர்ந்து—தமிழை உணர்த்துவதற்காக!...

காவேரி: இப்போது நான் உன் கோரிக்கைக்கு இணங்க வேண்டும் இல்லையா?...

மரகதம்: ஆமாம்...

காவேரி: அதற்கொரு நிபந்தனை யிருக்கிறது; அதை முதலில் நிறைவேற்று..... அதன்பிறகு உன் அன்புக் கட்டளைக்கு நான் கட்டுப் படுகிறேன்...

மரகதம்: என்னம்மா?

காவேரி: என் மகன் கண்ணனைத் தெரியுமல்லவா?...

மரகதம்: நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன்...அறிமுகமில்லே...அவர் தீவிரமான காங்கிரஸ் தியாகியாயிற்றே...

காவேரி: இந்தக் குடும்பமே அப்படித் தானேயம்மா; கண்ணனின் அப்பா(படத்திடம் போய்) காந்திமகானின் உப்புச்

உணர்ந்து—தாயை உணர்ந்து தமிழ்ப் பகைவர்களே நோக்கித் தடந்தோள் உயர்த்தும் விரமகனுக விளங்கிடவேண் டும்...அதனைச் செய்ய உன்னல் முடியுமா?...முடியுமென்றால் உடனே செயல்படு...இதுதான் மரகதம் என் நிபந்தனை ...

மரகதம்: எனக்கு நம்பிக்கையிருக்கிற தம்மா! மாற்றாரின் மனத்தை மாற்றுகிற அளவுக்குத் தூய கொள்கைகள் இருக் கும்போது; தங்கள் மகனை மாற்றி விட லாம் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது...

காவேரி: அப்படியானால் வாழ்த்தி அனுப்பு கிறேன்...வெற்றியை நோக்கிப் போ... வெறி கொண்டாலும் என் மகனை நெறி கண்டார் வழிக்கு அழைத்து வா.....

மரகதம்: சரியம்மா, நான் உங்கள் நிபந் தனையை நிறை வேற்றுகிறேன் ... நான் சொன்னதை நீங்கள்?...

காவேரி: (தழுவிக் கொள்ளுதல்) அதை மறக்க மாட் டாயா? அடி என் கண்ணே; முத லில் கண்ணனைத் திருத்து!

(திரை)

காட்சி 8.

[உத்தமர் காந்தி உண்மை ஊழியர் சங்கத்தில்-காந்தியார் பட்டத்தின் மூன் கண்ணன் கையெடுத்துக் கும்பிட்டவாறு நிற்கிறான். வாழ்கநீ எம்மான்- என்ற பாடல் முழங்குகிறது.]

தசாவதாரம்! : (பாடல் முடிந்ததும்) வாழ்க வாழ்க!

கண்ணன்:—அடேடேவாங்கய்யா தச்சாவ தரம்...

தசா:— என்ன கண்ணு; சௌக்கியமா?

கண்:— ம்...ஆமாம்... தசாவதாரம்! இது என்ன புது அவதாரம்?

(கதர் சட்டையைத் தொட்டு)

தசா:—கதரைக் கேக்குறீயா?இதபாரு; ஒரு இருபது இருபத்தஞ்சு வருஷத்துக்கு முந்தி இந்தமாதிரி கதர் ஆடையிலே இருந்தா மண்டை உடையும் - எலும்பு நொறுங்கும் ஜெயிலில் போடுவான் ..... இப்ப இந்த டிரஸைப் பார்த்து காக்கி டிரஸ் கூட தலை வணங்கு துல்ல! ...

கண்:— தசாவதாரம்! பகவான் கூட பத்து அவதாரம் தான்எடுத்தாராம் ... நீ எடுக்கிற அவதாரத்



துக்கு கணக்கே : இருக்காது போலிருக்கு ... நீ பிறந்த உடனே உனக்குப் பேரு வச்சதை விட உன் காலம் முடிஞ்ச பிறகு ...நீ எடுத்த அவ தாரங்களுக்கணக்குப் பார்த்து அப்புறம் வச்சிருக்கலாம் பொருத்தமான பேரு...

தசா:— அதிருக்கட்டும்பா கிண்டலு; உன்னைப் பார்க்கத்தான் முக்கியமா வந்தேன்...

கண்:— ஏன்? என் கிட்ட என்ன? பஸ் ரூட்டா ... பர்மிட்டா,... கோட்டாவா... லேசென்சா ...?நான் கொடுக்கிறதுக்கு ஒண்ணும் இல்லியே!...

தசா:— அதில்லப்பா; உன்னைப் பாக்கிறதுக்கு என் முதலாளி வரணும்னு சொன்னாரு... வாசல்ல தான் காரிலே இருக்காரு ...காத்துகிட்டு இருக்காரு...

கண்:— முதலாளியா; யாரு?.. புது முதலாளியா? ... இல்ல; பழைய...

தசா:— சே ... சே ... சே ... பழைய முதலாளியை விட்டு... ரொம்ப நாளாச்சு ... அதான்ப்பா நம்பஊர் சேர்மேன்... திரவியம்பிள்ளை!...

கண்:— ஓ...திரவியம் பிள்ளையா?... சேர்மன்!சேர்மன்! ஏம்பா தசாவதாரம் ... என்ன உங்க சேர்மன் கொண்டுவந்த தீர்மானம் ஒண்ணு கூட நகரசபையிலே ஜெயிக்கிறது இல்லையாமே...

தசா:— ஆமாம் ... அதனால என்ன?...

கண்:— சர்க்கார் உத்திரவுகளையே மீறி ... காரியங்கள் நடத்துராங்களாமே.....

தசா:— ஹி ஹி ஹி...

கண்:— கவுன்சிலர்களுக்குள்ள கை கலப்பாம்..... காலணிகள் கூட...

தசா:— ஆமாம் ... காலனி ... காலனி... ஹரிஜனங்களுக்காகக்கட்டி...

கண்:— அட...அதுஇல்லய்யா; காலணிகள்...அதாவதுபாதுகைகள் நகரசபைக்குள்ளேயே பறக்கின்றனவாமே...?

தசா:— பறக்கட்டும்...பறக்கட்டும்...

கண்:— நகரசபையைக் கலைத்து விடுவதாகயோசனை இருக்கிறதாமே சர்க்காருக்கு...

தசா:— அதிருக்கட்டும்; எல்லாம் சொல்லு; அதைமாத்திரம் சொல்லாதே! (இதைக்



கேட்டதும் காக்கை வலிப்பு வந்தவர் போல் தசாவதாரம் கை கால்களை உதறுகிறார், கண்ணன் குறும்புக்காக ஒரு சாவிக் கொத்தை எடுத்து தசாவதாரம் கையில் வைக்கிறார், உடனே தசாவதாரம் நிதான மடைந்து...)

தசா:— ஆ! என்ன இது சாவிக் கொத்து? எனக்கென்ன காக்காவலிப்புன்னு நெனச்சியா?:

கண:— வலிப்பில்லே; காக்காமட்டும்தான்.

தசா:- நடக்கிறது நம்ப காங்கிரஸ் நகர சபையாக்கும்!... நம்ப விரலாலேயே நம்ப கண்ணை குத்திக் கொள்வாங்களா?...

கண்:— ஆமா ஆமாம் மற்றவர்கள் கண்ணைத்தான் குத்தணும்...

சங்கத் தலைவர் யாரையோ;

"வாங்க! வாங்க!!

பெரியவா வாங்க!"

என்று இருகை விரித்து அழைத்தவாறு உள்ளேவருகிறார்...)

தலைவர்:— கண்ணு... சேர்மன் திரவியம் பிள்ளை வராரு... வாசல்ல காரிலேயே உட்கார்ந்துட்டார்...நான் பாத்து அழைச்சிகிட்டு வர்ரேன்...பெரியவாளைக் காக்க வைக்கலாமா...

திரவியம்:— (வந்தவாறு) பரவாயில்லை... பரவாயில்லை ...என்னய்யா தசாவதாரம் ஒரேயடியா உட்கார்ந்துட்டே!...

தசா:— இல்லிங்க...தம்பி தான் இங்க ... உண்மை ஊழியர் சங்கத்து செயலாளர் கண்ணன்—

திரவி:— கேள்விப்பட்டிருக்கேன். நிறையக்கேள்விப் பட்டிருக்கேன்... பெரியபேச்சாளர்.. அரியதியாகி... உண்மையான உழைப்பாளி ...எல்லாம் கேள்விப்பட்டிருக்கேன்...

தசா:— இவர் தான் இந்த சங்கத் தலைவர் சத்திய நாதன்...

திரவி:— தெரியுமய்யாதெரியும்...வந்த விஷயத்தை தம்பி கண்ணன் கிட்ட சொன்னீரா?...

தசா:— இன்னும் ஆரம்பிக்கலே... இப்ப தான் ஆரம்பிக்கப் போறேன்...

திரவி:— நீர் எல்லாத்திலியும் 'லேட்' தான்ய்யா...இனிமே உன்னே...லேட் தசாவதாரம்னுதான் கூப்பிடணும்...சரி...சரி ...விஷயத்துக்கு வாரும்...

தசா:— அதாவது...தலைவர் அவர்களே!... ம் ... ம் ... சத்தியநாதன் தலைவர் சத்யநாதன் அவர்களே...அண்டு கண்ணு! நம்ப சேர்மன் அய்யா திரவியம்பிள்ளை அவர்கள் வர்ர பொதுத் தேர்தலிலே நிக்கப் போராரு...

திரவி:—(கோபமாக)தசாவதாரம்!அதையா முன்னுடி சொல்றது!... வாயை மூடு!... நான் சொல்றேன்! ... அதாவது ... நான் காங்கிரசில வெகு காலமாக ... அதாவது ஏழெட்டு மாத காலமாகப் பாடு பட்டு வருகிறேன்.....

கண்:— ஏ! அப்பா! ஏழெட்டு மதாகாலம்! பாலகங்காதர திலகர் காலம்!

திரவி:— (தனியாக —தணிவான குரலில் தசாவதாரத்திடம்) யாரய்யா அவங்கலெல்லாம்?

தசா:— (மெதுவாக) எனக்குந் தெரியாதே.

கண்:— ஆமாம்...உப்புச்சத்யாக்ரகம்நடந்தபோது கலந்து கிட்டீங்களா?...

திரவி:— ஓ...எங்கவீட்டு உப்பரிகையிலே இருந்து பாத்திருக்கேன்...

கண்:—கள்ளுக் கடைமறியல்நடந்தபோது



திரவி:— என்னப்பா; இது தெரியாதா, என் கடை வாசல்ல தானே மறியலே நடந்தது...

கண்:— ஜெயிலுக்குப் போயிருக்கீங்களா...

தசா:— கண்ணு!...அவசரப்பட்டு கேள்வி கேக்கிறியே—அவரைப் பார்த்து ஜெயிலுக்குப் போனீங்களான்னு கேக்கிறதா?...போன வாரங்கூட ஜெயிலுக்கு போனாரு.....ஜெயில் விசிட்டர்களிலே அவர் ஒருத்தர்னு உனக்குத் தெரியாதா?

சத்யநாத:— துருவித் துருவிக் கேட்பானேன்...இன்னைக்குக் காங்கிரசைக் கட்டிக் காக்கிறதே அவர்தான்.....வந்த விஷயம் என்னன்னு தெரிஞ்சா.....

தசா:— அவா...பெரிய மனசுவச்சு...இந்த "உத்தமர் காந்தி உண்மை ஊழியர் சங்கத்"திலே தன்னை போஷகரா ஆக்கிக் கொள்ள விருப்பம் தெரிவிச்சார்..... நீங்களும் அதை உங்கள் பாக்யமாகக் கருதி...

சத்ய:— ஆட்சேபனை என்ன?...உங்களைப் போல பெரியவர்கள் தயவு இருந்தாஇந்த சங்கம் ஆல்போல் தழைக்கும்...என்ன கண்ணு!?...

கண்:— தலைவரே!...இது உண்மைத் தொண்டர்கள் முகாம்! உத்தமர் காந்தியின் பெயரால் இயங்கும் உழைப்பாளிகளின் பாசறை! இதனைச் சுயநலவாதிகளின் கூடாரமாக...பதவிப் பித்தர்களின் வேட்டைக் காடாக மாற்ற நான் விரும்பவில்லை

சத்ய:— கண்ணு! வந்தாரை வரவேற்பது தானேதமிழன் பண்பு!...

கண்:—உண்மை!...கடலிலே கிடக்கும் முத்துச் சிப்பி, மழைத்துளிகளை மட்டுமே வாய் பிளந்து வரவேற்கும்...கழிவு நீரையும் வரவேற்கக் காங்கிரஸ் தயாராக இருக்கலாம்; ஆனால் இந்தக் காந்தியார் சங்கம் அதற்கு இடம் தர இயலாது!...

சத்ய:— கண்ணு!...பெரியவர்களை வைத்துக் கொண்டு மரியாதையாகப் பேசு!

கண்:— மரியாதை தருவது வேறு... மண்டியிடுவது வேறு...இரண்டாவது காரியத்துக்கு நான் இணங்கமாட்டேன்..

தசா:— கண்ணு...சும்மா இல்லை...இந்த சங்கத்தின் போஷகர் அப்பா,போஷகர்... வேண்டும்போதெல்லாம்பணம்...தேவைப் படும் போதெல்லாம் வசதி...தேர்தல் நேரத்தில்..,

கண்:— உங்கள் திருவிளையாடலுக்கு இது மண்டபம்...முடியாது!...வேறு ஏதாவது பேசுங்கள்!

திரவி:—கண்ணு!...காங்கிரஸ் மீது உனக்கு ஆசை உண்டா இல்லையா?

கண்:— உண்டு...

திரவி:— அது தேர்தலில் ஜெயிக்க வேண்டுமா; வேண்டாமா?...

கண்:—அதற்காக.....?

திரவி:— என்னைப் போன்றவர்களை ஆதரித்தால்தானே முடியும்...என்பணமும்... உன் உழைப்பும்...பேச்சும்...மூச்சும்... எழுத்தும்...காங்கிரசை வெற்றி பெறச் செய்யும்...நான் ஜெயித்தால் காங்கிரஸ் ஜெயித்ததாக அர்த்தம்...இல்லையா?...

கண்:—அய்யோ...காதுகளால் கேட்கமுடியவில்லை...கொஞ்சம் இருங்கள் மகாத்மா படத்தை திருப்பி வைத்து விட்டு வருகிறேன்...பிறகு பேசுங்கள்.

சத்ய:— (தடுத்து) கண்ணு! இந்த சங்கத்து தலைவன் என்ற முறையில்...நான் அவர்களைப்போஷகராக ஏற்றுக்கொள்ள முடிவு செய்து விட்டேன்.

கண்:— ஆ! பரவாயில்லை—முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் என்று நான் சொல்ல மாட்டேன்...எனக்காக தாங்கள்முடிவை மாற்றினாலும்...செல்வந்தர்களுக்கு முன்னால் சாய்ந்துவிட்ட உங்கள் உள்ளத்தை என்னால் மாற்றமுடியாது...ஆகவே நான் என்இடத்தை மாற்றிக்கொள்ளுகிறேன். வருகிறேன்...(புறப்படுகிறான்)

மூவரும்:—

திரவி:— கண்ணு!

சத்ய:— கண்ணு!

தசாவ:— கண்ணு!

(ஆவேசத்துடன்)

கண்:— போஷகராகுங்கள்! பொருளைக் குவியுங்கள்!! பொதுத் தேர்தலை நடத்துங்கள்!!! போலிக் காங்கிரஸ்காரர்களே! புதிய வரவுகளே! உங்கள் முன்னால்நான் சபதம்எடுத்துக்கொள்கிறேன்...உங்களையெல்லாம் ஓட்டிவிட்டு...உண்மை ஊழியர்களின் பாடி வீடாகக் காங்கிரசைமாற்றும் வரையில் எனக்கு ஓய்வில்லை... உறக்கமில்லை...வருகிறேன்...

(கண்ணன் போகிறான்)

திரவி:—ஒய்வில்லே ... உறக்க மில்லே...ஏன் உணவுமில் லேன்னு சொல்லாம்ம போயிட்டான்...

தசாவ:— நம்ம ஆட்சியில தான் அது சொல்லாமலே தெரியுமே...

(திரை)

காட்சி: 9.

இடம்: உத்தமர் காந்தியின் உண்மை ஊழியர்சங் கத்தின் வாயிற்படி



தசாவ:— அப்பாடி; எப்படி யோ உண்மை ஊழியர் சங் கத்தைக் கைப்பற்றியாச்சு ...மலையைக் கெல்லிஎலி யைப் டிபுச்சாச்சு.

திரவி:— எலியைப் புடிச்சு என்னய்யா பண்றது...

தசா:— எலின்னு என்ன கேவலங்கிளா? 67-லேதேர் தலிலே ஜெயிச்சா பிறகு பாருங்க...இந் தி யா வின் தேசிய உணவே எலிதான்!

திரவிய:— தசாவதாரம்!... கண்ணன் இல் லா த உண்மை ஊழியர் சங்கம் நம்ம கையிலே இருந்தா என்ன; இல்லா விட்டா என்ன; அவனுடைய வீரமான சொற்பொழிவு-விளக்கமான எழுத்து— ஓடியாடி வேலே செய்யும் திறமை-இதெல் லாம் நமக்குப் பயன் படாமல் போறது மட்டுமல்ல; காங்கிரஸ் மேடையிலேயே நின்னுக்கிட்டு...காங்கிரஸ் அபேட்சகரா நிற்கப் போற என்னைத் தாக்கிப் பேசி னால் என்னலே தாக்குப்பிடிக்க முடியா தப்பா...இத பார்...என்ன செலவானா லும் சரி; இந்தா பணம் ஐநூறு ரூபா இருக்கு! அட்வான்ஸ் கொடு!...ஆயிர மாயிரமா தர்ரேன்னு சொல்லு!...அவனே நம்ம ஆளா ஆக்கிடு.

தசா:— ஹி ஹி ஹி...ஐநூறைப் பார்த்தா ஆள் வாயைப் பிளந்து விடுவான்...எஜ மான்!...நான் அவனே வழிக்குக்கொண்டு வர்ரேன்...நீங்க கவலேயை விடுங்க!...

திரவி:— இப்பவேபுறப்படு! அவன் எங்கே யிருந்தாலும் கண்டு பிடி! காரியத்தை முடி!...கண்ணன் என் கையில்!...அந்த வெற்றிச் செய்தியைக் கொண்டு வா!...

தசா:— அப்படியே ஆகட்டும்...ஏ, டிரை வர் அய்யாவுக்கு காரை எடு...நான் கண் ணனேப் போயி, அவன் வீட்டிலே தேடிப் பார்க்கிறேன்...ஜே ஹிந்த்

திர:—ஜே ஹிந்த்!!

(திரை)

காட்சி: 10. இடம்: காவேரி வீடு

[காவேரி, தன் கணவன் படத்திற்குப் பக்கத்தில் அண்ணு படம் ஒன்றை மாட்டிக் கொண்டிருக்கிறாள்...அப்போது;

"காவேரியம்மா" என்ற குரல் கேட்டுத் திரும்புகிறாள்...தசாவதாரம் வருகிறார்]

தசா:— அடடாடா...அபச்சாரம் அபச் சாரம்...என்ன அக்கிரமம் இது...காஞ்சி புரத்தார் படத்தைப்போயிஇங்கமாட்டிக் கிட்டு...

காவே:— ஏன்?...நெருப்பை மிதிச்சது மாதிரி துடிக்கிறீங்க? இந்தப் படம் இருந்தா என்ன?

தசா:— காவேரியம்மா...உங்க கழுத்திலே தாலியில்லாமே செய்த கட்சியல்லவா; அந்த தி. மு. க. கட்சி...அதனுடைய தலைவரல்லவா; இந்த அண்ணாத்துரை?

காவே:— அய்யர்!... உமது கயமை நிறைந்த பேச்சைக் கேட்டு கண்ணகி போல் கனல் கிளம்புகிறது என் கண்ணில்...ஆனால்...காஞ்சித் தலைவனின் அமைதியான பார்வை; உம்மை மன்னிக்கச் சொல்கிறது...அதனால் தப்பித்தீர்...என் தாலியும், மஞ்சளும் தமிழ் காக்கும் பட்டாளத்தால் பறிபோக வில்லை...தன்மானமிழந்து, தாயை விலை கூறத் துணிந்த தமிழ்த் துரோகிகளால் பறிக்கப்பட்டு விட்டது என்பதை மறவாதீர்!

தசா:— இந்தியை எதிர்த்து இவரு போராட்டம் ஆரம்பிக்கலேன்னா... நாடெங்கும் கிளர்ச்சி...நாசம்...ரகசிய துப்பாக்கிப் பிரயோகம்...உங்க கணவரை போல பலபேர் சாவு...இதெல்லாம் ஏற்பட்டிருக்குமா?...அதனாலே எல்லாத்துக்கும் போராட்டம் ஆரம்பிச்ச இவர் தானே காரணம்?

காவே:— உண்மைதான்! காரணகர்த்தாக்களை தண்டிக்கணும் இல்லையா?...

தசா:— ஆமாம்! சரியா தண்டிக்கணும்!

காவே:— இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஏன் ஆரம்பிச்சது?...

தசா:— இதென்ன கேள்வி! இந்தி வந்தது அதனாலே எதிர்ப்புப்போராட்டம்...

காவே:— இந்தி வராவிட்டா...இந்தி எதிர்ப்பு இருக்காதல்லவா? அதனால் போராட்டத்திற்குக் காரணம், இந்தியைக் கொண்டுவந்தவர்கள். என் மஞ்சளும் மலரும் போனதற்குக் காரணம்; இந்தியைக் கொண்டு வந்தவர்கள்... இப்போதுசொல்லும்...யாரைத்தண்டிக்க வேண்டும்? ... யாரைத் தண்டிக்க வேண்டும்?...

தசா:— அதை விட்டுத் தள்ளுங்க.. அண்ணை படம் என்ன; நாளைக்கு நான் இன்னம் அஞ்சாறு தி. மு. க. தலைவர்கள் படம் கொண்டாந்து தர்றேன்; அதையும் மாட்டுங்க...நான் வந்த வேலையை விட்டுட்டு எதைஎதையோ பேசிக்கிட்டு இருக்கேன்...ஆமாம்...உங்க மகன் கண்ணன் எங்கே?

காவே:— அவன் வீண் வேலைக்குப் போயிருக்கான்...வீட்டுக்கே வர்ரது இல்லை!...

தசா:— வீண் வேலைக்கா?

காவே:— அதான்...காங்கிரசை சீர்திருத்தி —புனிதப் படுத்தப் போகிறானும்...

தசா:— சபாஷ்!...நான் நினைக்கிறதையே நீங்களும் சொல்றீங்க...காங்கிரசையாவது புனிதப் படுத்துறதாவது...நடக்குமா?...காலத்தோட சேர்ந்து நாமும் மாறிக்க வேண்டியதுதான்...இப்ப என்னைப் பாருங்க...எனக்கு என்ன அழுவுது காங்கிரசு...ஏதோ...பிசினஸ்...அவ்வளவுதான்! இப்ப காங்கிரசில இருக்கிற வசதிகளைப் பயன்படுத்திக்க உங்க மகனுக்குத் தெரியவே இல்லை...

காவே:— பாடஞ்சொல்லத்தான் வந்திருக்கிறீரா?...

தசா:— பாடம் மட்டுமா?...பணங்கூட அட்வான்ஸ் கொடுக்க வந்திருக்கேன்... இதோ திரவியம்பிள்ளை கொடுத்தார்... கண்ணனுகிட்டே கொடுன்னு 250 ரூபாய்! நான் வழக்கமா எடுக்கிற கமிஷன் கூட எடுக்காமேஅப்படியேகொண்டு வந்துட்டேன்...ம்...பிடியுங்க!

[காவேரி பணத்தைப் பெற்றுக் கொள்ளாமல் விசிறியறிகிறாள்]

காவே:— (ஆத்திரத்துடன்) சே!...என் மகனை விலை கொடுத்து வாங்கவா வந்துட்டே!...ம்! மரியாதையாக என் விரல் காட்டிய வழியிலே போ!... நிற்காதே! ஊழல் —ஊதாரித்தனம்—வறுமை—சாக்காடு—பசி—பஞ்சம் — பட்டினி — இவைகளைத் தடுக்க முடியாத உங்களுக்கு விலை கொடுத்து ஆட்களை வாங்க மட்டும் எங்கிருந்தய்யா துணிவு வந்தது?...விலைவாசி ஏற்றம்—வேதனைப்புயல்! அரிசிக்கு கியூ!...அல்லும் பகலும் கஷ்டம்!.... எண்ணெய் இல்லாததலை—விளக்கில்லாத வீடு—பூனை தூங்கும் அடுப்பு—பொழுதெல்லாம் கண்ணீர்—ஆளுகி நீர்கள் ஆண்டு பதினெட்டாக..."ம்" என்றால் சிறைவாசம் ஏன் ஏன்றால் கைலாசம் இந்தப் பழி பாவங்களையெல்லாம் பண மூட்டையைக் கொட்டி மறைத்து விடலாம் என்ற நம்பிக்கை, பாழ்பட்டுப் போய்விடுமென்பதை பாவிகளே; உணர்ந்து கொள்ளுங்கள்!

தசா:— காவேரி...பணத்தின் அருமை உனக்குத் தெரியாது...நான் கண்ணனைப் பார்த்துக் கொள்ளுகிறேன்.

காவே:— கண்ணன் வீரத்தாயின் மகன்... உன்னைப்போல் விபீஷணன் அல்ல; விலை போகும் பொருளாவதற்கு!

தசா:— ம்...வருகிறேன்

காவே:— வராதே; போ!

(காவேரியம்மா உள்ளே போய் விடுகிறார்)

தசா:— (தனக்குள்) ஏயப்பா...தமிழு... கட...கட கடன்னு கடல் மாதிரி பொங்குதே...நமக்கிட்டயும் தான் இருக்குறுங்க பொம்பளைங்க! ஒழுங்கா நாகரீகமா ஒரு வார்த்தை பேசத் தெரியுதா...

(அண்ணு படத்தை நோக்கி)

எல்லாம் இந்த மனுஷர் செய்ற வேலை... சாமி!... போய்ட்டு வர்றேன்...நீ இல்லேன்னு ... இந்நேரம் முதுகுத் தோல் உறிஞ்சிருக்கும்.....ம்... முகத்திலேயே ஒரு அமைதி தான் இருக்கு...

(சுற்றுமுற்றும் பார்த்து விட்டு கதவைத் தொட்டு பார்த்தவாறு)

ஏப்பா; யார் காதிலாவது விழப் போவுது தசாவதாரம்!... பொழப்பிலே மண்ணைப்போட்டுக்காதே.

(திரை)

காட்சி 11

இடம், நெசவாளி வீடு.

[கயிற்றுக் கட்டிலில் நெசவாளி, முருகன் முழங்காலைக்கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான்...மனைவி, மீனு வருகிறாள்...]

மீனு:— என்னுங்க இப்படி முழங்காலைக் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்க? வீட்டுக்கு வீடு பொங்கல் திருவிழா நடக்குது; நம்ப வீட்ல மாத்திரம் ஒண்ணும் கிடையாதா?...

முருகன்:— ஏழை நெசவாளி வீட்ல ஏது மீனு பொங்கல்? மாடி வீட்டு மாணிக்கம் -கோடி வீட்டு குபேரன் எல்லாரும் கொண்டாடுராங்க பொங்கல்! இருக்கிறவன் வீட்டில் வெண் பொங்கல்-சர்க்கரைப் பொங்கல்-இல்லாதவன் விட்டில் கண்ணீர்ப் பொங்கல்-சோகப் பொங்கல்.

மீனு:— குழந்தை அழுதுகிட்டே தெருவ்லே நிக்கிறான்...அடுத்த வீட்டு ஆனந்தன் கரும்பு திங்கிறான் வாங்கிக் கொடுங்கிறான்...நான் எங்கே போவேன் வாங்கிக் கொடுக்க...?

முரு:—ஐம்ப வீட்டுக் குழந்தைமாத்திரம் இல்ல மீனு!நாட்டிலே பலலட்சம் கைத்தறி நெசவாளி வீட்டு குழந்தைகள் இன்னிக்கு மட்டுமல்ல — என்னிக்கும்— கரும்புகூட அல்ல-கஞ்சி கிடையாதுன்னு கண்ணீர் விட்டுகிட்டு இருக்குதுங்க. எல்லாம் கடவுள் செயல்!

மீனு:— கடவுள் செயல்னு சொல்லிக்கிட்டு இருந்தா போதுமா? நம்ப வீட்ல பொங்கல் நடக்கணும்-வருஷத்திலே ஒரு பண்டிகை-அதுக்கு வழியைப் பாருங்க!

முரு:— நான் என்ன மீனு பண்ணுவேன் ...கைத்தறி நெசவாளிகளின் கண்ணீரைத் துடைக்கிற ஆட்சி இன்னும் வரலியே... புண்ணியவான்கள் கதருக்குக் காட்டுற சலுகையை ... கதறிக்கிட்டு இருக்கிற நெசவாளிகளுக்குக் காட்டக் கூடாதா?



தாலியை வித்துச் சாப்பிட்டாச்சு! வேட்டி சட்டைகளை வித்துச் சாப்பிட்டாச்சு! நீ கட்டியிருக்கிற புடவைதான் மிச்சம்...அதையும் கொடு...

மீனு:— அய்யயோ...புடவையையும் வித்துட்டுப் பொங்கல் கொண்டாடுறதா?...

முரு:— இல்லென்னு சும்மா கிட; தரித்திரம் புடிச்சவளே! மனுஷன் உயிரை ஏன் வாங்குறே?

மீனு:— ஏன் கோபிக்கிறீங்க?...குழந்தை அழுவுருனேன்னு மனசு கேக்கலே; சொன்னேன்...இந்தாங்க; வேற வழி இல்லென்னு...இதோ புடவையைத் தர்ரேன்...இதை வித்து பொங்கல் பானை, அரிசி எல்லாம் வாங்கிட்டு வாங்க... இதோ தர்ரேன்...

(கதவை சாத்திவிட்டு, இடுக்கின் வழியாகக் கட்டியிருந்த ஒரேபுடவையைச் சுருட்டித் தூக்கி எறிகிறாள்...)

முருகன், புடவையுடன், சோகந்ததும்பப் போகிறான்)

காட்சி: 12. இடம்: ரோடு

(நெசவாளி முருகன் தெருவில் புடவை விற்கிறான்)

முருக:. அய்யா... அய்யா...இந்தப் புடவை வேணுங்களா?

ஒருவன்:- ஏனப்பா பழைய புடவையை விக்கிற, பாவம்!

முருக:- வீட்ல பட்னி அய்யா... பொங்கல்கொண்டாடணும் ஏதாவது கொடுங்க இதை எடுத்துக்கிட்டு...

(கையை விரித்து விட்டுப் போகிறார்கள்)

(தசாவதாரம் வருதல்)

முரு:— அய்யா....

தசா:—சே...என்னடா சோம்பேறி!

முரு:— சோம்பேறி இல்லெய்யா சொகுசா வாழ்ந்தது இல்லெய்யா...உழைச்சு உழைச்சு உலுத்துப்போனவன் நான். கஷ்டப்பட்டு துணிநெய்து காலத்தைக் கழித்தேன். உழைக்க கையில்லாம இல்லே. உடலில் சக்தியில்லாமல்இல்லே. ஆனா உழைக்க வழி? நூல் கிடைச்சா போதும்...துணியாக்கிக் கால் காசு சம்பாரிப்பேன்...நூல் எனக்கு இப்போது எங்கே கிடைக்கிறது...அலைந்தேன்—திரிந்தேன்—கேட்டேன்—நான் உழைக்க வழியில்லே. ஏழை நெசவாளி எனக்கு வேறு கதி ஏது? வீட்டில் தறி தூங்குகிறது—பசி தூங்கி விடுமா; என்ன? நான் என்ன செய்வேன்...அய்யா, பொங்கல் திருவிழா—வருஷத்துக்கு ஒரு நாளாவது பசியில்லாம இருக்கிறோம்—இந்தப் புடவையை உங்க வீட்டு வேலைக்காரிக்கு வாங்கி கொடுத்து...ஏதோ இரண்டு ஒண்ணு பணம் கொடுங்க சாமி...

தசா:— ஆகா, எங்க வீட்டு வேலைக்காரி மேல எவ்வளவு அன்புடா உனக்கு?... வேலைக்காரிக்குப் புடவை எடுத்துக் கொடுக்கிறதுதானே எனக்கு வேலை?... போடா போ.....சோம்பேறிப் பசங்க... வீட்ல படுத்திருந்தா சர்க்கார் சோற்றைக் கொண்டாந்து வாயில போடும்னு இருக்கானுங்க...ரஷ்யாவைப் பாரு...எங்க தலைவர் போய்ட்டு வந்து சொன்னாரு...அவனவனும் உழைக்கிறானும்...

முருக:— இங்க உழைக்காமலா இருக்கிறோம்...அடப்பாவிகளா!... சென்னமவுண்ட் ரோட்ல மாடுகளுக்கு பதிலா மூதுகெலும்பு ஒடிய மூட்டை வண்டி இழுக்கிற பாட்டாளிகளைப் போயி... உங்க தலைவரைப் பார்க்க சொல்லுங்கய்யா!...அய்வை அச்சத்தால் போக்கி—ரத்தத்தை வியர்வை குளமாக்கி வயல் வெளியில் வாடுகின்ற விவசாயிகளின் வேதனையைப் போயி, உங்க தலைவரைப் பார்க்கச் சொல்லுங்கய்ய...தார் காய்ச்சிறவன்—தணல்ல நிக்கறவன்—சாக்கடை எடுக்கிறவன்—மலம் அள்றவன்—கட்டிடம்கட்டுறவன்—செருப்புத்தைக்கிறவன் இவனெல்லாம் வீட்டுக்குள்ளே படுத்து கிட்டா...உங்களைச்சோறு கேக்கிறான்?... தெரியாது; நீங்க சோறுபோடுகிற லட்சணம்—அரிசிக்கு கிலோ அரைமைல் நீளம்...

தசா:— டே டே...நிறுத்து ... நிறுத்து... அரிசி கிலோ அரை மைல் நீளம்! உன் வாய் ஒருமைல்நீளம் இருக்கும் போலிருக்கே... புடவையை விக்க வந்துட்டான் புடவையை...புள்ள குட்டியை விக்காம.... டே...இனிமே மைல் கணக்கிலேபேசாதே கிலோமீட்டர் கணக்கிலே பேசு!

முரு:— அடபாவி...என்ன சொன்னே?... புள்ள குட்டியை விக்கறதா?

(எகிறிப் பாய்கிறான்)

தசா:— தொட்டா தெரியுமா?...என்னை சட்டை?...

(கதர்ச் சட்டையைக் காட்டி)

ராணுவமே வரும்...ஜாக்கிரதை!...

(போய்விடுகிறார்)

முரு:— அய்யோ ... மீனு ... எவ்வளவு கொடிய வார்த்தைகளை நான் கேட்குல் படியா ஆயிட்டுது மீனு...

(கைத்தறியாளர் பாடலுடன் தி. மு. கழகத் தோழர்கள் வருதல்)

முரு:— அய்யா...அய்யா...நான் ஒரு...

தி. மு. க:— தெரியும்...எல்லாம் கேட்டுக் கொண்டுதான் வருகிறோம்...

முரு:— இந்தப் புடவையை வித்து...

தி. மு. க:— வேண்டாம்...கொண்டுபோய் தங்கள் துணைவியாரிடம் கொடுங்கள். உம்...முதலில் இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடுங்கள்....

(கண்ணன் தொலைவிலிருந்து பார்த்தல்)

(தி. மு. க. வினர் போய் விடுதல்)

(ஆனந்தக் கண்ணீருடன்)

முரு:— வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம். வாழ்க தி. மு. க.

(வேகமாக—மகிழ்வுடன் போகிறவனைத் தடுத்து...)

கண்ணன்:— அய்யா...தாங்கள்?...

(ஏற இறங்கப் பார்த்து விட்டு)

முரு:— ஏழை நெசவாளி அய்யா...உங்க கட்சி ஆட்சியிலே பெண்ஜாதி புடவையை வித்துப் பொங்கல் கொண்டாடுற அளவுக்கு ஆயிட்டுது!...

கண்:— உங்க வீடு எங்கே இருக்கு?...

முரு:— எல்லா நெசவாளியும் குடியிருக்கிற சாக்கடை ஓரத்திலே தான் என் குடிசையும் இருக்கு...அதையேன் நீ கேக்கிறே பொங்கல்விருந்துசாப்பிட வர்ரியா?...

கண்:— உம்....(வரவில்லை என்று தலையாட்டுகிறான்)

முரு:— நான் வர்ரேன்...

(போகிறான்)

(கண்ணன் வருத்தமுடன் நகர்தல்—எதிரே தசாவதாரம் வருதல்)

தசாவ:— அடடே...கண்ணு ... உன்னைத் தேடித்தான் அலைஞ்சுக்கிட்டிருக்கேன்...

கண்:— ஏன்?

(பணத்தை எடுத்துக் கொடுத்தவாறு)

தசா:— இந்தா...250 ரூபாய் அட்வான்ஸ் இருக்கு...உனக்கு தேவைப்படுறதை கேட்கும் போதெல்லாம் தருவதாக திரவியம்பிள்ளை சொல்லச் சொன்னார்...வர்ர எலக்ஷன்ல நீதான் பிரதம பேச்சாளர்... எல்லாப்பொறுப்பும் உன் கையிலே ஒப்படைக்கிறதா முடிவு பண்ணியாச்சு...நீ



இழிக்கிறகோட்டை தாண்டுறது இல்லே... நீ பாத்து அய்யாவை ஜெயிக்க வைக்க வேண்டியது... இந்தாபிடி...நல்லநேரம்... அமிர்த யோகம்...

(கண்ணன் பணத்தைப் பார்த்தல்)

தசா:— என்னு அப்படிப் பாக்கிறே... அடிச்ச நோட்டான்னு?...'செக்' தரட்டுமா?....

(கண்ணன் தலையசைத்தல்)

தசா:— ம்...வாங்கிக்க...

(கண்ணன் வாங்குதல்)

(கண்ணன் ஏழை நெசவாளியை நினைக்கிறான்)

முருகன் ஒலி:— "ஏழை நெசவாளி அய்யா உங்க கட்சி ஆட்சியிலே பெண்ஜாதி புடவையை வித்துப் பொங்கல் கொண்டாடுகிற அளவுக்கு ஆயிட்டுது!" பெண்ஜாதி புடவையை வித்து பொங்கல் கொண்டாடுகிற அளவுக்கு ஆயிட்டது...பெண் ஜாதி புடவையை வித்துப் பொங்கல் கொண்டாடுற அளவுக்கு ஆயிட்டுது..."

(கண்ணன் ஒரு முடிவுக்கு வருகிறான்)

தசாவ:— கண்ணு!...முதலாளி வீட்டுக்கு போகலாமா?...

கண்:— தசாவதாரம்...காலையில் வருகிறேன்...

தசா:— நிச்சயமா வர்ரியா?...

கண்:— வருகிறேன்.

(போகிறான் வேகமாக)

(தனக்குள்)

தசா:-- அதான; பணத்தை வாங்கிட்டான்...இனிமே மாற மாட்டான்...

(போகிறான்)

(திரை)

காட்சி: 13 இடம்: நெசவாளி வீடு

(முருகன், பானை--கரும்பு முதலியவைகளுடன் வருகிறான்..."மீனு! மீனு!!" என்று மகிழ்வுடன் அழைத்தவாறு)

முரு:-- மீனு...மீனு! புடவையை விற்காமலே...பத்து ரூபாய் கிடைத்துவிட்டது.. பத்து ரூபாய்...ஆதோ...புதுப்பானை... கரும்பு...மஞ்சள்...இஞ்சி...மீனு! மீனு!!.

(தேடிவிட்டுஅண்ணாந்து பார்க்கிறான்)

(மீனு, தூக்கு மாட்டிக் கொண்டு தொங்குகிறாள்...)

முரு:-- ஆ! மீனு! அய்யோ...ஏன் மீனு செத்து விட்டாய்? இந்தப் பாவி உன் புடவையை விற்கவும் துணிந்து விட்டேனே என்று ஆத்திரப்பட்டா...மானத்தை மதிக்கும் மாதரசே! நீ மரணத்தின் வாயில் விழுந்து விட்டாய்? நீ தானே சொன்னாய் மீனு பொங்கல் கொண்டாட வேண்டுமென்று! இப்போது தீராத சோகப்பொங்கல் பொங்கி விட்டாயே...மீனு! மீனு!!...

(தலையில் அடித்துக் கொள்கிறான்...)

(கண்ணன் ஓடிவருதல்...)

கண்:-- அய்யா...இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள்...250 ரூபாய் இருக்கிறது...

முரு:-- 250 ரூபாய்! 250 ரூபாய்!!..அதோ பாரய்யா...நானும் என் மனைவியும் நாங்கள் பெற்ற பிள்ளையும்...பசியால் துடித்த போது கிடைக்காத பணம்... அய்யோ; என் ஆருயிர் மீனு...பிணமாகப் போனபிறகு...அவள் இறுதிச் சடங்கிற்காகக் கிடைத்திருக்கிறது...இறுதிச்சடங்கிற்காகக் கிடைத்திருக்கிறது...மீனு! பணம்! பணம்!...250 ரூபாய்!...ஹா... ஹா...ஹா...ஹா...பணம்...மீனு! மீனு!!...

(பைத்தியமாகிறான்)

கண்:-- அய்யா! அய்யா!!...

முருக:-- வந்தே மாதரம்! ஜே ஹிந்த்!.., நடப்பது நம்ம சர்க்கார்...நம்மசர்க்கார்... கட்டிக்கத் துணியில்லே.....கால் வயத்து கஞ்சியில்லே...நடப்பது நம்ம சர்க்கார்... நம்ம சர்க்கார்...ஹா ஹா ஹா.....

(கரன்சி நோட்டுக்களை இறைக்கிறான்...)

(திரை விழுகிறது)

காட்சி: 14 இடம் திரவியம்பிள்ளை வீடு

(காளி படத்திற்கு நேராக நின்று இரவு நேரத்தில் பூஜை செய்கிறார்...மலர்களை அள்ளிப் போட்டு விட்டு...)


வியம்:- பரமேஸ்வரி! பார்வதி! லோககாளி! பராசக்தி!... மகாகாளி! மகாகாளி!! அம்பிகே!... அருள்புரிவாய்...1967தேர்தலில் நான் வெற்றி பெற்று ஒரு மந்திரியாக வேண்டும் -- மந்திரியாக வேண்டும்... எதிர்க் கட்சிக் காரர்களுக்கு சட்ட சபையிலே ஒரு இடம் கூடவரக் கூடாது... எல்லா இடமும் எங்க கட்சிக்கே வர வேண்டும்...மகேஸ்வரி!... என்னை மந்திரியா ஆக்கும்மா! ... மந்திரியா ஆக்கு!...

(படத்திற்குப் பின் புறமிருந்து)

காளிகுரல்:-- பக்தா!

(ஆச்சரியத்துடன்) திரவி:— தேவி!

காளி குரல்:— உன் எண்ணம் பலிக்காது!



திரவியம்—ஆ:!...

காளிகுரல்:—நீ தோற்றுப் போவாய்! உன்ன மக்கள் தோற்கடித்து விடுவார்கள்!

திரவி:— காளீ!

காளிரல்: — காளி போல் தோற்ற மளித்து கண்ணில் கண்டவர்களை யெல்லாம் சுட்டுக் கொன்றதற்கு — கஞ்சித் தொட்டி வைக்கிற அளவுக்கு நாட்டைப் பஞ்சக் காடாக ஆக்கியதற்கு--மக்கள் பதில் அளிக்கப் போகிறார்கள் ... மக்கள் பதில் அளிக்கப் போகிறார்கள்...

திரவி:— (அழுதவாறு) அய்யய்யோ... என்னம்மாதாயே இவ்வளவுநாள் உன்ன வீட்லவச்சு பூஜை பண்ணினதுக்கு ... இதான பலன்?... இதான பலன்?...

(காளிக்குப் பின் இருந்து, மரகதம் திரவியம் பிள்ளைக்குத் தெரியாமல் வருகிறாள்)

மரக:— (இயற்கையான குரலில்) அப்பா! அப்பா! என்னப்பா நீங்களாகவே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?

திரவி:— போச்சு, எல்லாம் போச்சுமா!.....மந்திரியாகலாம்னு நான் கட்டிய மனக்கோட்டை யெல்லாம் மண் கோட்டையா ஆயிட்டது காளி, வரங்கொடுக்க லேம்மா! வரங்கொடுக்கலே!

மரக— இப்பவாவது தெரிஞ்சுதாப்பா; கடவுள்கள் கூட காங்கிரஸ் பக்கம் இல்லேன்னு! காளிம்மாட போட்டி போட்டுகிட்டு நீங்க ரத்தம் உறிஞ்சினு காளிக்குக் கோபம் வராதா?

திரவி:— எனக்கு எதிர்ப்பு என் வீட்டிலேயே இருக்கு!..... மரகதம்! உனக்குக் கொஞ்சமாவது ஆசையிருக்கா; மந்திரி மகளாகணுமேன்னு?

மரக:— என்னப்பா மந்திரி.... அஞ்சு வருஷம்... அப்புறம் அட்ரசே தெரியாது!...பதவியா பெரிசு?... அப்பா .....மக்களுக்காக என்ன பணியாற்றினோம்; மொழிக்காக என்ன தொண்டு புரிந்தோம்; இந்தக் கணக்கைத்தான் எதிர்காலம்கேட்குமே தவிர; மந்திரியா இருந்தாரா? மகா ராஜாவாக இருந்தாரா... அதைப் பற்றியெல்லாம் யாரும் கவலைப் படுவதே இல்லை.....

திரவி:— எதிர் காலத்தைப் பற்றி இப்ப காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் கவலைப்படுவதில்லை... இருக்கும் வரையில்என்ன? மந்திரியா? பஸ் முதலாளிகளா? ஆலை அரசரா? தொழில் மன்னரா? நிலப் பிரபுவா? இப்படி ஏதாவது ஒரு பட்டம்--பதவி—இது தேவை! இதுதான் எங்கள் லட்சியம்!.. இதைத் தடுக்க இந்தமகா காளியால்கூட முடியாது.....

மரக:— அப்பா!...இனிமேல் காங்கிரசுக்கு இறங்கு முகம்தான்... அதை யாராலும் தடுக்கமுடியாது!..

திரவி:— இல்லை மரகதம்இல்லை!..விலைவாசி ஏறுவதைப் போல் காங்கிரசின் புகழ், மேலும் மேலும் ஏறத்தான்போகிறது. கறுப்புப் பணத்திற்கு எவ்வளவு செல்வாக்கு உயர்கிறதோ; அவ்வளவு செல்வாக்கு காங்கிரசுக்கு உயரத்தான் போகிறது! வரிகளைக் குவித்தது போல் காங்கிரசுக்கு வெற்றிகளைக் குவிக்கத்

தான் பேகிறார்கள் மக்கள்!..... காரணம் என்ன தெரியுமா?...எங்களிடம் தேர்தல் செலவுக்காக லட்சம் லட்சமாகப் பணம் இருக்கிறது...

மரக:-- அப்பா! ... பதினெட்டு வருஷம் நீங்கள் படுத்திய பாட்டுக்கு ... அந்தப் பணத்தை யெல்லாம் மக்கள் அபராத மாகப் பெற்றுக் கொண்டு உங்கள் கட்சியை ஆட்சி பீடத்திலிருந்து விரட்டப் போகிறார்கள் ... அகற்றப் போகிறார்கள்... அடியோடு மாற்றப் போகிறார்கள்.....

திரவி:-- மரகதம்!

மரக:-- உடம்பை அலட்டிக் கொள்ளாமல் ஓய்வெடுத்துக் கொண்டு தூங்குங்கள் அப்பா!

(போகிறாள்)

திரவி:-- (காளியை நோக்கி) மாகாளி... மகாகாளி...மகாகாளி... உன் முடிவை மாத்திக்க தாயே...தூங்குறேன்..-கனவிலாவது வந்து வரத்தை மாத்திக்கொடு தாயே!..... அம்பிகே! உன் முடிவை மாற்ற மாட்டியா?...நாங்க அரசியல் சட்டத்தையே 19 தடவை மாத்தியிருக்கோமே...நீ ஒரு தடவை உன் முடிவை மாத்திக்கேயேன்...

(தூங்கப் போகிறார்)

[கனவு ஆரம்பம்]

(திரை)

காட்சி 15

இடம்: எமன் தர்பார்

(தாரை தப்பட்டைகள் முழங்க எமதர்மன் சிம்மாசனத்தில் அமர்கிறான் அப்போது நடனமாது நடனமாடுகிறாள். பிரதிநிதிகள் எல்லோரும் கைதட்டுகின்றனர்.)

சித்திராபுத்திரன்:—கொலு மண்டபத்து நித்திய நிகழ்ச்சி துவங்கலாம் மகாராஜா.

[எமன் தூங்குகிறான்]

பிரபு! பிரபு! (என்று எழுப்புகிறான்)

எம:-- (விழித்து.) என்ன?

சி.பு:-- பிரபு! விசாரணை!

எம:-- ஓகோ! இது வரை மன்றத்துப் பிரதிநிதிகளின்பேச்சுக்களைக்கேட்டேன். சுடுகாட்டில் இருக்க வேண்டிய நீங்கள் இந்த சபைக்கு வந்து ஏன் என் உயிரை வாங்குகிறீர்கள்?

ஒரு பிரதிநிதி:--ஒழுங்குப் பிரச்சினை! சபாநாயகர் அவர்களே! உயிர் வாங்கும் வேலை மன்னருக்குத்தான் உரியதே தவிர எங்களுக்கல்ல!

சி.பு:— சபாநாயகர் இன்று சபைக்குத் தாமதமாகத்தான் வருவார். ஆகையால் ஒழுங்குப் பிரச்சினையைக் கைவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்!

எம:-- உங்களைச் சொல்லிக் குற்றம் இல்லை! நீங்கள் எல்லோரும் குடியேறிய வர்கள் என்பதை மறந்துவிட்டுஇந்தநாட்டிலே உள்ள பேய்களும் பிசாசுகளும் உங்களுக்குப் பொதுத் தேர்தலிலே ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்களே அவர்களைச் சொல்ல வேண்டும்! போகட்டும்! சித்திர புத்திரரே! அந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சபையின் முன்னே படித்துத் தொலையும்!

சி.பு:— படித்துத் தொலைக்கிறேன் மன்னவா!

ஒரு பிரதிநிதி:— (நடுக்கத்தோடு.)

தர்மப் பிரபோ! நிதிநிலை அறிக்கையின் பிரதிகள் எங்களுக்குத் தரப்பட்டிருக்கிற காரணத்தால் நாங்களே படித்துத் தெரிந்து கொள்ளுகிறோம். சித்திராபுத்திரரை படிக்கச் சொல்லி நேரத்தை வீணுக்க வேண்டாமென்பது எங்கள் தாழ்மையான விண்ணப்பம்.

எம:-- சரி! உருப்படியான யோசனை! ஏற்றுக் கொண்டேன்! நிதிநிலை அறிக்கையின் முக்கிய குறிப்புகளை மட்டும் உங்களிடம் சுருக்கமாக சொல்லுகிறேன். சென்ற ஆண்டு நமது, நாட்டில் உயிர் ஏற்றுமதி சற்றுத் தாராளமாகஇருந்தது. இந்த ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்திலும் குடும்பக் கட்டுப்பாடு அமுலாக்கப் பட்டு விட்டதால் இங்கு தேங்கிக் கிடக்கும் உயிர்களை அதிகளவு ஏற்றுமதி செய்ய இயலவில்லை. அதனால் அரசினர்க்குச் சொல்ல முடியாத நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நஷ்டத்தை ஈடு செய்ய வழிகாண வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?

ஒரு குரல்:-- வரி போடலாம்!

எம:-- யாரது? வரி போடுவதா! இதுவரை அப்படி ஒரு வார்த்தையை இந்த சபை கேட்டதே கிடையாதே. வரி! வரி! வரி! புதுமையான வார்த்தை! அந்த வார்த்தை



இருக்கிறாய்! ஒரு வேளை நீ கள்ளத்தோணியில் தான் வந்திருக்க வேண்டும்! உன்னை சும்மா விடப்போவதில்லை! வரியென்ற வார்த்தையைப் பற்றி விவாதிப்போம். அதன் பிறகு உனக்குரிய தண்டனை வழங்கப்படும்!

திர:-- தண்டனையா?

எம்:-- காவலர்களே! அந்த உயிர்ப் பிராணியைக்கைது செய்து நம் உல்லாச மண்டபத்தில் பாதுகாப்பில் வையுங்கள்!

திர:-- உல்லாசமண்டபமா? அப்படியானால் உதகை மண்டலமா?

எம:-- அதே போலத்தான்! உங்கள் உதகை மண்டலத்தில் பனிக்காற்று வீசும்! இங்கே நறுமணமிக்க பிணக் காற்று வீசும்! அனுபவித்துப் பாரும். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் தெரியும்! ஏய், அழைத்துப்போ! நானே அவனைச் சந்திக்கிறேன்!

(தூதுவர்கள் திரவியம் பிள்ளையை அழைத்துப் போகிறார்கள்.)

(திரை)

காட்சி 16

இடம்: உல்லாச மண்டபம்

(உல்லாச மண்டபத்தில் எங்கு பார்த்தாலும் சிறு குழந்தைகளின் தலைகள் கும்பலாகக் கிடக்கின்றன.)

திர:-- உல்லாச மண்டபமென்றானே! இதற்குப் பெயர்தானா?

(தலைகளைப் பார்த்து)

திர:-- ஐயோ! இதென்ன குழந்தைகளின் தலை! இதுவா உல்லாச மாளிகை?

(தளபதி வருகை)

தள:-- ஆமாம்! இதுதான் உல்லாச மாளிகை! கொட்டிக்கிடக்கும் குழந்தைகளின் தலைகளை என்ன வென்று நினைத்தாய்! இவைதான் எங்கள் நாட்டு உருளைக் கிழங்கு! எங்கள் உல்லாச மாளிகையைச் சுற்றி விளையும் பொருள் இதுதான்!

யைச் சொன்னவர் யார்? எழுந்து நில்லுங்கள், பார்க்கலாம்!

(ஒரு உருவம் கதர் ஆடையும், குல்லாவும் அணிந்து எழுந்து நிற்கிறது.)

எம:-- நீ யார்? இந்த சபைக்கு எப்படி வந்தாய்?

திரவியம்:--என் பெயர் திரவியம் பிள்ளை! மேலே பார்வையாளனாக வந்து உட்கார்ந்து இருந்தேன், நீங்கள் நாட்டுப் பொருளாதாரம் செழிக்க வழி கேட்டதும் உணர்ச்சி வசப்பட்டுக் கீழே குதித்து விட்டேன். மன்னிக்கவும்!

எம:-- சபையின் கௌரவத்தையே குலைத்திருக்கிறாய். அது மட்டுமல்ல. என் உத்திரவு இல்லாமல் எங்கள் நாட்டு அனுமதிச் சீட்டுப் பெறாமல் என் ராஜ்யத்திற்குள் அத்து மீறிப் பிரவேசித்து

திர:-- ஐயோ! ஆமாம், நீங்கள் யார்?

தள:-- என் பெயர் ஸ்ரீமயானம். எமலோக ராணுவத் தளபதி. என்னிஷ்டப் படி தான் நிகழ்ச்சி நிரல்கள் வகுக்கப் படும். அப்படி வகுக்கப் பட்ட நிகழ்ச்சியை ஒட்டித்தான் எமதர்ம ராஜனுக்கு முன் உங்களைப் பேட்டிகாண வந்திருக்கி றேன்.

திர:-- அப்படியா? என்னய்யா இது? குழந்தைகளின் தலைகளைக் கொட்டி விட்டு அந்த விடத்தை உல்லாச மண்டப மென்கிறீர்களே!

தள:-- எங்கள் நாட்டு உல்லாச மண்ட பத்துக்கு உள்ளே இப்படிக் குழந்தைக ளின் தலைகள் கொட்டப் பட்டிருக்கும். ஆனால் உங்கள் நாட்டில் உல்லாச மண் டபத்துக்கு வெளியே குழந்தைகளின் தலைகளைப் பொறுக்கலாம். இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் இல்லையே!

திர:-- அபத்தம்! அபாண்டம்! யார் சொன்னது அப்படி? பொய்! பொய்! எல்லாம் பொய்!

தள:-- இதுவரை குடியேறிய எல்லோரும் ஒத்துக் கொண்ட உண்மையை நீர் மறுக்கிறீர். இதோ பொறுக்கிக் குவிக்கப் பட்ட அத்தனை தலைகளும் உங்கள் நாட் டிலே இருந்து கொண்டு வரப்பட்டவை தான். இவைகளில் பல, கல்யாணமாகாத பெண்களின் கருவிலே உதித்தவை. பல விதவைகளின் வயிற்றிலே விளைந்தவை. ஆயிரக்கணக்கானவை ஆற்றிலும், குளத் திலும் மிதந்தவை. ஏராளமான தலைகள் வறுமை வயலில் பொறுக்கப்பட்டவை. சில குழந்தைகளின் நெற்றியில் அவமா னச் சின்னம் குத்தப்பட்டிருக்கும். சில வற்றின் கழுத்தில் தாயின் கட்டைவிரல் ரேகைகள் அழுத்தமாகப் பதிந்து இருக் கும். அந்த ரேகைகளை ஆராய்ச்சி செய்த தில் ஈவு இரக்கமுள்ள பெண்களின் ரேகைதான் அவையென்றும் எங்கள் ஆஸ்தான ரேகை நிபுணர்கள் முடிவுகூறி யிருக்கிறார்கள். சில குழந்தைகளின் கரு விழிகள் வட்ட வடிவமான அசோகச் சக்கரங்கள் போலவே அமைந்திருப்பதை யும் கண்டோம்; அது பற்றிய ஆராய்ச் சியை எமது விஞ்ஞான மேதை ஒருவரி டம் ஒப்படைத்திருக்கிறோம். இன்னும் முடிவு வெளிவர வில்லை. இப்பொழுது என்ன சொல்லுகிறீர்?

திர:— சொல்லுவதற்கு என்ன இருக் கிறது?

(என்று தலைகுனிகிறார். அப்போது தூதுவர் ஒரு கிண்ணம் கொண்டு வருதல்.)

தள:— ஹும்! குருதி பானம் அருந்தும்!

திர:— ஐயோ! என்ன இது?

தள:— பொங்கி வழியும் இரத்தம்;

திர:— இரத்த பானமா? வேண்டாம்! வேண்டாம்!

தள:—எமலோகத்தில் நடைபெறும் உபச் சாரத்தைச் சரிவர ஏற்றுக் கொள்ளா தவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?

திர:— என்ன தண்டனை?

தன;— பூலோகத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாகப் பிறக்க வேண்டும்!

திர:— ஐய்யோ! வேண்டாம்! வேண்டாம்! உபச்சாரத்தை மறுக்காமல் ஏற்றுக் கொள்கிறேன். கொடுங்கள் கிண்ணங்களை!

(திரவியம்பிள்ளை மது அருந்த மயக்கம் ஏற் படுகிறது)

தள:— ஆகாஷ்வாணி!

(அவலட்சணமான ஒரு பெண் வருகிறாள்)

ஆகா:— உஸ்ஸ்ஸ்!

தன:— (திரவியம்பிள்ளையிடம்) இவள் தான் எமலோகத்தின் இசைக் குயில்! ஆகாஷ்வாணி! இவரைக் கவனித்துக் கொள்!

ஆகா:— அச்சா!

(திரவியம்பிள்ளை ஆகாஷ்வாணியைப் பார்க் கிறார். பிள்ளைக்கும் வாணிக்கும் காதல் பிறக்கிறது. இருவரும் ஆடிப்பாடுகிறார்கள்)

திர:— ஆகா! அழகுப் பதுமையே! ஆர ணங்கே! தேடக் கிடைக்காத திரவியமே! தேன் மொழியே! தித்திக்கும் கனியே! தெள்ளமுதே!

(ஆகாஷ்வாணியைக் கட்டிப் பிடித்தல்)

தள:— ஐயோ! (அருவெறுப்புடன் போகி றான்.)

(அப்போது எமன் வருகிறார்.)

எம:— என்ன திரவியம்பிள்ளை! உபசரிப்பு களெல்லாம் சரிவர நடந்ததல்லவா!

திர:— ஆகா! நன்றாக நடந்தது. உபசரிப் பின் உச்சக்கட்டமே ஆகாஷ்வாணியின் பிரவேசம்தான்! ஆகா! வர்ணிக்கவே முடியாது!

எம:— உம்மோடு நீண்ட நேரம்பேட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தும் நிறைவேற்ற இய



லாது போய்விட்டது. குறுகிய காலத்திலேயே நமது பேட்டி முடியும்.

எம:— நீ (தளபதியைப் பார்த்து) உடனே சென்று இன்று நமதுசபை கூடுவதற்கு வசதியில்லை; ஏனெனில் வரியைப் பற்றி விளக்கம் தெரியாமல் சபை கூடிப் பயனில்லை. ஆகவே நாளைக்காலையில் சபை கூடுமென்று அறிவித்துவிடு!

(தளபதி போகிறான்)

எம:— நமது பேட்டியை ஆரம்பிக்கலாமா?

திர:— ஆரம்பிக்கலாம்!

எம:— எப்படி உமக்குத் திரவியம் பிள்ளை என்று பேர் வந்தது?

திர:— பணம் நிறைய இருக்கிறது அதனால்—

எம:— இம்! உங்கள் நாட்டில் கீரிப் பிள்ளை என்பது யார்?

திர:— அது ஒரு பிராணி! பாம்புக்கு விரோதி!

எம:— நீரும் பிள்ளைதானே? நீர் யாருக்கு விரோதி?

திர:— (சிரிப்பு) ஹி! ஹி! ஹி!

எம:— தென்னம்பிள்ளை என்பது உங்கள் ராஜ்ஜியத்தில் உண்டல்லவா?

திர:— ஆமாம்; அதுதான் பூலோகத்தில் கற்பக விருட்சம்!

எம:— என்ன! ஒரு பிள்ளை-பிராணி! ஒரு பிள்ளை-மரம்! போகட்டும், அணில் பிள்ளை என்பது யார்?

திர:— அதுவா! அதுதான் ராமருக்காகப் பாலம் கட்டிய ஜந்து!

எம;— ஓ! உங்கள் நாட்டில் அணில்கூடப் பாலம் கட்டுமா? அரசாங்கம் கட்டாதோ?

திர:— ஹி! ஹி! ஹி!

எம:— இருக்கட்டும்! கிளிப்பிள்ளை என்றால் என்ன?

திர:— அதுவா? அது சொன்னதையே சொல்லும் ஒருபறவை.

எம:— என்ன சொல்லும்! ஆகட்டும் பார்க்கலாம் ஆகட்டும் பார்க்கலாமென்றுதானே!

திர:— ஹி! ஹி! ஹி!

எம:— தேசியம்பிள்ளை என்கிறீரே; நீர் இந்த நான்கு பிள்ளைகளைவிட எந்தவிதத்தில் உயர்ந்தவர்.

திர:—நான் உயர்திணை. அதுகள் அஃறிணைப் பிராணிகள். வெறும் உயிர்கள். பகுத்தறிவு இல்லாத ஜந்துகள்.

எம:— பகுத்தறிவு என்றால் என்ன?

திர:— சிக்கலான கேள்வி! பூலோகத்தில் அந்தக் கழகத்துக்காரர்கள் என்னைப்பார்த்துக்கேட்ட கேள்வியைத் காங்களும் கேட்கிறீர்கள். இங்கும் விடவில்லையே எனக்கு இந்தச் சங்கடம்!

எம:— வரியைப்பற்றிய விளக்கத்தை சொல்லும்!

திர:— வரி என்றால் எங்கள் ராஜ்ஜியத்தில் காங்கிரஸ் என்று அர்த்தம்!

எம:— காங்கிரஸ் என்றால்?

திர:— தியாகம் என்று அர்த்தம்.

எம:— தியாகம் என்றால்?

திர;—பதவி!பர்மிட்! லஞ்சென்சு! இப்படிப் பல அர்த்தங்கள்.

எம:— வரி என்பது கருப்பு நிறமா; சிவப்பு நிறமா? அதன் உண்மை நிறமென்ன?

திர:— வரிக்கு ஒரு நிறமா, இரு நிறமா?

அது பஞ்ச வர்ணம் கொண்டதல்லவா?

எம:— பஞ்சமென்றால் தரித்திரமென்பார்களே?

திர:-- ஆமாம் அதே நிறந்தான் வரியின் நிறமும்!

எம:-- சரி! வரியினால் என்ன நன்மை?

திர:— மக்கள் பெருக்கம் குறையும். ஜன நெருக்கம் குறைந்து கலகலப்பாக இருக்கும்.

எம;— அப்படிப்பட்ட வரியை எமலோகத்திலும் அமுலுக்குக் கொண்டு வந்தால்!

திர:— இங்கும் நெருக்கடி குறைய வழி ஏற்படும்!

எம;— உங்கள் ராஜ்யத்தில் வரிபோடுவதில் வல்லவர்கள் யார்?

திர:— நானேதான்! நான்தான் இங்கு வந்து விட்டேனே!

எம:— குறிப்பாக எந்தெந்தப் பொருள்கள் மீது வரி போடலாம்!

திர:— அழுகும் பொருள்மீது வரி போடுவது சாலச் சிறந்தது!

எம;-- எங்கள் நாட்டில்அழுகும் பொருள்கள் என்ன!

(யோசித்து)

பிணங்கள்! பிணங்கள்! வரி போடலாம்!

திர:— உங்கள் நாட்டு அழுகும் பொருள்களான பிணங்களுக்கு வரி போடுகிறேன் என்கிறீர்களே, அதனால் எதிர்ப்பு ஒன்றும் ஏற்படாதே?

எம:— எதிர்ப்பா? வரி போட்டால் எதிர்ப்புக் கூட ஏற்படுமா?எமதர்மன் ஆட்சியில் எதிர்ப்புகளுக்கு என்ன தண்டனை தெரியுமா?

திர:— என்ன தண்டனை?

எம:— உடனடியாக அவர்கள் வெளியேற்றப் படுவார்கள். அதோடு முடியாது தண்டனை. பூலோகத்தில் மீண்டும் பிறந்தாக வேண்டும். அதுமட்டுமல்ல; அவர்கள் தேர்தலில் அபேட்சகர்களாக நின்று பணம் கொடுத்து ஓட்டு வாங்கித் தங்கள் கௌரவத்தைக்காப்பாற்றிக் கொண்டாக வேண்டும்! அது போகட்டும். பிணவரிக்குப்பிறகு எந்த வரி போடலாம்? அந்த யோசனையைச் சொல்லும்.

திர:— எங்கள் தேசத்தில் போடாமல் இருக்கிற வரிகளை மட்டுமே விரல்விட்டுச் சொல்ல முடியும். போட்டிருக்கிற வரிகளின் பட்டியலை ஞாபகப் படுத்திக் கூறுவது சிரமம்.

எம;— அப்படி வரி போடாத பொருள் என்னென்ன?

திர:— அத்திப்பூ--குதிரைக் கொம்பு--சேவல் முட்டை--இத்யாதிப் பொருள்களுக்கு எங்கள் நாட்டில் வரிவிலக்கு செய்யப் பட்டிருக்கிறது.

எம:— சபாஷ்! அவைகளுக்கும் சேர்த்து நான் வரி போட்டுவிடுகிறேன்! ஒன்று கேட்க மறந்து விட்டேன். உங்கள் ராஜ்யத்தில் ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெரிய மந்திரவாதி இருக்கிறாரே அவர் மிகவும் கெட்டிக்காரரா? அவரை இங்கு அழைத்து வரலாமென்று பொதுவாகவே ஒருஅபிப்பிராயம் உலவுகிறது. அழைத்து வரத் தகுதியுடையவர்தானா?

திர:— அவர்இன்னும் இங்கு வரவில்லையா? எனக்கு முன்பே இங்கு வந்து விட்டாரென்று கேள்விப்பட்டேன்.

எம:— இல்லை...இல்லை! உம்மைக் கேட்டுக் கொண்டுதான் வரலாமென்ற எண்ணம்.

தே:— பெரிய மந்திரவாதிதான். பெயரைக் கேட்கத்தான் பயமாக இருக்குமே தவிர ஆளைப் பார்த்தோமானால் தேவாங்கு மாதிரி இளைத்துப் போயிருப்பார். அவருக்கு யானைப்பசி வேறு! ஆயிரக்கணக்கில் நூற்றுக் கணக்கில் சாப்பிடுவதில்லை! எல்லாம் கோடிக்கணக்கில்தான் வயிற்றில் போட்டு அடைப்பார்! அவர் எங்கள் ராஜ்யத்தில் ஆஸ்தான மந்திரவாதியாக இருப்பதால் ஊழல் என்ற தொத்து வியாதி பரவுகிறதே; தவிர பயனென்றும் கிடையாது. தயவுசெய்து அவரை இங்கு அழைத்துக் கொள்ளுமாறு நான் பலத்த சிபாரிசு செய்கிறேன்.

எம:— இன்றைக்கு நமது பேட்டி இத்தோடு இனிது முடியட்டும்! ஏதாவது தேவையிருந்தால் தெரிவிக்கலாம்!

திர:— தேவை ஒன்றும் பிரமாதம் இல்லை! என்னை இந்த உல்லாச மண்டபத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அடுத்த படியாக நான் மகாத்மா காந்தியைச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் தர வேண்டும்!

எம:— அவசியம் காந்தியைப் பார்த்தாக வேண்டுமா? அவர் சொர்க்க மெனும் பாதாளச் சிறையில் அல்லவா இடக்கிறார்.

அந்த முதல் வகுப்புக்கைதியை நரக லோகத்து மூன்றுவது வகுப்புக் கைதியாகிய நீர் சந்திப்பது இயலாத காரியமாயிற்றே!

திர:— எப்படியோ கிருபை வேண்டும்! காந்தி மகானை நான் அங்கு கூடப்பார்த்ததில்லை. அந்த மகானை நான் பார்த்தால் தான் ஆவல் தீரும்!

எம:— சரி ஏற்பாடு செய்கிறேன்! புறப்படும்.

திர:— மாலை வேண்டுமே?

எம:— மாலை தானே, வாங்கிக்கொள்ளலாம்.

(இருவரும் போதல்.)

திரை

காட்சி 17

இடம்:— சொர்க்கம்

(திரவியம் பிள்ளை மகாத்மா காந்திக்கு மாலை போடுதல்.)

கா:— நிறுத்து! நிறுத்து! போடாதே மாலையை! (தடுக்கிறார்)

திர:— ஏன் ஐயனே தடுக்கிறீர்கள்?

கா:— காங்கிரசைக் கலைத்துவிட்டு வந்து எனக்கு மாலை போடுங்கள் என்று அப்போதே சொன்னேன்: அதைச் செய்யாமல் மாலை மட்டும் போட்டு என்னை மயக்கப்பார்க்கிறாயா? மாலையா இது? நன்றாகப் பாருங்கள். எலும்புத்தூள்களைப் பொறுக்கி அரும்பு மாலையென எனக்குப் போட வந்து விட்டீர்களா? நிரபராதிகளின் இரத்தத்திலே தோய்ந்த வெள்ளை மலர்களை எடுத்து ரோஜா மலரெனத் தொடுத்துஎன் கழுத்திலே தொங்க விடப் புறப்பட்டீர்களா? இதோ என்னை ராஜ உடை ராஜ போகங்களோடு வாழ வைத்து என் மன நிம்மதியைக் குலைத்து என்னை இந்தச் சிறைச் சாலையில் சித்திரவதைசெய்து கொண்டிருக்கிறானே எமன். இந்த எமனை விடக் கொடியவர்கள் நீங்கள். என் முன்னே நில்லாதீர்கள். போய்விடுங்கள்!

திர:— அப்படி என்ன அபச்சாரம் செய்தோம் தங்களுக்கு?

கா:— என்னை இங்கு அனுப்பி வைப்பதற்கு நீங்களெல்லாம் பட்டபாடு கொஞ்சமா? உங்களோடு இருந்தால் நீங்கள் செய்கின்ற அக்ரமங்களையெல்லாம் தட்டிக்கேட்கிறேன்: தடுத்து நிறுத்தப்பார்க்கிறேன் என்ற வெறுப்பில் என்னைப் பாதுகாப்பதற்குக் கூட அக்கறை எடுத்துக்கொள்ள நாதியில்லை வெள்ளைக்காரன் வைத்துவிட்டுப்போன பலமான இராணுவம் இருந்தது. அதுவும் போதாதென்று படை பலத்தைக் கோடி கோடியாகச் செலவிட்டுப்பெருக்கினீர்கள் எத்தனை இருந்தென்ன? பொட்டென்று முடித்து விட்டான் காரியத்தை! இங்கே சொர்க்கத்திலே சொல்லொணா வேதனையில் உழன்று கொண்டிருக்கிறேன். என்னைத் துரத்தினீர்களே பாவிகளே! என் ஆசைக்கும் அன்புக்கும் உரிய உடைமைகளைக்கூடக் கொள்ளைக்காரர்களிடம் ஒப்படைத்து விட்டீர்களாம்! நான் வாழ்ந்த குடிசையை எழில் மிகுந்த இருட்டு மண்டபமாகமாற்றிக்கட்டி அந்த மண்டபத்துக்குள்ளே வெள்ளை வால்களைத் தோரணமாகத் தொங்கவிட்டிருக்கிறீர்களாம்! பணக்காரப் பச்சோந்திகளைத் தாழ்வார மெங்கும் விளையாட விட்டிருக்கிறீர்களாம்! வான் கோழிகளை மண்டபத்து முற்றத்திலே ஆடவிட்டுக் கொள்கையற்ற கோட்டான்களின் இசை முழங்கச் செய்திருக்கிறீர்களாம். கொம்பு மாடுகளைக் கொழுப்பறு மட்டும் வளர்த்து ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு மண்படத்தைப் போர்க்கள மாக்கியிருக்கிறீர்களாம்!

திர:— ஐயனே!

கா:— அடப்பாவிகளே! நான் நவகாளிப் பயணத்தின் போது ஊன்றிக் கொண்டு நடந்த அருமை மிகு கைத்தடி மோஸஸ் கதையிலே, வருவதைப் போல் பாம்பாக மாறிப் பாட்டாளி மக்களைக் கடித்துக் கொல்கிறதாம்! என் இடுப்பிலே இருந்து எடுப்பாகத் தொடங்கிக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறு கெடிகாரம் உங்களால் பத்திர படுத்தப் பட்டிருக்கும் என்று எதிர் பார்த்தேன். அந்தக் கெடிகாரத்தை கள்ள மார்க்கெட் காரர்களுக்கு உரிமையாக்கி நேரம் பார்த்துக் கொள்ளையடிக்கச் சொல்லி வ்ட்டீர்களாம். என் காலணி பட்டு சின்னஞ்சிறு ஜீவன் கூடச் செத்து விடக் கூடாதென்று நான் ஏங்குவேன். இப்போது அந்தக் காலணியை நீங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஆள் மாட்டிக் கொண்டு ஆயிரக் கணக்கான மக்களை அடக்கி—மிதித்து — துவைத்து—சேருக்குகிறீர்களாம்!

(திரவியம் பிள்ளை மௌனம்)

கா:— எல்லாமே தொலையட்டும். என் மூச்சுப்போன்றதும் என் இருதயம் போன்றதுமான என் அன்புக் குழந்தையாம் "ஹரிஜன நலம்" என்ற செல்வத்தையாவது ஒழுங்காகப்பாதுகாத்திருக்கிறீர்களா? என் இன்பக் குழந்தை, சவலைப் பிள்ளை போல் அல்லவா காட்சி தருகிறது? சளி ஒழுகும் மூக்கு! பருக்கை உதிரும் வாய்! தள்ளிய வயிறு: கும்பிப்போன கை, கால்கள் எழுபது வயதுக்கிழங்கள் வ்டுவது போன்ற இழுப்பு மூச்சு; இவ்வண்ணம் தள்ளாடித் தள்ளாடித் தடுமாறும் நிலையில் அல்லவா நான் பெற்ற மாணிக்கத்தை நடுத் தெருவில் சாக்கடையோரத்தில் புழுதி மேட்டில் நிர்க்கதியாக விட்டு விட்டீர்கள். இந்த லட்சணத்தில் உன் அழுக்கேறிய கைகளால் எனக்கு மாலை வேறு போட வந்து விட்டாய்? போ! போ! என் முன் நில்லாதே!

(திரவியம் பிள்ளை கீழே விழுதல்)

[திரை]

காட்சி 18

இடம்: திரவியம் பிள்ளை வீடு...

(திரவியம் பிள்ளை படுக்கையிலிருந்து அலறி அடித்துக் கொண்டு விழுகிறார்...)

திரவி:— ஆ!...ஹா!...ஹா!...மகாத்மா!... மகாத்மா!...

(வீறிட்டு அலறும் ஒலி கட்டுத்...தசாவதாரம் வாங்கிச்சுருட்டிக் கொண்டு தூக்கத்தில் ஓடிவருதல்...)

தசா:— எஜமான்...எஜமான் என்னங்க...

திரவி:— எமலோகம் ... ரத்தபானம் .... ஆகாசவாணி ... மகாத்மா காந்தி ... மகாத்மா காந்தி...எல்லாரையும் பாத்தேன்...

தசா:— கனவு கண்டீங்களா?...

திரவி:— தசாவதாரம்! பயங்கரமான கனவு...பயங்கரமான கனவு.

தசா:— அய்யா!...கனவிலயாவது நீங்க மந்திரி ஆகிற மாதிரி கண்டீங்களா?

திரவி:— கனவிலே கூடக் காணலியே... முழிச்சிகிட்டு இருந்தா காளிகாதேவி விரட்டுரா!...தூங்கிலு காந்தி மகாத்மா விரட்டுராரு!...தசாவதாரம்...ஒரே குழப்பமா இருக்கு...இந்தக் குழப்பத்துக் கெல்லாம் காரணம்...

தசா;— எனக்குத் தெரியுங்க காரணம்!... அந்தக் கண்ணன் உங்க கைக்கு அகப்பட மாட்டேங்கிறானேன்னு கவலைப் பட்டுக்...கவலைப்பட்டு ஏதேதோ பயங்கரக் கனவெல்லாம்காணுறீங்க...

திரவி:— உண்மை! ... நீ சொல்வது உண்மை!...அத்தக் கண்ணன் என் பக்கம் வந்தா தான் எனக்கு மனம் நிம்மதியா இருக்கும்.

தசா:— பயப்படாதிங்க... பணத்தைக்கண்டதும் பயல் மயங்கிட்டான்...250ஆ... லேசா?...

திரவி:— என்னது ... 250ஆ! ... 500ல்ல கொடுத்தேன்...

தசா:— (தயங்கி...பிறகு) அவுங்க அம்மாகிட்ட பாதி கொடுத்திட்டேன்...

திர:— ஓகோ...

தசா:— பொழுது விடிஞ்சதும் விடியாத துமா இங்க வர்ரேன்னு சொல்லியிருக்கான்...

திரவி:— யோவ்!... அவன் வருவான்னு எதிர்பார்த்துக்கிட்டு இருக்காதேடே...பாயி கையோட அழைச்சிக்கிட்டு வந்துடும்!...

தசா:— சரி...நீங்க தூங்குங்க...

திரவி:— தூங்குவதா?...இப்பத்தான் எமலோகம் போனேன்...அடுத்தது எங்கயோ?...

தசா:— சட்ட சபை! மந்திரி நாற்காலி! எதிர்க் கட்சிக் காரன் கேள்வி! காரசார மான பதில்...தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்...காங்கிரஸ் தரப்பில் கரகோஷம் ... ஆரவாரம்...வரவேற்பு... ஊர்வலம் மாலை ... மரியாதை...பூரண கும்பம்...

திரவி:— (ரசித்தவாறு) ஆகா!...

அவர் கண்களைத் தன்கைகளால் மூடி)

தசா:— முழிக்காதிங்க...அப்படியே தூங்கி கிட்டே இருங்க... முழிச்சா அவ்வளவு தான்...போனவராது...

திர:— தசாவதாரம், எங்கே இன்னொரு தடவை சொல்லுமப்பா, கேட்டுக்கிட்டே தூங்குறேன்.

தசா:— அப்படியா? சரி! கண்ணைத் தெறக் காதிங்க! தெறந்தா போயிடும்.

பூமாலை.

ஊர்வலம்.

மந்திரிப் பதவி.

(திரும்பத் திரும்ப இசையோடு சொல்லு கிறார்)

இப்படி ஒரு தாலாட்டா?

புகழ்ச்சித் தாலாட்டு!

(போகிறார்)

[திரை]

காட்சி 19

இடம்: ரோடு

(தசாவதாரம் தனக்குள் பேசிக் கொண்டே வருகிறான்:)

தசாவ:— எமனுவது ஒண்ணுவது ... கன விலை வருவதாவது...சுத்த பயந்தாங் கொள்ளி மனுஷன்...உச்சி மீது வான் இடிந்து விழுகின்ற போதிலும் அச்ச மில்லை-அச்சமில்லை-அச்சம் என்பதில் லையே...

(திடீரென எதிரே எமன் நிற்கிறான்...அசை வின்றி)

தசா:— ஹா! ஹே!...எமன் ... எமன்... எமன்...

(கண்களை மூடிக் கொண்டு கீழே உட்காரு தல்...இந்நேரத்தில் எமன் மறைந்து— ஒரு முரடான தொழிலாளி மீசையை முறுக்கிக் கொண்டு...நிற்கிறான்)

[அவனை உற்றுப் பார்த்து விட்டு — பெரு மூச் செறிந்தவாறு]

தொழி:—நான் ஒரு ஓட்டர்...என்கையிலே ஓருவாக்குச் சீட்டு இருக்கு...



தசா:— நீ...நீ...எமன் ... எமன் தானே

தசா:— ஓட்டர்!...ஓட்டர்!! அப்பா, நீ எமன் இல்லியா?...

தொழி:— வுந்ர எலக்ஷனிலே நான் தானே உங்களுக்கு எமன்....வர்ரேன்..

(போகிறான்)

தசா:— (அவனையே பார்த்தவாறு நின்றி ருந்து) எமன்!... ஹே கண்ணு! நீ எங்க டாப்பா இருக்கே? ஆபத்பாந்தவா! அனுத ரட்சகா!...

(திரை)

காட்சி 20 இடம்: காவேரி வீடு.

(கண்ணன் தலை குனிந்தவாறு உட்கார்ந்திருக்கிறான் காவேரியம்மா பேசிக் கொண்டிருக்கிறார்.)

காவேரி:— கண்ணு! நான் சொல்வதைக் கேள்! கரையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்தது போல் ஆகி விட்டது இன்றையக் காங்கிரஸ்...இனியும் நீ அங்கிருப்பது அழகல்ல...



யோசித்துப் பார்...தீப்பிடித்த வீட்டுக் குள்ளே இருப்பவன்...வெளியே ஓடி வந்து தீயை அணைக்க வேண்டுமே தவிர.. உள்ளேயேயிருந்து நெருப்புடன் விளையாடுவதா?...

கண்:— அம்மா! தீப்பிடித்த வீடு...கருநாகம் புகுந்த புற்று...இன்றைய காங்கிரஸ்...! அதை மறுக்க வில்லை நான்... மரணப் படுக்கையிலே கிடக்கிறாள் தாய் என்பதற்காகப் பெற்ற தாயைப் பிரிந்து ஓடிவிடும் மகனும் இருப்பானா?...

காவே:— உன் உதாரணத்தையே கொஞ்சம் விரிவாக்கு...தாயின் பிணம்என்பதற்காக வீட்டிலேயே வைத்துக் கொண்டு அழுகிப் போக விடுவார்களா?...காலாகாலத்தில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பது தானே மகனின் கடமை என்பார்கள்...கண்ணு! அந்தக் கடமையைச் செய்!...

கண்:— அம்மா!

காவே:— உன் தந்தையைப் பிணமாக்கிய கொடுமையை மறந்து விடாதே கண்ணு! இந்திக்கு வெண்சாமரம் வீசுகின்ற வீணர்களை மறந்து விடாதே கண்ணு

கண்:— அப்பாவைக் கொன்றவர்கள் கொடியவர்கள்-அடக்கு முறை வெறியர்கள்-அதை ஒத்துக் கொள்கிறேன் ஆனால்...இந்திதான் இந்தியாவின் பொது மொழியாக ஒரே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற நல்ல கருத்தை எதிர்ப்பது எனக்குப் பிடிக்க வில்லையம்மா; பிடிக்க வில்லை!...

காவேரி:— இந்தி வந்தால் தமிழ் கெடும்-தமிழர் வாழ்வு கெடும்...

கண்:— எப்படியம்மா கெடும்?..யாரோபோடுகிற காட்டுக் கூச்சல் அது!...

காவே:— காட்டுக் கூச்சல் அல்ல!... எதிர்காலத்திற்குத் தரும் எச்சரிக்கை...

கண்:— என்னால் ஒப்புக் கொள்ள முடியாது! இந்தி வந்தால் எப்படித் தமிழ் கெடும்-தமிழர் வாழ்வு கெடும் என்று சொல்லுங்கள்!

காவேரி:— கண்ணு!...பாலிலே உப்புக் கலந்தால் பால் முறிந்து போய் கெட்டு விடும் என்றுதான் எனக்குத் தெரியுமே தவிர...எப்படிக் கெட்டுவிடும் — ஏன் கெட்டுவிடும்—என்ற ஆராய்ச்சி எல்லாம் எனக்குத் தெரியாது...அது தெரியாத காரணத்தாலேயே உப்புப் போட்டால் பால் கெட்டுவிடும் என்ற உண்மை மறைந்து விடுமா?



காவே:-கண்ணு! புயல் வரப்போகிறது கடல் குமுறப்போகிறது--உடனே வீடு கூரைக்காலி செய்யுங்கள் என்று எச்சரிக்கை விட்ட பிறகும் வீட்டை விட்டு வெளியேறத் தயங்குகிற மீனவனுக்கும் உனக்கும் வித்தியாசமேஇல்லை!...

கண்:-அம்மா! என் கூரைக் குடிப்பாதிர்கள்!...எனக்குஎதுவுமே விளங்கவில்லை!..

காவே:- விளங்க வைக்கும் ஆற்றலும் எனக்கு முழுமையாக இல்லை... கண்ணு! உன் கண்களைத் திறக்கவைக்கும் கருத்து விளக்கம் பெற அண்ணுவின் 'காஞ்சி' வட்டைப் படி!... கழகத்து நம் நாட்டைப் படி!...

கண்:- அய்யோ! காங்கிரஸ்கான் கழகப் பத்திரிகையைக்கையால் தொடுவதா? பாபம்! பாபம்!...

காவேரி:- பத்திரிகை வேண்டாம்-- அவர்கள்பேச்சையாவது கேள்!..

கண்:-ஹா! இதுகாங்கிரஸ் காது; கழகத்துப்பேச்சைக்கேட்காது!...

காவே:— சட்டசபையிலே கழகத்துப் பேச்சைக் காங்கிரஸ் காரங்க கேட்கவில்லையா?..

கண்:— அப்படியே கெடுவதாக இருந்தாலும்..காங்கிரசில் இருந்து கொண்டே அதைத் தடுக்க முடியாதா? விடுதலை வீரர்கள் கட்டிய தியாகக் கோட்டையில் இருந்து கொண்டே மக்களின் மொழி காக்கவும்--பசியைப் போக்கவும் பாடுபட வேண்டுமே தவிர அதிலிருந்து வெளியேறி விடுவது நல்லதல்ல!

கண்:—வேற வழியில்லே; கேட்கிருங்க!.... அதற்காக வெளியில எழுந்து ஓடவா முடியும்?


(எழுகிறான்)

காவே:—கண்ணு! எங்க போறே?...

கண்:--வர்ரேம்மா?...(போகிறான்)

(காவேரி, கணவன் படத்திடம் சென்று)

காவே:--நீங்கள் சிந்திய ரத்தம் கூட



உங்கள் மகனை நல்வழிச்சுத் திருப்பாதுபோலிருக்கே....

(திரை)

காட்சி 21.

இடம்: திரவியம்பிள்ளை வீடு.

(மரகதம், கழகப் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டிருக்கிறாள்...தசாவதாரமும், கண்ணனும் வருகிறார்கள். பாட்டைக் கவனிக்கிறார்கள்.)

மரக:--யார்...

தசா:--மரகதம்....இவர்தான் கண்ணன். கடமை வீரர் கண்ணன்.....கர்மவீரர் கண்ணன்.....காங்கிரஸ் மகாசபையின் பிரங்கி! பிரச்சார பீரங்கி! கண்ணு.... இதுதான் மரகதம் -- முதலாளி அய்யாட மகள்....அப்பாவுக்குப் பொண்ணு நேர் எகன்ஸ்ட்டு!..... டி. எம். கே..... நீ முதல்ல 'கேன்வாஸ்' பண்ணவேண்டியது இந்த ஓட்டுத்தான்.....பேசிகிட்டு இரு...அப்மா.....பாத்துக்க.....நான் போயி...அய்யா மில்லிலல இருப்பாரு இப்பவே கூப்பிட்டுட்டு வந்துடுறேன்..

கண்:--சீக்கிரம் வந்துடுங்க...

தசா:--ஓ...இதோ வர்ரேன்....

(போகிறார்)

மரக:--உட்காருங்க..

கண்:--பரவாயில்லை...

மரக:--ஏதாவது சாப்பிடுறீங்களா?...

கண்:--வேண்டாம்...

மரக:--அப்பா வர்ரவரையிலும் சும்மா இருக்கிறதை ஏதாவது படிச்சுகிட்டு இருங்களேன்.....

கண்:--பரவாயில்லை...

(மரகதம், "நண்பர்கள் சேட்பதற்கு" என்றநூலைக் கொண்டு வந்து தருகிறாள்...)

கண்:--என்ன புத்தகம்?..... "நண்பர்கள் சேட்பதற்கு" எழுதியவர் அண்ணாதுரை.....ஆ!....இந்தப் புத்தகமா?...

(உதறியெறிந்து—துள்ளிக்குதிக்கிறான்...)

மரக:--ஏன்...? ஏன்...? தேள்கீள் இருந்துதா? புத்தகத்திலா?...கொட்டிட்டுதா? மருந்து போடவா?....

கண்:--இந்தத் தி. மு. க. குறும்பு மாத்திரம் போகாதே!..... தேளுமில்லை ஒண்ணுமில்லை...

மரக:--அப்புறம் ஏன் புத்தகத்தைக் கீழே போட்டீங்க.. துள்ளிக்குதிச்சிங்க?

கண்:--நான் தி. மு. க. புத்தகங்களைப்படிக்கிறதே இல்லை...

மரக:--சரி.....திருக்குறள் படிச்சிருக்கீங்களா?...திருவள்ளுவர் எழுதிய திருக்குறள்?...

கண்:-ஏன் அவர் என்ன டி. எம்.கே. லீடரா?...திருக்குறள் நிறைய படிச்சிருக்கேன்...ஏன் அதைக்கேக்கிறே?

மரக:-"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றகுறளைப் படிச்சிருக்கீங்களா?

கண்:- படிச்சிருக்கேன்...

மரக:-அதற்கு என்ன அர்த்தம்...

கண்;-எந்தக் கருத்தை யார், யார் சொல்லக் கேட்டாலும் அந்தக் கருத்தினுடைய உண்மையைப் பகுத்து அறிவதுதான் அறிவு!...

மரக:-அப்படியிருக்கும்போது.....அண்ணு சொன்னு கேட்கமாட்டேன்...அவர் எழுதினு படிக்கமாட்டேன்...அப்படின்னு முரட்டுத்தனமா பேசுவது வள்ளுவர் குறளுக்கே முரணுன வாதமல்லவா?

கண்:- சரி... அதிலே என்னதான் எழுதியிருக்கு; சொல்லு பார்க்கலாம்...

மரக:- சொல்லுகிறேன்....

(புத்தகத்தை எடுத்து—கம்பீரமாக)

தி. மு. க. உழைப்பின் உருவம்!

தி. மு. க. பல தியாகிகளின் குருதிகொட்டப்பட்டுக் கட்டப்பட்ட பாசறை!

தி. மு. க. காங்கிரஸ் ஏதேச்சாதிகாரத்தை எதிர்த்நிற்கும் பார்முகம்.

தி. மு. க. முப்பத்து நாலு லட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்ற கட்சி.

தி. மு. க. தமிழகச் சட்டமன்றத்தில் தனிப் பெரும் எதிர்க் கட்சி.

தி. மு. க. நாள் தவறாமல் மக்கள் தொடர்பு கொண்—ஜன நாயக அமைப்பு.

தி. மு. க. வரும் தேர்தலில் ஆளுங்கட்சியாக வளரக்கூடியது என அறிவாளர் கூறிடும் நிலைபெற்றுள்ள அறமன்றம்.

தி. மு. க. அழிக்கப்பட்டுவிட்டால், மக்களாட்சி முறைக்கே பேரிடி ஏற்பட்டு விடும்.

தி. மு. க. தொடர்ந்து பணியாற்றினால் மட்டுமே மொழிகாத்திட, வளம்பெற்றிட, புதுவாழ்வு கண்டிட முடியும்...

இதெல்லாம் கூறுகிறது இந்த எழுச்சி ஏடு...

கண்:- உங்களைப் பத்தியே சொல்லியிருக்கா! எங்களைப் பற்றி ஒண்ணும் இல்லியா?...

மரக:- உங்களைப் பற்றி நிறைய இருக்கு.. இதா...படியுங்கள்—

(புத்தகத்தை அவன் கையில் தந்து..... ஏட்டைப் புரட்டிக்காட்டி)


"காங்கிரசாட்சி ஏதேச்சாதிகாரப் போக்கில் நடந்துகொள்கிறது...எப்படி நடந்து கொண்டாலும் தட்டிக் கேட்பவர் இல்லை என்ற துணிவு பெற்று விட்டிருக்கிறதும்...நீங்களே படிங்க...

(அவன் மேலே தொடர்ந்து படிக்கிறான்)

(படித்தல்)

கண்:-காங்கிரசாட்சி பொதுவாக மக்களுக்குப் பயன்படும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ள சமுதாய நலத்





திட்ட வசதிகளை, கட்சி விளம்பரத்திற்கே பயன்படுத்திக்கொள்கிறது—காங்கிரசாட்சி, விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக உள்ள கடன், மானியம், ஏர், எருது, உரம் போன்ற வசதிகளை காங்கிரஸ்கட்சியினர் மட்டுமே சுலபமாகப் பெறக் கூடிய விதமான நடைமுறையைப் புகுத்திவிட்டிருக்கிறது...

காங்கிரசாட்சி, தொழில்கள் துவக்க அனுமதி தருவதிலே கூடக் கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்கிறது...

காங்கிரசாட்சி, கூட்டுறவுத்துறை எனும் தூய்மையான அமைப்பைக் கூடக் கட்சிச் சதுரங்கக் காய்களாக்கி விட்டிருக்கிறது. காங்கிரசாட்சி, தொழில் வளத்தைப் பெருக்கும் சாக்கிலே, முதலாளித்துவ முறையை வலுவுள்ளதாக்கி விட்டது.

காங்கிரசாட்சி, நிலப் பிரபு முறையை ஒழிக்கச் சட்டம் இயற்றப்பட்ட பிறகும், பலவிதமான விலக்குகள் அளித்து காங்கிரஸ் கட்சிக்கு வேண்டியவர்களைப் பிரபுக்களாகவே இருக்க வழி செய்து கொடுத்திருக்கிறது.

காங்கிரசாட்சி, முதலாளிகள் பிரபுக்கள் போதாதென்று வியாபாரத் துறையில் லைசென்ஸ், பர்மிட் முறைகளைப் புகுத்திப் பலரைத் திடீர்ப் பணக்காரர்களாக்கி, அவர்களைக் கட்சியை ஊட்டி வளர்ப்போராக ஆக்கிக்கொள்கிறது.

காங்கிரசாட்சி, பெரிய முதலாளிகள் செலுத்த வேண்டிய வருமானவரி மிகப் பெரிய அளவு ஏமாற்றப்படுவதைக் கண்டும் காணாதது போல் இருந்து விடுவதன் மூலம் அந்த முதலாளிகளின் மோசடிக்கு உடந்தையாகி விடுகிறது.

காங்கிரசாட்சி, கள்ள மார்க்கெட்டும் கொள்ளை லாபமும் இருப்பதை அறிந்தும், அந்தக் கேடுகளை ஒழித்திட வழி வகுக்காமல் அதனையும் தன் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

காங்கிரசாட்சி, கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டியும் உணவு உற்பத்தியில் போதுமான நிலையைப் பெற முடியாமல் இருந்து வருகிறது.

காங்கிரசாட்சி, செல்வவான்களுக்குப் போடப்படும் நேர் முக வரியைவிட, மிக அதிகமான அளவுக்கு ஏழை நடுத்தர மக்களைப் பாதிக்கும் மறைமுக வரியைச் சுமத்திக் கொடுமை செய்கிறது.

காங்கிரசாட்சி, உழவர்கள் உரிமை கேட்கும் போதும்—தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்கும் போதும் சாதாரண அலுவலர்கள் தமது குறையைக் கூறும்படி

கோரும் போதும் சீறி விழுந்து அவர்களை அடக்கி, முதலாளிக்குப் பக்கத் துணையாக நிற்கிறது—

காங்கிரசாட்சி, ஏழை நடுத்தர மக்களை வேதனைக்குள்ளாக்கும்.

கண்:-- (படித்தல்) விலைவாசி ஏற்றத்தைப் போக்கத் துணி வான முயற்சியை மேற்கொள்ள மறுக்கிறது.

காங்கிரசாட்சி, வெளி நாட்டு மூதலாளிகளுக்கு இங்கு இடங்கொடுத்து வளரவிடுவதின் மூலம், பெரிய தார் எதிர்கால ஆபத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது—

காங்கிரசாட்சி, கட்சி வளருவதற்காகச் சமதர்மத்தை ஏற் றுக்கொள்ள முடியாதவர்களைக் கட்சியில் சேர்த்துக் கொண்டு ஜனநாயகத்தைப் பாழ்படுத்துகிறது.

ஆட்சி நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள காங் கிரஸ் கட்சியில் தியாகப் பரம்பரை வெகுவாகக்குறைந்து போய் கொள்கை இல்லாதவர்களும், சுயநலச் சுரண்டல் காரரும், காங்கிரசாராகிக் கட்சியைக் கைப்பற்றி, அதன் மூலம் நிர்வாகத்தைத் தம் கைப்பாவை ஆக்கிக் கொள்ள இடம் கொடுத்துவிட்டிருக்கிறது...

(குமுறலுடன்)

கண்:- உண்மை—உண்மை— நூற்றுக்கு நூறு உண்மை...

(மேலும் படித்தல்)

காங்கிரசாட்சி, இந்தி ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டி மற்ற மொழிக்காரர்களை மட்டந்தட்ட முனைந்து நிற்கிறது.....

மரகதம்! எல்லாம் சரி....இத்த மொழிக்கொள்கையில்தான் எனக்குக் கருத்து வேறுபாடு...

மரக:— என்ன?

கண்:— இந்தியாவுக்கென்று ஒரு தேசிய மொழி வேண் டாமா?

மரக:— ஒன்றென்ன; 14 மொழிகள் இருக்கின்றனவே!...

கண்:— எல்லா மொழி பேசும் மக்களையும் இணைக்கும் பொது மொழி-இணைப்பு மொழி-வேண்டாமா?


மரக:— இந்தியாவிலுள்ளவர்களை மட்டுமல்ல; உலகத்தி லுள்ளவர்களையெல்லாம் இணைத்திடும் பொது மொழி யாக ஆங்கிலம் இருக்கிறதே போதாதா? பூனை போக ஒரு வழியும், அதன் குட்டி போக ஒரு வழியுமா தேவை! ஒரே வழியில் இரண்டும் போகலாமே!

கண்:— வட இந்தியாவில் வேலை செய்யப் போக வேண்டு மென்றால்...இந்தியின் துணை வேண்டாமா?

மரக:— வட இந்தியாமுழுதும் இந்தி இல்லை. வங்காளத் துக்குச் சென்றால் வங்காளி...பஞ்சாபுக்குச் சென்றால் பஞ்சாபி...ஒரிசாவுக்கு சென்றால் ஒரியா...மகாராஷ்டி ரத்துக்குச் சென்றால் மராட்டி அந்த மாநிலங்களின் தொடர்புக்கும்--வெளி நாடுகளின் தொடர்புக்கும் ஆங் கிலம் போதும்...இந்தி வேறு தேவையில்லை...

கண்:- ஆங்கிலம் அந்நிய மொழியல்லவா?

மரக:- பல்வேறு கலாச்சாரங்கள்-பழக்க வழக்கங்கள் -மொழிகள் இருக்கும் நாட்டில்....ஒரு மொழிக்கார னுக்கு மற்ற மொழி அந்நிய மொழிதான்...ஒன்றை யொன்று ஆதிக்கம் செலுத்த யார்தான் விரும்ப முடி யும்?... அதனால்தான் பதினாறு தேசிய மொழிகளும்ஆட்சி



மொழிகளாகட்டும்-அதுவரையில் ஆங்கிலம் நீடிக்கட்டும்என்கிறேம்-

கண்:- என்ன இருந்தாலும்....அந்நிய நாட்டு மொழி....

மரக:- வேடிக்கை....அந்நிய நாட்டு உணவு! அந்நிய நாட்டுக் கடன்! அந்நிய நாட்டுத் தொழில் உதவி! அந்நிய நாட்டு நிபுணர்! அந்நிய நாட்டு மூலதனம்! அந்நிய நாட்டார் தலையிட்டு ரூபாய் மதிப்புக் குறைப்பு! இதிலெல்லாம் வராத வெட்கம்....உலகப் பொது மொழியான ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பதில் தானு வந்து விடும்!...

கண்:- இந்தியால் தமிழ் கெடாது என்று காமராசர் கூறியிருக்கிறாரே...

மரக:- அவர் பேசுகிற தமிழ் கெடாது! ஏனெனில் அது ஏற்கனவே கெட வேண்டிய அளவுக்குக் கெட்டுப்போய்விட்டது...நான் சொல்வது...சிலப்பதிகாரத் தமிழ்-சிந்தாமணித் தமிழ்-திருக்குறள் தமிழ்-மணிமேகலைத் தமிழ்-அகம்-புறம்-கலித்தொகை, கலிங்கத்துப்பரணி, ஆகிய இந்தத் தமிழ் கெடும்-தமிழர், மூன்றாந் தரமக்களாகி, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட உத்தரப் பிரதேசத்து மக்களுக்கு அடிமைகளாவார்கள்...இத்தத் தீமையைத் தடுக்கத்தான்...தீக்குளித்துச் செத்தார்கள்...சுடப்பட்டுப் பலர் மாண்டார்கள்...பிஞ்சுக் குழந்தைகளின் பிராணன் பறிக்கப்பட்டது...மாணவமணிகள் ரத்தத் தடாகத்திலே மலர்களாக மிதந்தார்கள். ஏன்; உங்கள் ஆருயிர் அன்னையின் பூவும் பொட்டும் புனித மிகு மாங்கல்யமும் போனது எதனால்? இந்தியினால்! இந்தியினால்!! தமிழ் நாட்டில் தாவி வந்த அந்த மந்தியினால்! மந்தியினால்!! இந்தி! அது தமிழர் வாழ்வை சுட்டுப் பொசுக்கும் செந் தீ! தமிழை அழிக்க வரும் பெருந் தீ!...அதை அணைப்பது தமிழன் கடமை!...இனியும் வாளா விருப்பது...மடமை! மடமை!!

கண்:-மரகதம்! போதும்...போதும்...என் கண்களைத் திறந்து விட்டாய்...மரகதம்!

மரக:- உண்மையாகவா?...

கண்:- ஆமாம்...என் பொது வாழ்க்கையிலே ஏற்பட்ட தொய்வு இன்றோடு முடிவு பெறுகிறது...இந்தக் கணம் முதல் மறுமலர்ச்சி பெற்ற உள்ளத்தோடும்-



புதிய உற்சாகத்தோடும்-திராவிட முன் னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காக உழைப்பேன்...மரகதம்! நீதான் என் வாழ்வுக்கு வழிகாட்டிய சகோதரி...என் தாய் காவேரிக்கு இரண்டு பிள்ளைகள்... நான் மூத்தவன்-நீ இளையவள்.

மரக:- இதைக் கேள்விப்பட்டால் அம்மா ரொம்ப மகிழ்ச்சி அடைவார்கள்... அடேடே...அப்பாவும் தசாவதாரமும் வர் ராங்க...அண்ணு! ஒரு ரகசியம் சொல் றேன்...அது மாதிரி நடந்துக்கிங்க...

(காதில் ஏதோ சொல்லி விட்டுப்போகிறாள்)

தசாவ:- என்ன கண்ணு...ரொம்ப நேரமா யிட்டுது மன்னிச்சுக்க...

கண்:- பரவாயில்லை..,

திரவிய:- கண்ணு!...எல்லாம் தசாவதாரம் சொன்னார்....ரொம்ப சந்தோஷம்... அடுத்தவாரம் காங்கிரஸ் ஜனநாயக சோஷலிச மாநாடு...என் தலைமையில் தான் நடக்குது...தசாவதாரம்தான்... திறப்பாளர்...நீதான் பிரதம பேச்சாளி... அதுதான் நம்பதேர்தல் வேலை துவஜாரோ கணம் மாதிரி...எல்லா வேலையும் நீதான் கவனிக்கணும்...பணம் போதுமா... மேலும் வேணுமா?...

கண்:- அப்பறம் வாங்கிக்கிறேங்க...

திரவி;- சரி...உன்னை நம்பித்தான தேர் தல்ல நிக்கிறேன்...மகாநாடு...வெற்றி கரமா நடக்க...

கண்;- நடக்கும் பாருங்க...அண்ணையி லிருந்து ஒரு பெரிய திருப்பமே ஏற்படும் தேர்தலில்

திரவி;- ஏற்படட்டும் -- ஏற்படட்டும்-- திருப்பம் ஏற்படட்டும்-ஓய் தசாவ தாரம்...கண்ணனைக்கவனியும்...சாப்பாடு ரெடியாகட்டும்...மரகதம்! மரகதம்!!

(உள்ளே போகிறார்)

தசாவ;- என்ன கண்ணு? மரகதம் மனசை மாத்துனியா?...

கண்;- மனசு மாறிட்டுது!

(இறைந்து கிடக்கும் மலர்களை எடுத்து வியப்புடன்)

தசாவ;- ஏம்ப்பா...என்னை இது...பூக்கள் இறைஞ்சு கிடக்கு...

கண்;- உங்கள் சந்தேகப் புத்தி உங்களை விட்டுப் போகாதே...அக்காள் தங்கை அம்மா மகள் இதுக்கெல்லாம் வித்தியா சம் தெரிஞ்சுக்க அய்யா! வாயில் வந்த படி பேசாதே!...வர்றேன்...(போகிறான்)

தசாவ;- எப்பா! மகாநாடு...மகாநாடு...

(திரை)

காட்சி, இடம் : ரோடு

(ஒலிபெருக்கி அறிவிப்பு...)

"காங்கிரஸ் ஜனநாயக சோஷலிச மாநாடு ...தீவிரத் தியாகி திரவியம் பிள்ளை தலை மையில்...சமதர்ம ஜோதி தசாவதாரம் திறந்து வைப்பார்...தேர்தல் பிரச்சா ரத்தை பிரபல பேச்சாளி கண்ணன் தொடங்கி வைப்பார்...

ஜனநாயக சோஷலிச மாநாடு...ஊர்வலத் தில் ஆயிரம் பஸ்கள்...ஐநூறு லாரிகள்... இரண்டாயிரம் மோட்டார்கள்...அணி வகுத்து வரும்...

காண வாரீர் காங்கிரஸ் சோஷலிச மாநாடு...சோஷலிச மாநாடு..."

(ஒலி நின்றதும்...தசாவதாரம்..கம்பீரமாக அந்தப் பக்கம் வருகிறார்....பின்னால் ஒரு ஆள் காங்கிரஸ் கொடிபிடித்து வருகிறான்.. தசாவதாரம் கழுத்தில் மாலையிருக்கிறது...)

தசா:- ஆகா! மகாநாட்டுத் திறப்பாளரை வரவேற்க ரயில்வே ஸ்டேஷனுக்கே வந்து விட்டீர்களே..... நீங்கமாத்திரம்தான் வந்தீங்களா.....வேற ஒருத்தரும் வல்லியா?...

கொடிக்காரர்:- நிறையப்பேரு வந்தாங்க.. எல்லாரும்...அந்த சினிமா நடிகையை வர வேற்கப் போய்ட்டாங்க...

தசா:- போகட்டும்...போகட்டும்... தலை வரை வரவேற்கவாவது ஒரு நாலுபேர் போங்க....

கொடி:- நாலு பேரு போதுங்களா?...

தசா;- கூட ஒரு ஆள் போங்களேன்...

(எதிரே ஒரு ஆள் மேலே அண்ணாந்துக் தாவியபடி விடாதே விடாதே என்று ஓடி வந்து, தசாவதாரத்தின்மீது விழுகிறான். அவன் பேர் ராமு.)

தசா:- ஏ, ஏ, என்னப்பா மேல பார்த்து கிட்டே வந்து ஆள்மேல விழுறே?..... ஆங்?

ராமு:- ஓட்டல்...தோசை கொண்டாந்து வச்சான்..மேலே பேன் ஐ போட்டது தான் தாமதம்...பறக்க ஆரம்பிச்சிட்டுது தோசை....அதைப் பிடிக்கத்தான் ஓடு றேன்...



தசா:- கவலைப்படாதே...நம்ப சோஷலிச மாநாடு முடியட்டும்.....தோசை யெல்லாம் பறக்காது....அப்புறம் மனுஷன்தான் பறப்பான்; வானவெளிக்கு.....ராக் கெட்டில்!...

(கோவிந்தன், ரேஷன் கார்டுகளைத் தின்றுகொண்டு வருகிறான்.)

தசாவ: இது என்னப்பா....அட்டையைத் தின்னுகிட்டு வர்ர?...

கோவி:- அட்டையா இது?...ரேஷன் கார்டுய்யா!...கார்டை கொடுத்துட்டாங்க...அரிசியும் இல்லை...ஒரு மண்ணும் இல்லை கார்டையாவது தின்போம்னு திங்கிறேன்...

தசா:- ஏ..ஏ..பாவி! எல்லாம் மகாநாட்டுக்கு வாங்கப்பா; சோஷலிசம் வரப்போவுது...அப்புறம் கார்டை திங்க வேண்டியதில்லை.

கோ:- பிறகென்ன எலியைத் திங்கலாமோ?....அதுக்கு அப்புறம் பூனையைத்திங்கச் சொல்லுவே!

தசா:- அடஅசடே!...எலியைத் தின்னு பூனையைத்திங்காம இருக்கலாமோ?.....எலிமாத்திரம் வயத்துக்குள்ளே போனு...அங்கபோயி திருட ஆரம்பிச்சிடும்...அதை விரட்டிப் பிடிக்கப் பூனையை அனுப்ப வேண்டாமோ?...எலியைவிரட்டப் பூனை...பூனையை விரட்ட நாய்.....நாயை விரட்ட மனுஷன்...சரி...சரி...வாங்க எல்லாம் மகாநாட்டுக்கு.....வாங்க.....வாங்க.....

(பரதேசியைத் தரகன் இழுத்துப் போதல்)

தசாவ:- ஏ, ஏ, எங்கப்பா அந்த பரதேசிக்கிழவனை இழுத்துக்கிட்டு போறே...

தரகன்:- சும்மா இல்லை...மூப்பது ரூபா கொடுத்திருக்கிறேன.....குடும்பக்கட்டுப்பாடு ஆபரேஷனுக்காக.....

தசா:- ஆகா, அறுபது வயதுப் பரதேசி..குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்கிறான்.....எல்லோரும் வாருங்கள் மகாநாட்டுக்கு, இந்தக் கண்காட்சியை மக்கள் பார்க்கட்டும்.. காங்கிரஸ் சோஷலிசத்தின் குடும்பக் கட்டுப்பாடு படி அழுலாகிறது பார்த்தீர்களா?...

(ஓடிவந்து..)

கிருஷ்ணன்:- அமுல்! அமுல்! அமுல் எங்கே கிடைக்கிறது...குழந்தை உணவு அமுல் எங்கே கிடைக்கிறது...சொல்லுங்கள்....

தசா: ஆங்..எங்க மகாநாட்டிலே கிடைக்குது...எல்லாரும் வாங்க...பரவாயில்லை; கூட்டம் ஒருமாதிரி சேர்ந்து போச்சு!

(போகிறார்கள்)

(திரை)

காட்சி 24.

மகாநாடு:

(திரவியம்பிள்ளை, தசாவதாரம், கண்ணன் ஆகியோரும் கூட்டத்தினரும்)

சா:- மகாஜனங்களே! இப்போது நம்முடைய காங்கிரஸ் ஜனநாயக சோஷலிசமகாநாட்டைத் திறந்துவைப்பதற்காகநான் முன்வந்து நிற்கிறேன். நம்முடைய காங்கிரஸ் மகாநாடு என்றாலே ஜனங்கள் அதிகமாக வருவதில்லை.....இப்போது ஜனங்களைக் கூட்ட வேறு ஏற்பாடெல்லாம் செய்திருக்கிறோம்.....ஜனங்கள் அதிகமாக வரவில்லை என்பதற்காக காங்கிரசுக்குப் பலமில்லை-மதிப்பில்லை-என்று கூறிவிட முடியுமா? ஜனங்கள் காங்கிரசைப் பற்றிய செய்திகளை எல்லாம் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொள்கிறார்கள்...அதனால்தான் பேச்சுக் கேட்க வருவதில்லை. நாம்ப இங்கே கொச்சையாப் பேசுறதைக்கூட பத்திரிக்கைக்காரன் ஒழுங்கா இலக்கணசுத்தமா போட்டுடுறான்...நாட்ல படிக்கத் தெரிஞ்சவா கொஞ்சம்தானே...மிச்சமிருக்கிற படிக்காதவா வரக்கூடாதோன்னுகேட்கலாம்...படிக்காதவுங்க, படிச்சவுங்க கிட்டக் கேட்டுத் தெரிஞ்சிக்கிறுங்க..இதான் சோஷலிசம்., இந்த சோஷலிசத்தை இப்ப நான் 'கட்' பண்ணி...இல்லை...இல்லை...சோஷலிச மகாநாட்டை...திறந்து வைத்து...என்னுடைய ஆசனத்தில் நான் அமர்கிறேன்.....அடுத்து.....நீண்டகாலமாக...காங்கிரசில் இருந்து உழைத்து வரும்...ஏழைபங்காளர்...சோஷலிச வழிகாட்டி... நமது தீரர் திரவியம் பிள்ளை அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேருரையாற்றுவார்கள்...

(ஆர்ப்பாட்டமாக எழுந்து திரவியம்பிள்ளை வருகிறார். மாலை சூட்டப்படுகிறது)

திரவியம்:— மகாஜனங்களே! சகோதர சகோதரிகளே! ஜனநாயக சோஷலிசத்திற்கு முக்கியமான தேவை...திட்டம்...ஐந்தாண்டுத் திட்டம். திட்டம்...இல்லா விட்டால் நம்மைப் போன்றவர்கள் வாழ முடியாது...ஐந்து என்பது இந்தியாவுக்கே ஒரு தனியான நம்பர்! பஞ்ச பூதம் ஐந்து-ஐம்புலன் ஐந்து! பஞ்ச பாண்டவர் ஐந்து-நேருவின் பஞ்ச சீலம் ஐந்து. எல்லாத்தையும் விடவிசேஷம்...மனித னுடைய கை கால்களிலே விரல்கள் அஞ்சு...


சா:— மனித அறிவே கூட அஞ்சு தானுங்களே...

திர:— யோவ்...அது நாலுய்யா...ஆதலாலே மகா ஜனங்களே! நம்ப நாட்டுக்குப் போடப் பட்ட திட்டமும் அஞ்சாண்டுத் திட்டம்...

இந்த ஐந்தாண்டுத் திட்டம் பணக்காரன்வீட்டுக் கதவைத் தான் தட்டுச்சு...ஏழைவீட்டுக் கதவைத் தட்டவே...அப்படின்னு சில பேரு பேசுராங்க...ஏழை வீட்டுக்குக் கதவு ஏது; இருந்தாவுல்ல தட்டுறதுக்கு!...

பணக்காரன் வாழ்ந்தாதான் ஏழை வாழமுடியும்...ஒரு உதாரணம் சொல்றேன்... ஆத்துலதண்ணீ, நிறையப் போனுத்தானே வாய்க்காலில் தண்ணி வரும்...பணக்காரன் ஆறு மாதிரி...ஏழை, வாய்க்கால் மாதிரி.....

சோஷலிசத்தைக் கேட்டுட்டு முதலாளிகளோ நிலப்பிரபுக்களோ பயப்படவேண்டியதில்லை. அதை விளக்கிப் பயத்தைப் போக்கத்தான் இந்த மகாநாடு...இதில...





என்னவிட விளக்கமா.....நம்ப கண்ணன் பேச இருக்கிறாரு...அவர்...இனிமே தீவிர சோஷலிசம் எல்லாம் பேசுறதை விட்டுட்டு...நம்ப ளோடசேர்ந்து காங்கிரஸ் வெற்றிக்கு உழைக்கப் போராரு...நம்ப தலைவர் காமராசரே; தர்மகர்த்தா சோஷலிசம் போதும்னு சொல்லிட்டாரே ...பணக்காரர்கள்...அதாவது நாங்கள்ளாம் தர்மகர்த்தா மாதிரி நடந்துக்கணும்...தர்மகர்த்தா, எப்படி நடப்பாங்கன்னு உங்களுக்குத் தெரியும்.....

பணக்காரனை ஒழிப்போம்னு சொல்லலாமே தவிர...முடியுமா?..... "பணக்காரர்களே! கொஞ்சம் விட்டுக் கொடுங்க" அப்படின்னு கெஞ்சிக் கேக்கிறதுதான் காங்கிரஸ் சோஷலிசம்: நமக்கேத்த சோஷலிசம்!..இல்லேன்னு பட்டக்காரரு-செட்டி நாட்டாரு-பொள்ளாச்சியாரு-வடபாதிமங்கலத்தாரு வாண்டையாரு — வகீசனாரு — மூப்பனாரு — உடையாரு — இப்படிப் பெரிய பெரிய கோடீஸ்வரர்கள், லட்சாதிபதிகள், பஸ் முதலாளிகள், ஆலை அரசர்கள், நிலப்பிரபுக்கள் எல்லாம் காங்கிரசில் இருப்பாங்களா?

எது எப்படியிருந்தாலும் ஏழைகளுக்காகப் பாடுபடுகிற ஒரே கட்சி காங்கிரஸ்தான்.....

இப்பக் கூட அஞ்சாறு பெரிய கம்பெனிகளுக்கு ஒரு கோடி ரூபாய்வரையில் நிலவரியை ரத்துச் பண்ணியிருக்கிறோம்...

விவசாயிகளுக்கு நில வரியை ரத்துப் பண்ணக் கூடாதான்னு கேப்பான்...மனுஷனுக்கா வரி? நிலத்துக்குத்தானே? அதைப் போயி ரத்துப்பண்ணச்சொல்லி மனுஷன் கேக்கிறது நியாயமா?...

விலைவாசி ஏறிட்டு துன்னு சொன்னா ...என்ன அர்த்தம்? மக்களுக்கு வாங்குற சக்தி அதிகமாயிட்டுது! அரிசி கிடைக்கலே! ஒரே கூச்சல்! எப்படிக் கிடைக்கும்? நாட்ல; வருஷத்துக்கு ஒரு கோடி பிள்ளை அதிகமாகப் பிறக்குது...

தசா:— அதே மாதிரி சாவுற கணக்கும் இருக்குல்லே!

திர:— அதை ஏன்ய்யா இப்ப சொல்றே?

தசா:— அதுக்கும் அரிசிச் செலவு இருக்கே...வாய்க் கரிசி

திரவி:— ஓ...அதுக்காகச் சொன்னியா? பரவாயில்லே. அப்புறம் பாருங்க...பஸ் தொழிலை தேசியமயமாக்கு— பாங்குகளை தேசிய மயமாக்கு—பஞ்சாலைகளைத் தேசியமயமாக்கு...அப்பத்தான் சோஷலிசங்கிறான்... முடியுமா? இப்பவே நம்ப சர்க்கார் நடத்துற பஸ் தொழிலிலே லட்சக் கணக்கிலே நஷ்டம்.

கேவலம், ஒருபால்பண்ணை மாதவரத்திலே! அதில 40 லட்சம் நஷ்டம் ...என்னமயம் வேண்டியிருக்கு...

பொதுவா... நம்ப எலக்ஷனுக்கு... ஒரு மந்திரம் மாதிரி சோஷலிசம் ... சோஷலிசம்னு? கருப்பா? சிவப்பா? பச்சையா? நீலமா?...காங்கிரஸ் சோஷலிசம் இருக்கே; அது ஒரு பாரிஜாதப்பூ!... அதை யாராலும் பறிக்க முடி

யாம இருந்துது...அதை ரொம்பபிரயாசைப்பட்டு பறிச் சிட்டு வந்தவர், காமராசர்! இதோ பாருங்க...அந்தப்பாரி ஜாதப்பூவை...உங்களுக்குக்காட்டுரேன்...

[ஒருவன் வெள்ளித் தட்டில் ஒரு பெரிய பூவுடன் வருகிறான்]

நிர:— பார்த்தீர்களா...பாரி ஜாதப்பூவை! காங்கிரஸ் சோஷலிசப் பூவை!... இதைப்பற்றி வர்ணிக்க எனக்குத் திறமையில்லை ...நாட்டுக்கே நறுமணம் வீசும் இந்தப் பாரிஜாதப்பூவைப் பற்றி இப்போது கண்ணன்பேசுவார்...

கண்:— (பூவை வாங்கிக்கொண்டு பேசுகிறான்)ஆகா!...பாரி ஜாதப் பூவே!...காங் கிரசிலேயள்ள கனதனவான்களுக் குக் கருணை காட்ட வந்த பாரிஜாதப் பூவே! ஏழை எளிய வர்களின் ரத்தத்தை எடுத்துச் சிவப்பு வர்ணம்பூசிக் கொண்ட பாரிஜாதப்பூவே!...

பாட்டாளிகளை—உழவர்களை — நெசவாளிகளை — நித்த நித்தம் வேலை செய்து ரத்தக்கண்ணீர்வடிப்பவர்களை கீழ் மட்டத்தில் வீழ்த்தி விட்டு, பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்கும் பாரிஜாதப்பூவே!

ஆலை அரசர்களை—ஜஸ்வர்யச் சீமான்களை—வட்டிக் கடை வேந்தர்களை—குட்டிக் குபேரர்களை இன்பபுரியில் மிதக்கவிடும் பாரிஜாதப் பூவே)

நிரவி:— (திகைப்புடன்)ஏ, ஏ . என்ன பேசுறே!...


கண்:— மார்க்ஸ் உயிரோடு இருந்தால் தொழிலாளிகளுக் குப் பாடுபடமாட்டார் முதலாளிகட்குத்தான் பாடுபடு வார்-ஆகவே எனக்கு சோசலிசத்தில் நம்பிக்கையில்லை என்று எஸ்.கே. படேல் அவர்களைப் பேச வைத்த பாரிஜா தப்பூவே! காங்கிரஸ் சோஷலிசத்தில் பொது த்துறையும் இருக்கும் தனியார்துறையும் இருக்கும் என்று கலப்பட சமதர்மம் உருவாக்கவைத்த பாரிஜாதப்பூவே! அரிசிமில்க ளைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று அன்றொருநாள் புவனேஸ்வரா மகாநாட்டில் போடப்பட்ட தீர்மானத் தைக்கூட காற்றிலே பறக்கவிட்ட பாரிஜாதப்பூவே! பாரா ளுமன்றத்தில் காங்கிரஸ் சார்பில் பதினஞ்சு மகாராஜாக்க ளைத் தேர்ந்தெடுத்திருக்கிற பாரிஜாதப்பூவே! வெள் ளாடை விழுங்காதே விட்டுவிடு என்று வேங்கையிடம் கெஞ்சும் முட்டாளைப் போல, "பணக்காரர்களே! ஏழை களுக்கு வீட்டுக்கொடுங்கள்" என்று அவர்கள் காலிலே வெட்க மில்லாமல் விழுகின்ற நிலையை ஏற்படுத்திய பாரி ஜாதப்பூவே!... நீ பளபளப்பிலேதான் பாரிஜாதப்பூ!பார் வைக்குத்தான்பாரிஜாதப்பூ!...


நீஉண்மையில்... ஊரையடித்து உலையில் போடுகின்ற வனை வாழவைத்து; உழைப்பவனை ஏமாற்றிஓட்டுப்பறிக் கிறகாகிதப்பூ! காகிதப்பூ!!

லட்சோப - லட்சம் விவசாயிகளுக்கு, தொழிலாளர்க ளுக்கு ஏழை நடுத்தர மக்களுக்கு, காங்கிரஸ் காட்டும் சோஷலிசம் வெறும் காகிதப்பூவேதான்.

காகிதபூ மணக்காது; காங்கிரஸ் சமதர்மம் கிடைக் காது!

புரிந்து கொள்ளுங்கள் நண்பர்களே! புரிந்து கொள்





ளுங்கள்.

புறப்படுங்கள், காங்கிரஸ் எனும் சிலந்திக் கூட்டை விட்டு! நான் வெளியேறி விட்டேன். இந்த வேஷக்கார சோஷலிசவாதிகளின் கூடாரத்திலி ருந்து வெளியேறி விட்டேன்.

நீங்களும் புறப்படுங்கள் ... உண்மையான சோஷலிச முகாம் ... அறிவொளிவீசும்அண்ணாவின் தலைமையில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம்தான்... வாரீர், வாரீர்!

காஞ்சிதப்பு!.....

மற்றவர்கள்:— மணக்காது!

கண்:-- காங்கிரஸ் சமதர்மம்

மற்:-- இனிக்காது!

(கூட்டம்கலைகிறது திரவியமும்தசாவதாரமும் கட்டிக் கொண்டுஅழுகிறார்கள்)

காட்சி 25

[விவசாயி, நெசவாளி, ஏனைய தொழிலாளர்களை சந்தித்துக் கண்ணன் பிரச்சாரம் செய்தல்...]

காட்சி 26

காவேரி வீடு

[காவேரி மரகதம்...இருக்கிறார்கள்.]

மரகதம்:-- எப்படியம்மா; நான் சொன்னதை நிறை வேற்றி விட்டேனு இல்லையா?...

காவேரி:-- மரகதம்! எனக்கொரு மகள் இல்லாத குறையை நீ போக்கி விட்டாய்...வீரத்தந்தையை இழந்து விட்ட கண்ணனுக்கு உன்னைப்போல ஒரு வீரத்தங்கை கிடைப்பதென்றால் அது அவன் செய்த பாக்கியந்தான்.

காவேரி:— அம்மா! கண்ணன் காங்கிரசை விட்டு வெளி யேறியது...காங்கிரஸ்காரர்களைவிட வேற சில பேருக்கு ரொம்ப ஆத்திரமா இருக்கும்மா!...

காவேரி:— என்ன செய்றது...உண்மையைச்சொல்றதுக்கு ஊருக்குப்பயந்தா முடியுமா?...கள்ள மார்க்கெட்காரன் கறுப்புச் சந்தைக்காரன் எல்லாருமே கண்ணனுக்கு விரோதிதான் — கண்ணனை அல்லது கழகமோ; தங்கள் புழைப்பிலே மண்ணைப்போடுதுன்னு; இப்படிப்பட்டவர் களுக்கு ஆத்திரம் வரத்தானே செய்யும்...!

(மாலா ஓடிவருகிறாள்)

மாலா:— அம்மா! அம்மா! மரகதம்! ஆபத்து! கண்ண னுக்கு ஆபத்து!...

காவேரி:— ஆ!

மாலா:— ஆ!...என்ன மாலா?

மாலா:— நம்ப ஊர்க் கோடி பாழடைஞ்ச மண்டபத்துக் குள்ளே நாலஞ்சு பேர் பேசுனது என் காதிலவிழுந்தது...ராத்திரி கண்ணன், கூட்டம் முடிச்சிட்டு திரும்பி வரும் போது கொலை செய்கிறதா திட்டம் போட்டிருக்காங்க...

காவேரி;— ஆ!...

மர:— ஒருத்தன் கையில துப்பாக்கியைக் கூட நான் பார்த்தேன்...என்னைப் பாத்துறபோராங்கண்ணு ஓடிவந்துட்டேன்...

காவே:— ஆ! கண்ணு!... மரகதம்...நான் என்ன செய்வேன்...

மரக:— பதரூதிங்கம்மா ... வாங்க அந்த இடத்துக்குப் போவோம்...
மாலா!...நீ போயி ... பக்கத்து போலீஸ் ஸ்டேஷன்ல தகவல் கொடு...

(மூவரும் புறப்படுகிறார்கள்)

காட்சி 27

பாழடைந்த மண்டபம்.

[கண்ணன் கொடியுடன் வருகிறான்...]

பயங்கரக் குரல்கள்:— டே, கண்ணு! நில்!

கண்:— யார்?

குரல்:— கொடியைக் கீழே போடு!...

கண்:— நான் குமரன் பரம்பரை—சின்னச் சாமி – சிவலிங்கம்—அரங்கநாதன்—வீரப்பன்—போன்ற சாவுக்கு அஞ்சாத வீரர்களின் வழி வந்த கழகத்தின் தொண்டன்...

குரல்:— ம்! கொடியைக் கீழே போடு!

கண்:— முதலில் உன் உத்தரவைக் குப்பையிலே போடு!

குரல்:— வேறு பக்கம்கள்ளக் கடத்தல்—கொள்ளை லாபம் கள்ள மார்க்கெட்டைக் கண்டித்துப்பேசமாட்டேன்என்றுசொல்; இல்லாவிட்டால்...கொலை!...கொலை!!!

கண்:— ஹ ஹ ஹா...ஓகோ...கள்ளமார்க்கெட்—கள்ளக் கடத்தல்...கொள்ளை லாபம்...கலப்படம்—கறுஞ்சந்தை—எல்லாவற்றுக்கும் பிரதிநிதிகளாக; நீங்கள் கொலைக் கருவியோடு வந்திருக்கிறீர்களா? அய்யா பெரியவர்களே! பரமபாதகர்களே! உங்களைக் காப்பாற்ற 'காகிதப்பூ' இருக்கிறது...அங்கே போங்கள்...

குரல்:— போகாதே நில்!...

குரல்:— கொடியைக்கீழேபோடு!...மண்டியிட்டு மன்னிப்புக் கேள்!...இல்லையேல்... உன் மார்பைத் துளைக்கும் துப்பாக்கிக் குண்டு!...வீணே சாகாதே!...

குரல்;— அநியாயமாகச் சாகாதே!...

குரல்:— சாகாதே!...

கண்:— ஹ ஹ ஹ! பைத்தியக்காரர்களே வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலிலே பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும் வீரர்களின் மண்டையோடுகளை முத்தமிட்டபடி பயணம்நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும்—அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு மூகாரி பாடாமல்—முதுகு காட்டாமல்—முகஞ்சுளிக்காமல் — முன்னேறு நீ முன்னேறு நீ என்று முரசொலித்து, எஞ்சிய வீரர்களை நெஞ்சுரங் கொள்ளச் செய்து. எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ, எதிரியின் கணை பாயுமோ? என்று சாவு முகட்டிலே விழுடிகளைக் கணக்குப் பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை என்ற போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும் மறந்து விடாமல், மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச் செண்டு, மங்கையின் இதழை விட சுவையானது என்ற மனோபலத்தோடு படையை நடத்திச் செல்பவனே பராக்ரமசாலி—பைந் தமிழன் என்ற பாசறைக் காவியத்தின் சிறப்புப் பாயிரத்தைப்படித்தவன் தான்நான். அதனால் சாவுக்கு அஞ்ச மாட்டேன்; ஆனால் காரணமில்லாமல் சாகமாட்டேன்...

குரல்:— அப்படியா?...ஹ ஹ ஹ..!

குரல்:— ஹ ஹ ஹ!...

குரல்:— சாவுக்குத் தயாராகிக் கொள்!

(காவேரி மரகதம் ஓடி வருகிறார்கள்)

காவேரி:— கண்ணு! கண்ணு!

கண்;— அம்மா!...

(துப்பாக்கி ஒலி கேட்கிறது)

கண்டுபிடியுங்கள்

1. மதியழகன் 2. அண்ணு
3. ஏ. கோவிந்தசாமி 4. என். வி. நடராசன்
5. சி. பி. சிற்றரசு 6. கருணாநிதி
7. அன்பழகன் 8. மனோகரன்
9. நாவலர்.

காவேரி:-- ஆ!

(கண்ணனை நோக்கி துப்பாக்கிக் குண்டு வெடிக்கும் போது காவேரி குறுக்கிடுகிறாள்)

[காவேரி பிணமாகச் சாய்கிறாள்...]

கண்:-- அம்மா!...

மரகம்:-- அம்மா! அம்மா!!

கண்:-- அம்மா! அம்மா!...போய்விட்டீர்களா அம்மா!...பொல்லாததை மறுத்துப் புனிதமானதை நிலை நாட்ட வேண்டுமென்று மகனுக்கு ஆணையிட்ட மறக்குலத் தாயே!...புறநானூற்றுப் பெருமாட்டி! உங்கள் உயிரைக் கொடுத்துஎன் உயிரைக் காப்பாற்றி மாதாவின் பெருமைக்கு மணிவிளக்கு ஏற்றி வைத்துவிட்டீர்கள்...ஆனால்; தாயைக் காப்பாற்ற முடியாத மகன் என்ற தீராத பழியை என் மீது சுமத்தி விட்டீர்களே; ஏன் தாயே; ஏன்?...

தாயே! தந்தையின் ரத்தம் தமிழ் வளர்க்கப் பயன்பட்டது...உங்கள்ரத்தம் தமிழ்ப் பகைவர்களை வெல்வதற்குப் பயன்படட்டும்! தமிழர் பெரும் படைக்கு உங்கள் செங்குருதி, வீரத்திலகமாகட்டும்!...வெற்றித் திலகமாகட்டும்!...

இந்த ரத்தச் சிகப்பு; செக்கர் வானத்துச் சிகப்பாகக் கீழ்த்திசையில் உதயசூரியன் புறப்படப் போவதை அறிவிக்கின்ற சிகப்பாக ஆகட்டும்!...

அம்மா! அம்மா!...

(காவேரியின் உடலில் வழியும் இரத்தத்தை எடுத்து கண்ணன் திலகமிட்டுச் சூளுரைக்கிறான்.)

(முற்றும்)

நாடகத்தில்—பங்கேற்பவர்கள்!

மு. கருணாநிதி—	கண்ணன்.
கே. பி. ராஜ்மோகன்—	அண்ணா - திரவியம்பிள்ளை
பி. சுருளிராஜன்—	தசாவதாரம்
ஆர். கதிரவன்—	செங்குட்டுவன் - எமன்
ஆர். ஆர். சாரதி—	நெசவாளி.ராஜகோபால்எம்.எல்சி
பொதுமுருகன்—	பரணர். தளபதி.
டி. ஜி. ராமச்சந்திரன்—	வில்லவன் கோதை
எம். கே. கிருஷ்ணமூர்த்தி—	காந்தி. பாடகர்
விரபத்திரன்—	அமைச்சர்.
வைத்தியநாதன்—	பலவேடங்கள்.
எஸ். ராஜாத்தி—	மரகதம்
என். எஸ். லீலா—	காவேரி
என். சி. ஆர். மனோன்மணி—	மாலா. வேண்மாள் நெசவாளியின் மனைவி

அஞ்சுகம் பதிப்பகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதியால் முரசொலி அச்சகத்தில் 4-128, மவுண்ட்ரோடு, சென்னை 6-ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.
துணை ஆசிரியர் : மாறன். எம். ஏ.